கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...




கை-கால் முளைத்த கனவு!

KALKI 20.07.2008 ரூ.10.00 96 பக்கங்கள்




சுப்ரமணியபுரம்
படத்தில் ஸ்வாதி
இயக்குனர்
சசிக்குமார் பேட்டி
பக்கம் - 38ல்.



பைபாஸ் சர்ஜரிக்கு பை-பை

சொன்னவர்களின் உண்மைக்கதை

S.N. Krishnamoorthy, Businessman, Age: 64, Chennai. Mobile: 97104 50182



எனக்கு பிப்ரவரி - 17, 2005-ல் மாரடைப்பு ஏற்பட்டது. ஆஞ்சியோகிராமில் மூன்று இடங்களில் 80% - 90% அடைப்புகள் தெரிய வந்து அறுவை சிகிச்சை பரிந்துரைக்கப்பட்டது. எனக்கு பைபாஸ் சர்ஜரி விருப்பமில்லாததால் அறுவையில்லாமல் பைபாஸ் சிகிச்சை செய்து வரும் நியோமெட் மருத்துவமனையில் இரண்டரை மாதம் **E.E.C.P** மற்றும் **Artery Clearance Therapy** எடுத்துக் கொண்டேன். அதன் பிறகு செய்த **TMT - Negative** என்று வந்தது. கார்டியோகிராம் பரிசோதனையிலும் இருதயத்திற்கு குறைபாடு இல்லாமல் இரத்தம் செல்வதும் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த அற்புதமான சிகிச்சை முறையில் எனக்கு புதுவாழ்க்கைத் தந்த நியோமெட் மருத்துவமனையின் தலைமை டாக்டருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த எளிமையான சிகிச்சை முறையைப் பயன்படுத்தி என் போன்ற பல இதய நோயாளிகள் பயன்பெறட்டும் என்று வாழ்த்துகிறேன்.



S.Tamil Maran, Age: 57, Dharmapuri. Mobile: 94428 52687

எனக்கு ஜூலை 2006-ல் எதிர்பாராத விதமாக **Heart Attack** என்ற இதய அடைப்பு ஏற்பட்டது. மருத்துவர்கள் பைபாஸ் சிகிச்சை செய்தால்தான் உடல்நலம் பெறும் என்று கூறினார்கள். 90% இரண்டு அடைப்பு உள்ளது என்றும் எட்டு நாட்களில் பைபாஸ் சர்ஜரி செய்யவேண்டும் இல்லையெனில் ஆபத்து நிலையை எதிர்கொள்ள வேண்டியதிருக்கும் என்று கூறினார்கள். இந்த சூழ்நிலையில் அறுவையில்லா பைபாஸ் சிகிச்சை செய்துவரும் நியோமெட் மருத்துவமனையை பற்றி நண்பர்கள் மூலம் அறிந்து டாக்டர் சிவபாலன் அவர்களை சந்தித்தேன். அவரது சிறப்பான சிகிச்சையால் சிதிலமடைந்த என் இதயத்தை சீராக்கி இரண்டரை மாதங்கள் சிறப்பான சிகிச்சை அளித்தார்கள். **Insulin** ஊசி பயன்படுத்திய எனக்கு ஊசியை அகற்றி மாத்திரைகள் மூலம் நீரழிவு நோயை கட்டுப்படுத்தி சிகிச்சை அளித்தார்கள். தற்போது எந்த குறைபாடும் எந்தவித வலியும் இல்லாமல் நன்றாக உள்ளேன். டாக்டரின் ஆலோசனைப்படி உணவு கட்டுப்பாடு உடற்பயிற்சி, யோகா மூலம் சிறப்பாக செயல்படுவதால் இதய நோய்க்கு பைபை சொல்லிவிட்டேன். டாக்டரின் அன்பான உபசரிப்பு, என் தன்னம்பிக்கை கிடைத்த வெற்றியாக கருதுகிறேன்.

R. Karunanithi, Age:53, Mobile: 94427 04042
Tamilnadu State Transport Corporation, Madurai.



முதற்கண் என் மகிழ்ச்சி கலந்த நன்றியை நியோமெட் மருத்துவர் டாக்டர் சிவபாலன் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். நான் வேகமாக நடக்கும் போதும், கடினமாக வேலைகள் செய்யும் போதும் மார்பு பகுதியில் ஓர் அசாதாரமான ஒரு உணர்வு ஏற்படுவதை உணர்ந்தேன். என் இருதயத்தில் அடைப்பு இருப்பது கண்டறியப்பட்டு பைபாஸ் சர்ஜரி பரிந்துரைக்கப்பட்டது. நியோமெட் மருத்துவமனையில் 3 மாதங்கள் சிகிச்சைக்கு பிறகு எனக்கு அடைப்புகள் நீங்கி ஒரு புதிய சக்தி கிடைத்தது போல் உணர்ந்தேன். சிகிச்சை முடிந்து 3 வருடங்கள் ஆன பிறகும் இன்னும் நான் என் வேலைகளை நன்றாக செய்ய முடிகிறது.

NEOMED HOSPITAL
CARE FOR BETTER LIVING

CHENNAI : 2181, L-Block, 12th Main Road, Anna Nagar, Chennai - 600 040. Ph: 044-26201147, 26200882

MADURAI : 11, Lakeview Road, Opp.Sundaram Theatre, K.K.Nagar, Madurai - 625 020. Ph: 0452-2581414, 2581515

SALEM : 127/1, 'Varalakshmi Towers', Gandhi Road, Salem - 636 007. Ph: 0427-2311818, 2311819



உங்களுக்கும் ஒரு சல்யூட்!

ஒரு லட்சம் புத்தகங்களைச் சொத்தாக வைத்துச் சென்ற அப்பாவுக்கு, 'புத்தகாஞ் சலி' செய்ய முனையும் நா.முத்துக் குமாருக்கு, இதயபூர்வ பாராட்டுகள்!

- என்.எஸ்.மணிமாறன், திருவண்ணாமலை

ஃபீல்டு மார்ஷல், சாம் மானெக் ஷாவை கௌரவித்த தங்களுக்கும் ஒரு சல்யூட்!

- ஆர்.பழனிக்குமார், மதுரை - 14

மொபைல் இன்றி ஓரணுவும் அசை யாது என்பதைப் புரிய வைத்தது - 'என் வாழ்வு உன்னோடுதான்!'

- சி.என்.ரமாதேவி, சென்னை

அடி சக்கை! பெண்கள் பாறையையும் உடைக்கிறார்களா? கடின உழைப்பில் தெரி கிறது அவர்களின் முன்னேற்றம்!

- எஸ்.மீனா, ஸ்ரீரங்கம்

இடியாப்பச் சிக்கல் போல மார்மப் புள்ளிகள் வைத்தாலும், மங்களமான மணக்கோலத்துடன் முடிந்தது - புள்ளி கள்... கோலங்கள்!

- என்.சித்ராலட்சுமி, சென்னை - 40

வீணையை உருவாக்கும் கிறிஸ் தவ தம்பதியின் வார்த்தைகள் இனிமை!

- எஸ்.ஜானகி, உடுமலை

'**ஆ**கஸ்டில் ஒரு டிசம்பர்' - இசை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு ஒரு வரப்பிரசாதம்.

- என்.பாலகிருஷ்ணன், மதுரை

வாவ்! கவர் ஸ்டோரி ரியலி சூப்பர்ப்! 'நல்லா படிச்சா, எந்தப் படிப்பா இருந்தாலும் வெற்றியைத் தடுக்க முடியாது' - பொன் னேட்டில் பொறிக்கப்பட வேண்டிய வரிகள்!

- என்.காளிதாஸ், சிதம்பரம்

சீலனுக்கு ஏற்ற கார்ட்டூன். 'பிள்ளை'யின் கைவண்ணத்தில் 'உளி யின் ஓசை' பலமாகச் சிரிக்க வைத்தது.

- சுகந்தி நாராயணன், சென்னை -39

ஆவலுடன் தேடிய 'ஸ்பீட் போஸ்டை' காணவில்லையே?

- இந்திரன், நாகர்கோவில்

(வட்டமேஜை மொத்தமா ஸ்பீடு போஸ்டுக்கு மாறினதைக் கவனிக் கலியா நண்பரே! **- ஆர்)**

அமெரிக்க அதிபர் புஷ், அலறிய படி ஓடும் ஜாலி ஸ்டோரிஸ் படித்து, அணு அணுவாக ரசித்துச் சிரித்தோம்!

- வி.என்.கே.வேல், வேலூர்

அருள்வாக்கு, கண்ணனைத் தேடி... இரண்டிலும் யதேச்சையாக ஒரே உயர் கருத்து! மனம் பக்குவப்பட உதவும்.

- டி.கே.தேவநாதன், சென்னை-44

வட்டமேஜை

20.07.2008

உள்ளே...

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
044 - 4343 8888 (30 lines)

தொலைநகல் :
044 - 4343 8899

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்கள் :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-


வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ.2,700/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

"நான் எட்டாவது படித்துக்கொண்டிருந்த சமயம் அது. சம்மர் லீவில், என் அப்பாவும் அம்மாவும் மொத்த விலையில் சரக்கு வாங்குவதற்காக மும்பை சென்றார்கள். கூடவே நானும் சென்றிருந்தேன். மும்பையில் ஹோல்சேல் மார்க்கெட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். துணி வாங்குகிறபோது என்னவெல்லாம் கவனிக்க வேண்டும் என்பதை அப்பாவின் பக்கத்திலிருந்து பார்த்தேன். மறுநாள், 'சூரிதார் மெட்டீரியல் செலெக்ட் பண்ணு' என்றார். நான் நிதானமாகப் பார்த்து, பத்து டிசைன்கள் செலெக்ட் பண்ணிக் கொடுத்தேன். 'டிசைனெல்லாம் நல்லா இருக்கு; ஆனா இவ்வளவு தானா செலெக்ட் பண்ணினே?' என்று என்னைக் கேட்ட கையோடு, நான் தேர்ந்தெடுத்துக் கொடுத்த ஒவ்வொரு டிசைனிலும் இருபது, முப்பது பீஸ்களைக் கொடுக்கச் சொன்னார்.

அடுத்து, ஒரு செக்கை எடுத்துக் கொடுத்து, என்னை எழுதச் சொன்னார். வாழ்க்கையில் அதற்கு முன்னால் செக்கை நான் தொட்டதில்லை. நான் தயங்கினபோது, 'செக் எப்படி எழுத வேண்டும்?' என்றும் சொல்லிக்கொடுத்தார். பின்னர் அதிலே கையெழுத்துப் போட்டு, கடைக்காரரிடம் கொடுத்தார். மொத்தத்தில் அந்த மும்பை விசிட் எனக்குள்ளே பிசினஸ் ஆர்வத்தை ஏற்படுத்தியதுடன், பிசினஸின் அரிச்சுவடி பாடத்தையும் கற்றுக்கொடுத்தது'' என்கிறார் நாயுடுஹால் நாய்ஹாவின் நிர்வாக இயக்குநர் அரவிந்த்.

அரை நூற்றாண்டு



– 'நாயுடு ஹால்' அரவிந்த்

அரை செஞ்சுரி போட்டிருக்கும் நாயுடு ஹால் என்ற ஆலமரம், இன்று 'மாடர்ன்' தலைமுறையினரை மனத்தில் கொண்டு நாய்ஹாவாக விரிவடைந்திருக்கிறது. கூடவே பெண்களின் உள்ளாடைகளுக்கு என்றே பிரத்யேகமான 'மெர்மெய்ட்' ஷோரூம்கள், அழகுசாதனப் பொருட்கள், ஆரோக்கியப் பொருட்கள், நவீன செயற்கை ஆபரணங்கள் போன்றவற்றுக்காக எஃப்.ஜி எனப்படும் ஃபீல் குட் ஸ்டோர்ஸ், குழந்தைகளுக்கான பொருட்களுக்கு 'ப்ளூ பிங்க்' ஸ்டோர்ஸ் என்று சென்னை நகரம் முழுவதுமாகக் கிளைபரப்பி இருக்கிறது.

"இளைய தலைமுறையின் ரசனை வினாடிக்கு வினாடி மாறி வருகிறது. ஆகவே, மார்க்கெட்டின் தேவை என்ன? சப்ளையில் புதுமைகள் என்ன? என்று இரண்டு பக்கங்களிலும் கவனித்து, தேவைக்கு ஏற்ப ஸ்டாக் வரவழைப்பது; புதுமைகளை அறிமுகம் செய்து, பிரபலப்படுத்தி, அதற்கென மார்க்கெட்டை ஏற்படுத்துவது என்று செயல்பட வேண்டும். 'விஷுவல் மெர்சண்டைசிங்' என்ற கான்செப்ட் இன்று முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. விற்பனை செய்யும் பொருட்களை, வாடிக்கையாளர்களின்

கவனத்தைச் சட்டென்று ஈர்க்கும்படி எப்படி டிஸ்பிளே செய்கிறோம் என்பதுதான் விஷுவல் மெர்சண்டைசிங். கஸ்டமர், ஓர் உடையைக் கையில் எடுத்தவுடன் அணிந்து பார்க்க விரும்புகிறார்கள். அதற்காக விதவிதமான உடைகள் அணிவிக்கப்பட்ட பொம்மைகளின் ஸ்பெஷல் டிஸ்பிளேக்கள் செய்ய

பாய்ச்சல்!



வேண்டி உள்ளது'' என்று தம் விற்பனை ரகசியங்களைப் பகிர்ந்துகொள்கிறார் அரவிந்த்.

தம் பதினெட்டாவது வயதில், குடியாத்தத்தை விட்டு சென்னைக்கு ஓடி வந்துள்ளார் அரவிந்தன். தாத்தா தியாகராய நகரில் ஒரு கார் ஷெட்டில் தையல்காரராக வாழ்க்கையைத் துவக்கினார். ரவிக்கை தைத்துக் கொடுக்கும் பெண்களின் அளவுகளுக்கு ஏற்ப, முதல் முறை நியூஸ் பேப்பரில் கத்தரித்து வைத்துக்

'திருப்தியடைந்த வாடிக்கையாளர்களின் சிபாரிசைவிடப் பெரிய பப்ளிசிட்டி வேறொன்றும் இல்லை'



* எம்.ஜி.நாயுடு தம்பதி



* கடலென வாடிக்கையாளர்கள்...



* ஹரி

மேட் பிளவுஸ்கள் தைத்து விற்பனை செய்ய ஆரம்பித்திருக்கிறார். தொடர்ந்து பிளவுஸ்களின் அளவுக்கு ஏற்ப உள்ளாடைகளையும் விற்பனை செய்ய, மிகக் குறுகிய காலத்திலேயே எம்.ஜி.நாயுடுவின் தையல் கடை நாயுடு ஹால் என்கிற லேடீஸ் உலகமாக மாறிவிட்டது.


''திருப்தி அடைந்த வாடிக்கையாளரின் சிபாரிசைவிடப் பெரிய பப்ளிசிட்டி வேறு இல்லை' என்பது தாத்தாவின் தத்துவம். இன்று நவீன விளம்பர யுகத்தில், பல்வேறு விளம்பர யுக்திகளை நாங்கள் கடைப்பிடித்தாலும், வாடிக்கையாளர் திருப்திக்கு நிறைய முக்கியத்துவம் தருகிறோம்'' என்று சொல்லும் அரவிந்த், ''நிர்வாகத்தில் மனிதவள மேம்பாடு அவசியம்'' என்கிறார். வாடிக்கையாளர்களை எப்படிக் கவனித்துக் கொள்வது? அவர்களுக்குத் திருப்தி அளிக்கும் வகையில் சேவை செய்வது எப்படி? மனித உறவுகளை மேம்படுத்திக்கொள்வது எப்படி? எப்போதும் புத்துணர்ச்சியுடன் இருப்பது எப்படி? என பல எப்படிகளைத் தமது ஊழியர்கள் உருப்படியாகக் கற்க, வல்லுநர்களைக் கொண்டு முறையான

கொண்டு, அடுத்தமுறை மறுபடி அளவு எடுக்க வேண்டிய அவசியமில்லாமல், தம் கைவசமுள்ள குறிப்பிட்ட பெண்மணியின் நியூஸ் பேப்பர் மாடல் அளவுக்கேற்ப தைத்துக் கொடுப்பது அவரது வழக்கம். நாளடைவில் அவரிடம் ஆயிரக்கணக்கான நியூஸ்பேப்பர் மாடல்கள் சேர்ந்துவிட்டன. அவற்றை வகைப்படுத்திப் பிரித்து, ரெடி

எம்.ஜி.நாயுடு, கடையைத் தேடி வந்து பிளவுஸ் தைத்துக்கொண்டு போன மேல்தட்டுப் பெண்மணிகள் ஏராளம். இன்று நாயுடுஹால் ஷோரூம்களின் பிஸியான ரெடிமேட் உடைகள் விற்பனைக்கு மத்தியிலும், துணி வாங்கி தைத்துக்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்காக, ஸ்பெஷலாக டெய்லரிங் யூனிட் இயங்கி வருகிறது. 'நாயுடு ஹாலில் தைத்தால்தான் எனக்கு பர்ஃபெக்ட் ஃபிட்டிங் கிடைக்கிறது' என்று கூறும் பெண்மணிகள், தென்னிந்தியா முழுவதும் இருக்கிறார்கள்.

''வயது வித்தியாசமின்றி சுடிதார் தைத்துக் கொள்பவர்கள் அதிகரித்துவிட்டார்கள். விதம்விதமான பிளவுஸ் மற்றும் சுடிதார்டாப் கழுத்து டிசைனிங் படங்கள் எங்களிடம் இருக்கும். அவற்றிலிருந்து தங்களுக்குப் பிடித்ததைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்து, தைத்து வாங்கிக்கொண்டு போகிறார்கள்'' என்கிறார் இருபது பிளஸ் ஆண்டு அனுபவசாலியான, நாயுடு ஹாலின் டெய்லரிங் மாஸ்டர் ஹரி.

- அர்ஜுன்



பயிற்சி அளித்து வருகிறார்!

''என் தாத்தா, அப்பாவைப் போல நானும் அதிகம் படிக்கவில்லை. தாத்தாவுக்குப் படிக்க வசதி இல்லை; அப்பாவுக்குப் படிப்பில் அதிக ஆர்வம் இல்லை; நானாவது நன்றாகப் படித்துவிட்டு, பிசினஸுக்கு வர வேண்டும் என்பது என் அப்பாவின் ஆசையாக இருந்தது. ஆகவே, சென்னை நகரத்தின் மிக நல்ல பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்தார். ஆனால், என் படிப்பும் ஓகோ என்று சொல்லும்படியாக இல்லை. எட்டாம் வகுப்பில் பாஸ் பண்ணவில்லை என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள். வேறு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்தேன். மீண்டும் ப்ளஸ் டுவில் அவுட். நேரே அப்பாவிடம் வந்து, 'இனி படிக்கப் போவதில்லை; பிசினஸ்தான்' என்று சொல்லிவிட்டேன்'' என்று தாம் பிசினஸுக்கு வந்த கதையை, அரவிந்த் வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்கிறார்.



✱ சாவித்திரி

சாவித்திரி, ''உங்கள் கடையில் தவிர வேறு எங்கே பிளவுஸ் தைத்தாலும் எனக்குத் திருப்தி ஏற்படுவதில்லை'' என்று சொல்லுவாராம். நடிகைகள்தான் என்று இல்லை. பி.சுசீலா போன்ற பாடகிகளும், நடிகர்களின் குடும்பத்தினரும்கூட நாயுடு ஹாலின் கஸ்டமர்கள்தான். இன்றைக்கும் சிவாஜி, ரஜினி, விஜய்காந்த் போன்றவர்களின் குடும்பத்தினரது ஃபேவரிட் ஷாப் நாயுடு ஹால்தான். தமிழக முதல்வர் குடும்பத்தினரும் இவர்களது வி.ஐ.பி. கஸ்டமர் பட்டியலில் உண்டு.


– மானஸா

✱ பி.சுசீலா



''**எ**ங்கள் ஷோ ரூமை ஒட்டிய இன்னொரு கட்டடம் விலைக்கு வருகிறது என்று தெரிந்தபோது, அதைப் பேசி முடிக்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன்; என் மாமா ஒருவரை மட்டும் கூட அழைத்துக்கொண்டு, கட்டடத்தின் சொந்தக்காரரைப் பார்த்துப் பேசி முடித்தேன். அடுத்து மடமடவென்று கட்டி முடித்து, திறப்பு விழாவுக்கும் ஏற்பாடு செய்துவிட்டேன். ஆனால் அப்பா, என்னைப் பாராட்டி ஒரு வார்த்தை பேசவில்லை; திடீரென்று என்னை நகைக் கடைக்கு அழைத்துக்கொண்டுபோனார். அம்மா ஒரு தங்கச் செயினையும், வெங்கடாசலபதி டாலரையும் செலெக்ட் செய்து கொடுக்க, அதை வாங்கி என் கழுத்தில் அணிவித்தார். அவரது கண்களில் ஆனந்தக் கண்ணீர்; அம்மாவின் கண்களில் பெருமை. நான் வானத்தில் மிதப்பதுபோல உணர்ந்தேன்'' என்று தம் அப்பா அணிவித்த தங்கச் சங்கிலியையும், டாலரையும் தம்முடைய கழுத்திலிருந்து பெருமை பொங்க எடுத்துக் காட்டுகிறார்.

✱ அரவிந்த் தந்தை ராமசாமி



''பிரபலமான மேனேஜ்மென்ட் இன்ஸ்டிடியூட்களில் சொல்லித் தரும் நிர்வாக இயல் பாடங்கள் எல்லாம் எனக்குத் தெரியாது. ஆனாலும், என் தாத்தா, அப்பா கடைப்பிடித்த, அவர்கள் சொல்லிக் கொடுத்த அணுகுமுறைகளைக் கடைப்பிடித்து வருகிறேன். நாய்ஹா கிளைகள், மெர்மைட்ஸ், எஃப்.ஜி ஸ்டோர்ஸ், ப்ளூ பிங்க் என அனைத்திலுமாக இந்த வருடத்தின் பிசினஸ் 150 கோடி ரூபாயைத் தொட வேண்டும் என்பது என் லட்சியம். 120 கோடி பிசினஸ் நிச்சயம்!'' என்கிறார்.

''உங்களுக்குப் போட்டி...?'' என்று கேட்டால், ''நானேதான்!'' என்கிறார் பளிச்சென்று!

சந்திப்பு: **எஸ்.சந்திரமௌலி**

புகைப்படங்கள்: **யோகா**

● சி.ஆர்.நாகராஜன், பொள்ளாச்சி

முத்தம் எப்போது கசக்கும்?

கட்டாயமாகக் கசக்கிக் கொடுத்தால் முத்தமென்ன, முட்டாயே கசக்கும்!

● ஜே.துரைராஜ், சென்னை

? விழிப்புணர்வு, விழிப்புணர்வு என்கிறார்களே...? அது என்ன...?

தியானத்தில் கண்ணை மூடிப் பெறுவது விழிப்புணர்வு. மத்தியானத்தில் கொட்டக்கொட்ட முழித்தபடி, கண்மூடித்தனமாகக் கெட்ட கெட்ட காரியங்களைச் செய்துவிட்டு, இரவில் தூக்கம் வராமல் தவிப்பது, 'திருதிருவென முழிப்புணர்வு'.

● என்.என்.மணிமாறன், திருவண்ணாமலை

கணக்குப் பாடத்தில் நீங்கள் புலியாமே...?

குழந்தைகளுக்குக் கற்றுத்தரும் அளவுக்கு அம்புலி.

● த.சத்தியநாராயணன், அயன்புரம்

வயதாகிவிட்டதே என்ற வருத்தம் எப்போது வருகிறது?

இதுல tragedy என்னவென்றால், இந்த வருத்தம் எனக்குச் சின்ன வயதிலேயே வந்துவிட்டது. இந்த tragedyல நான் ஒரு prodigy!

● ராஜிராதா, பெங்களூர்

ஈகோ இன்று ஆண்களிடம் அதிகமா...? பெண்களிடம் அதிகமா...?

ஆண்கள் 'ஈ' என்று இளித்தபடி, பெண்களின் பின்னே 'go'வதால்தான், பாவம் பெண்களுக்கு 'ego'வே வருகிறது!

● ஆர்.கோபாலன், மேற்கு மாம்பலம்

? ஆயிரம் பிறை கண்டவர் என்று சொல்கிறார்களே தவிர, ஆயிரம் அமாவாசை கண்டவர் என்று ஏன் சொல்வதில்லை?

முத்தம் எப்போது



அமாவாசையின்போது கும்மிருட்டாக இருக்குமே... எதையும் காணமுடியாது!

● கமலக்கண்ணன், சிதம்பரம்

'ஸ்திரீ லோலன்' என்றால் என்ன...?

பெண்பால் ஆசையுள்ளவன்னு அர்த்தம். மண், பெண், பொன்... இம் மூன்றின் மீதும் ஆசையுள்ளவன் threeலோலன். ஆசையை வென்றவனே freeலோலன்!

● வாசுதேவன், மும்பை

நாட்கள் வெகுவேகமாகச் செல்வதைப் பார்த்தால் பயமாக இல்லை...?

போகாத ஊருக்கு வாழ்க்கை ரெயிலில் ஏறி, அதுவும் without-ல் நாம் பயணம் செய்கிறோம். ஜன்னல்

கிரேஸியைக் கேளுங்கள்



கசக்கும்?

வழியாகப் பார்த்தால் மரம், செடிகளைப் போல நாட்கள் நகர்வது போலிருக்கும் தான். வாழ்க்கை train அல்ல, strain... போதும், பயம் தரும் ரெயில் சிநேகம். தைரியமாக ரெயிலை விட்டிறங்கி, உள் முகமாக within platformல் நில்லுங்கள். நாட்கள் உங்களுக்குக் கைகட்டி சேவகம் செய்யும் ஆட்களாக மாறும்.

● ராஜேஸ்வரி சுப்பிரமணியன்,
வளசரவாக்கம்

உங்களுடைய பலம் நகைச்சுவை உணர்வு என்றால், உங்களுடைய பல வீனம் எது?

'நகச்சுவை உணவு'. என்னைத் தெரியாதவர்கள் நான், அசுர வேகத்தில் நகம் கடிப்பதைப் பார்த்தால், பேய்ப்பசியில் என்னை நானே சாப்பிட முயல்வதாக நினைக்க வாய்ப்புண்டு.

● என்.சீத்தாலட்சுமி, சென்னை

கண்ணீர், வியர்வை இரண்டும் உப்பு கரிக்கின்றன. இரண்டுக்கும் என்ன வித்தியாசம்...?

கண்ணீர் உப்பு - மனக் கசப்பு; வியர்வை உப்பு - உடல் உழைப்பு!

● கே.கே.வெங்கடேசன், வேலூர்

அசையா சொத்து - அசையும் சொத்து விளக்கமாகக் கூற முடியுமா...?

ஆன்மா அசையா சொத்து. தாயால் பெத்து, தானாய் செத்து ஜென்மஜென்மமாக அசையும் சொத்து ஜீவன். அசையா சொத்தான ஆன்மாவோடு, அசையும் சொத்தான ஜீவன் கலப்பதே asset. இது நிகழ்ந்தால் பிறகு யாரும் நம்மை அசைக்க முடியாது. ○

பாலில் ஊறிய ஜாதிப்பூ

'**பா**ய் வீட்டில் மூணு கல்லு போட்டாங்க...' அரவாகுறிச்சி பக்கம் இப்படி அரசல் புரசலாகப் பேசிக் கொண்டால், தைரியமாக அந்த வீட்டு விருந்துக்கு தலைவாழை இலையோடு போகலாம்.

மூணு பெரிய இரும்புக் கற்களை ஃ போல இடைவெளிவிட்டு வைத்து நடுவே பெரிய, பெரிய விறகுகளை நுழைத்து, தேங்காய் நார் பரப்பி, அடுப்புப் பற்ற வைத்து, பதமானதும்தான் 'தேக்' எனப் படும் பெரிய பானையை அடுப்பில் ஏத்திவிடுவாங்க.

பிரியாணிக்கு மூன்று இரும்புக் கற்கள் எப்படி அத்யாவசியமோ... அதேபோல வாழ்க்கையில மூன்று பேர்கள் அவசியம். நெய் ஊற்றி, புதினா, வெங்காயம் வதக்கி மசாலா போட்டு, கறி சேர்த்து, ஆவி வந்ததும், பச்சரிசி வார்த்து பதமாய்க் கிளறி, திருப்பிவிட்டு, தட்டு மூடி, நெருப்பு கங்குகளைப் பரப்பி 'தம்' போட்டு பிரியாணி சமைப்பதுபோல, என்னையும் உருவாக்கினார்கள் மூன்று பேர்.

மூன்று பேரில் யாரைப் பற்றி முதலில் சொல்ல? 'சின்ன வயசில் நீங்க மாயாஜால கதைகள் படித்தது உண்டா?'

அந்தக் கதைகளில் ஒரு ராட்க்ஷசன் இருப்பான். அவன் உயிர்கூட ஏழு கடல், ஏழு மலை, ஏழு ஆறு, ஏழு அருவி, ஏழு கிணறு தாண்டியிருக்குமே...

அப்படிப்பட்ட வழிகளைக் கண் டறிந்து, ராட்க்ஷசனின் விதியாக்கியவனின் வாரிசுதான், பிற்காலத்தில் பிளான் போட்டு, சுரேஷ் ஸாருக்கு வீடு கட்டித் தந்திருக்க வேண்டும்.

எல்லாவற்றையும்விட எனக்குள் இருந்த இலக்கிய ஆர்வத்தை எண்ணெய் ஊற்றி வளர்த்த மும்மூர்த்திகளில் ஒருவர் அவர்.

"**பா**ர்த்து ரொம்ப நாளாச்சு... ஏதோ தோணுச்சு!'' என்றேன்.

''ஏதாவது புதுசா எழுதியிருக்கீங்களா?'' என்றார் சுரேஷ் ஸார். தலையாட்டினேன். வார இதழில் வந்த கவிதையைப் படித்தார். கவிதையின் இரு இடங்களில் உவமையை அடிக் கோடிட்டார். கண்களை மூடி நிஷ்டையில் ஆழ்ந்தவர்...

''நீங்க கண்ணதாசனின், 'முத்துக்களோ கண்கள்' பாட்டைக் கேட்டிருக்கீங்களா?''

கேள்வியை வீசினார். ஆமோதிப்பாகத் தலையாட்டினேன்.

''அது நடுவே ஒரு வரி வரும். 'பாலில் ஊறிய ஜாதிப்பூவை சூடத் துடிப்ப தென்ன'ன்னு... இது பல நாள் புரியவே யில்லை. புரிஞ்சபோது, புது பரிமாணம் விரிஞ்சது.

யோசிச்சுப் பாருங்க. பாலே வெண்மை, அதுலே இன்னும் வெண்மை யான ஜாதிப்பூவை ஊறவைச்சா? அது ஓர் அசாதாரண வெண்மை பெறாதான்னு ஒரு ஏக்கம். இப்படி வெண் மையை விவ ரிப்பதுதான் கவிஞனின் கற்பனையோட வலிமை. இதைத்தான் படிமம்ன்னு

யூ. பைஸ் அஹமத்



சொல்றது!''

நான் வாயில் ஈ நுழைவது தெரியாமல், விரிந்த வாயுடன் சொற்பொழிவில் கரைந்துபோயிருந்தேன்.

இப்போது என் கவிதையில் ஒரு வரி படித்துக்காட்டி, ''அரதப் பழகுங்கறதை உணர்த்த இதைவிட அழகான படிமம் எதுவும் சொல்ல முடியுமா தெரியலை'' என்றார்.

கவிஞர்கள் உருவாவது இல்லை; உருவாக்கப்படுகிறார்கள் என எங்கோ படித்தது நினைவில் வந்தது. நடுவே ஃபோன் வந்தது! ராஜா எனப்படும் மணி ராஜ். அவர் தொழிற்சாலை ஊழியர்தான் என்றாலும் இடதுசாரி. ஆரம்பத்தில் தெரு முனை நாடகம், இலக்கிய கூத்துப் பட்டறை, நட்சத்திர இரவு என்றால்,

ஃபோனில் சுற்றி சுற்றி விரலை வேலை வாங்கியே ஆட்களைப் பிடித்து நிகழ்ச்சியை அம்சமாக அசத்திவிட வைப்பார்.

மனிதருக்கு உலகத் திரைப்படங்கள் மேல் அப்படி ஒரு காதல். சென்னை, மும்பை உலக படவிழாவில் தேடித் தேடி காண ஏங்கும் உலகத் தரப் படங்களை எல்லாம்... எங்கள் தீப்பெட்டி சைஸ் ஊரின், ஏதாவது மண்டபத்தில் நண்பர்கள் சகிதம் ஏற்பாடு செய்து பார்ப்பார்.



பார்த்துவிட்டு, அக்கு வேறு ஆணி வேறாய்ப் பிரித்து அலசுவார் பாருங்கள்...

அதே மாதிரி "ராத்திரியில் பூத்திருக்கும் தாமரைதான் பெண்ணோ?'ன்னு ஒரு பாட்டு. அதில் பெண்மையின் புகழ்ச்சிக்கான ஆரவாரச் சொற்கள் பிரிட்டாலும், பொங்கித் தணிந்த பின் மிஞ்சும் பாருங்க, அது இல்பொருள் உவமை அணி!

ராத்திரியில் எங்கேயாவது தாமரை பூக்குமா?

சரி இருளை இனிமையாகக் கடத்த, கடன் வாங்கி வைத்த இல் பொருள் உவமை அணி. இதை வைச்சுப் பாலம் அமைக்கலாம்ன்னு கவிஞன் வழி முறை சொல்லித் தர்றான்.''

"நீயும் அப்படி ஒரு இல்பொருள் உவமை அணியை கவிதையில் பயன்படுத்திப் பாரேன்டா, தப்பாயிருந்தாலும் செஞ்சு பாரு. போகப் போக சரியாயிடும்'' என்பார்.

கடிகார முட்களைப் பற்றிய கவலையை மறந்து, நிறைய இலக்கியம் பருகினோம்.

அட! அந்த நாராயணன் ஸார் வேறொரு தினுசு. அந்த மனுஷனுக்கு எப்படித்தான் குறை மட்டும் பளிச்சுன்னு தெரியுமோ தெரியல. ப்ரூஃப் ரீடர் மாதிரி தவறு மட்டுமே கண்ணுல தெரியும். ரெண்டு பேரும் பலத்தையும் மாற்றத்தையும் சொன்னா, இவரு மட்டும் குறையைச் சொல்வாரு. ஃக்குல ஒண்ணு இல்லன்னாகூட அது ஃஆக இருக்காதே! இவரையும் சேர்த்து என்னைச் சமைக்கிற மூணு கல்லு...

"என்ன சார், வந்ததும் வராததுமா பாக்கெட்ல கையை விடறீங்களே... எப்ப செக்-அப் பண்ணுவீங்க?''

"தப்பா எடுத்துக்காதப்பா. காசைப் பாத்தாதான் எனக்கு மூளையே வேலை பார்க்கும்.''

– அனிதா

எந்தெந்த ஊர்ல எந்தெந்த கற்கள் இப்படி ஃ மாதிரி இலக்கிய ஆர்வத்தை வளர்க்குதோ.. என்று யோசிக்கிற போதே "அண்ணே, பக்கத்து ஊரு சலீம் பாய் வீட்ல மூணு கல்லு போட்டாச்சு'' என்றான் சிறுவன். அங்கேயும் ஒரு வாசகன் எழுத்தாளனாக வெந்துகொண்டு இருப்பானோ?



வாழ்க மணமக்கள்!

மணமகன் : சிரஞ்சீவி **ஸ்ரீனிவாசன்**

கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் இளைய சகோதரர் புத்தமங்கலம் ஜெகதீச அய்யர் அவர்களின் பௌத்திரன். புதுடெல்லி வாழ் பஞ்சாமி - கௌரி பஞ்சாமி தம்பதியரின் ஜ்யேஷ்ட குமாரன்.

மணமகள் : சௌபாக்கியவதி **ஷோபனா**

சித்தமல்லி சுப்ரமணிய அய்யர் அவர்களின் பௌத்திரி. புதுடெல்லி வாழ் ராஜகோபாலன் - வஸந்தா ராஜகோபாலன் தம்பதியரின் செல்வப் புதல்வி.

சிரஞ்சீவி ஸ்ரீனிவாசன் – சௌபாக்கியவதி ஷோபனாவின் திருமண விழா சென்னையில் 22.6.2008 ஞாயிறு அன்று வெகு விமர்சையாக நடந்தது. காலையில் திருமணத்தின் போதும், அன்று மாலை நடந்த வரவேற்பின் போதும் ஏராளமான உறவினர்களும் நண்பர்களும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர். பின்பு 29.6.2008 ஞாயிறு அன்று டில்லியில் நடந்த வரவேற்பின் போதும் ஏராளமானோர் வந்திருந்து புது தம்பதியினரை வாழ்த்தினர்.



கல்கி




2008 ஜூலை 20
ஸர்வதாரி ஆடி 5
மலர் : 66
இதழ் : 51

தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா

- பாரதியார்

ஆஃப்கான் அதிர்ச்சி!

'பாகிஸ்தானிய ஐ.எஸ்.ஐ.யின் சதி!' என்று அவசரமாகப் பழி சுமத்துகிறது ஆஃப்கான் அரசு. காபுல் நகரில் உள்ள இந்தியத் தூதரகம் மீது நிகழ்ந்த தற்கொலைத் தாக்குதலுக்குத்தான் இவ்வாறு விளக்கமளிக்கிறது. பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் போக்கு இது. ஆஃப்கானிஸ்தானிலுள்ள இந்தியர்களுக்கும் காபுலில் உள்ள இந்திய தூதரகத்துக்கும் பாதுகாப்பு தரவேண்டியது ஆஃப்கான் அரசின் கடமை. தாலிபான் சதியோ, ஐ.எஸ்.ஐ. சதியோ - எவ்வாறாயினும் அங்கே இறந்துபோனவர்களில் பலர் இந்தியர்கள். அவர்களது குடும்பத்துக்கும் இந்தியாவின் கௌரவத்துக்கும் ஏற்பட்டுள்ள இழப்பை ஆஃப்கானிஸ்தான் அரசு ஈடு செய்ய முடியாது. அவ்வரசு அங்கே அமர்வதற்கும் ஹமீத் கர்ஜாய் அதிபர் ஆவதற்கும் வழி வகுத்துத் தந்த அமெரிக்க அரசும், இறந்த உயிர்களுக்கு ஈடு செய்ய முடியாது. பின்லேடனைப் பழிவாங்கும் முயற்சியில் தாலிபான் ஆட்சியை ஒடுக்கியது அமெரிக்கா. அந்த தேசத்தின் மீது ஜனநாயகத்தை வலுக்கட்டாயமாகத் திணித்தது. அதுநாள்வரை கொடுங்கோன்மைக்குப் பழகிய மக்கள், ஜனநாயகத்தின் இனிய சுவாசத்தை அனுபவிக்கவே அஞ்சினார்கள். தாலிபான் ஆதிக்கம் எப்படியும் ஓங்கும், அது பல்வேறு விதங்களில் வெளிப்படும் என்பது அவர்களுக்குத் தெரியும். அந்தக் கொடுமையான வெளிப்பாடுகளில் ஒன்றுதான், இந்தியத் தூதரகம் மீது வெடிகுண்டுகள் நிரம்பிய காரை மோதச் செய்த தற்கொலை தாக்குதல். இஸ்லாமிய பயங்கரவாதத்தின் முத்திரை, இந்தக்





கொலைச் சதியில் நன்கு பதிந்துள்ளது.

ஒடுக்கப்பட்ட ஒரு நாடு, ஜனநாயகப் பாதைக்குத் திரும்புகையில், அதன் முன்னேற்றப் பணிகளில் இந்தியா கைகொடுக்க விரும்புவது, ஓர் உயர்ந்த செயலாகத் தோன்றக்கூடும். ஆனால், ஆஃப்கானிஸ்தானில் அமெரிக்காவே மறைமுக ஆட்சி செய்கிற நிலைமைதான் இன்றும் நீடிக்கிறது. இதனை தாலிபானால் ஒரு போதும் ஏற்க முடியாது. இந்தியாவின் உதவியை, அமெரிக்காவுக்குச் செய்யப்படும் உதவியாகவே அவ்வமைப்பு காண்கிறது. ஆகவேதான் பலவிதமான முன்னேற்ற களப் பணிகளில் ஈடுபட்டு வரும் நமது நாட்டுப் பொறியாளர்களும் இதர பணியாளர்களும், அவ்வப்போது கடத்தப்படுவதும் கொலை செய்யப்படுவதுமான கொடுமைகள் நிகழ்ந்து வருகின்றன. இப்போது இந்திய இறையாண்மைக்கே சவால் விடும் விதமாக, தூதரகத்தின்மீது தாக்குதல்.

இதுபோன்ற தேசங்களில் பணியாற்றச் செல்லும் நமது ஊழியர்களுக்குக் கூடுதலான பொருளாதார அனுகூலமும் காப்பீடும் வழங்க, இந்திய அரசை வற்புறுத்தலாம். ஆனால், அது அவ்வூழியர்களுக்குப் பாதுகாப்பைத் தராது.

ஆஃப்கான் அரசிடம், ''கூடுதல் பாதுகாப்பு கொடுங்கள்'' என்று கேட்பது அபத்தமாக இருக்கும். தங்கள் தேசத்து அமைதியையே அவர்களால் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை; தங்கள் மக்களுக்கே பாதுகாப்பு தர முடியவில்லை.

இந்நிலையில், நமது அரசு நமது அயலுறவுக் கொள்கையை மறுபரிசீலனைக்கு உட்படுத்தி, ஆஃப்கானிஸ்தான் போன்ற நாடுகளின் முன்னேற்றப் பணிகளில் நேரடியாகப் பங்கேற்பதைத் தவிர்ப்பதுதான் நல்லது. இதுவரை 750 மில்லியன் டாலர் பெறுமானமுள்ள உதவியை இந்தியா, ஆஃப்கானிஸ்தானுக்குச் செய்துள்ளது. இந்தத் தொகை சிறிதல்ல; ஆனால், அங்கே நாம் காவு கொடுக்கும் உயிர்களின் விலை அதைவிட மதிப்பு மிக்கது.

ஆஃப்கானிஸ்தானை ஜனநாயக நாடாக மாற்ற முடிவெடுத்து, அதன் அரசியலில் தலையிட்ட அமெரிக்காவே, முன்னேற்றப் பணிகளுக்கு உதவட்டும். இந்தியா ஒதுங்கிக் கொள்ளட்டும்! ●



கதை பழசு... காஸ்ட்யூம் புதுசு!



சோப் குவீன் ஏக்தா கபூரின் 'மகாபாரதம்' ஒளிபரப்பு ஆரம்பமாகிவிட்டது. 'கே'என்பது ஏக்தாவின் ராசி எழுத்து. 'கஹானி ஹமாரே மகாபாரத் கீ' என்பது டைட்டில்! மிகப் பெரிய பட்ஜெட்டில் தயாராகி வரும் இத்தொடருக்காக, ஏக்தாவின் மெனக்கெடல்கள் பிரமிக்க வைக்கின்றன. உதாரணத்துக்கு, குழந்தை கண்ணன் ரோலில் நடிப்பதற்கென, கடந்த வருடம் ஜன்மாஷ்டமி அன்று பிறந்த குழந்தைகளாகத் தேடும்படி தம் யூனிட் நபர்களுக்கு ஏக்தா உத்தரவிட, சுமார் மூன்று மாதங்கள் தேடியலைந்து, 150 குழந்தைகளின் ஜாதகங்கள் கிருஷ்ணரின் ஜாதகத்துடன் மாட்ச் செய்யப்பட்டன. இதற்கென ஏழு பிரபல ஜோதிடர்கள் பல இடங்களிலிருந்தும் வருகை தந்து, சிறந்த குழந்தைகளாக இரண்டினை பரிந்துரை செய்தனர். அதிலிருந்து ஏக்தா ஒன்றைத் தேர்வு செய்திருக்கிறார். குழந்தையின் பெயரென்ன? 'கிருஷ்'! (அடடா என்ன பொருத்தம்!)

“எனக்கு எதிலுமே மேலெழுந்த வாரியாகச் செயல்படுவது பிடிக்காதது. கடவுளாக நடிக்கும் குழந்தை என்றால் சும்மாவா? கண்ணனின் உடை மயில்பீலி, சுதர்சன சக்கரம் என எல்லாமே பல கோயில்களிலிருந்து வரப் போகின்றன'' என்கிறார் ஏக்தா கபூர்.

பிரபல ஃபேஷன் டிஸைனர் மனீஷ் மல்ஹோத்ராதான் காஸ்டியூம் டிஸைனர், அர்ஜுனன், பீமன், துரியோதனன், பீஷ்மர்... என எல்லோருடைய உடைகளையும் அதி நவீனமாக வடிவமைத்திருக்கிறார். பெரிய பெரிய கிரீடம், டூப்ளிகேட் நகைகள், கண்ணைக் கூச வைக்கும் செட்... பொதுவாக புராணத் தொடரில் எதிலுமே ஒரு புதுமை டச்.

செட் வடிவமைத்திருப்பது ஆர்ட் டைரக்டர் ஸ்மிதா ஃபி. அஸ்தினாபுரம் ரெடியாகிக் கொண்டிருக்கிறது.

கிட்டத்தட்ட எல்லா சானல்களிலுமே ஏக்தா கபூரின் சீரியல்கள்தான் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. 'சாஸ்-பஹு' (மாமியார் - மருமகள்) சீரியல் பண்ணிக்கொண்டிருந்த ஏக்தா, கலகம் சண்டை, வஞ்சகம், பழி, துரோகம்... என சகல மசாலாக்களும் நிறைந்த மகாபாரதத்தை புதிய பார்வையுடன் சொல்ல வருகிறார்.

- லதா சேகர்



குறைவான முதலீடு
மனநிறைவான இலாபம்

சென்னைக்கு மிக அருகில் CMDA எல்லைக்குள் 4 வழி பாதை இணைப்பு வசதியுடன் கூடிய BLBயின் ஸ்ரீ நரசிம்மா நகரில் முதலீடு செய்யுங்கள்.

சிறப்பம்சங்கள்:

- ✓ தார் சாலைகள்
- ✓ முழுவதும் வேலியிடப்பட்டது
- ✓ உடனே வீடு கட்டலாம்
- ✓ சுற்றிலும் வீடுகள்
- ✓ சுவையான நிலத்தடி நீர்
- ✓ இரயில் மற்றும் பஸ் வசதியுடன் கூடியது
- ✓ தெளிவான பத்திரங்கள்
- ✓ 5 ஆண்டுகள் பாதுகாப்பு சேவை

அரசு அனுமதிபெற்ற மனைகள் என்றாலே சுலபமாக உடனே நினைவுக்கு வருவது நம்பகம் வாய்ந்த BLB எஸ்டேட்ஸ்தான். கடந்த 10 ஆண்டுகளாக வளர்ச்சிக்கேற்ற பிரதான இடங்களில் மிகச்சிறந்த மனைகளை அதன் வாடிக்கையாளர்களுக்கு அளித்து அவர்களது வளமான வாழ்விற்கு வழிவகுத்துள்ளது. இப்போது சென்னைக்கு மிக அருகில் உள்ள BLBயின் ஸ்ரீநரசிம்மா நகர் பிரதான இடம் மற்றும் மிகக் குறைந்த விலை ஆகிய சிறப்பம்சங்களை உங்களுக்கு அளிக்கிறது. நிலமதிப்பு விரைவில் பன்மடங்கு உயரவிருக்கும் இவ்விடத்தில் உடனே பதிவு செய்யுங்கள்!

ஸ்ரீ நரசிம்மா நகர்

ஆவடி / பட்டாபிராம் / திருநின்றவூர் / பூந்தமல்லி
ஆகிய இடங்களிலிருந்து செல்லும் வசதி உண்டு.

(CMDA Approval No. 37/2007)

கடன் வசதி

IDBI HOMEFINANCE LTD.


SUNDARAM BNP PARIBAS HOME FINANCE

இலவசமாக மனையை பார்வையிட அழைக்கவும்:

28345104 / 05 / 06

BLB ESTATES PRIVATE LIMITED

"SREE AUDISESHA BHAVAN", New No. 21, Chinnaiah Street, (Off. G.N. Chetty Road & Thirumalai Pillai Road),
T.Nagar, Chennai - 600 017. E-Mail: blbestmail@vsnl.net Website: www.blbestates.com



* முகாபே

யும், அங்குள்ள பரிதாபகரமான கிரிக்கெட் நிலவரங்களுக்காகவும், ஜிம்பாப்வேவை உலக கிரிக்கெட்டிலிருந்து ஒதுக்கிவிடக் குரல் கொடுத்துள்ளன இங்கிலாந்தும் தென் ஆப்பிரிக்காவும். அடுத்த வருடம் இங்கிலாந்தில் நடக்கவுள்ள 20-20 உலகக்கோப்பை போட்டியிலிருந்து, தன்னிச்சையாக விலகியுள்ளது ஜிம்பாப்வே அணி.

1983 உலகக் கோப்பையில் ஆஸ்திரேலியாவைத் தோற்கடித்த ஜிம்பாப்வே, இந்தியாவையும் நெருக்கடிக்குத் தள்ளி (கபில்தேவ் 175 அடித்த ஆட்டம்)

கிரிக்கெட்டுக்கு




கிரிக்கெட் என்கிற விளையாட்டையே ஒழித்துவிட்டு, அக்கடா என்று கிடக்கும் ஜிம்பாப்வேவைப் பற்றித்தான் இன்றைக்கு கிரிக்கெட் நாடுகள் அதிகமாகப் பேசிக்கொண்டு இருக்கின்றன.

'தி இன்டர்ப்ரெட்டர்' என்கிற ஹாலிவுட் படமொன்று சில வருடங்களுக்கு முன்பு வெளிவந்தது. ஜிம்பாப்வே நாட்டு அதிபரான முகாபேவை, மோசமான மனிதராகச் சித்தரித்த படம் அது. படத்தில் ஜிம்பாப்வே என்பதற்குப் பதிலாக மொடோபோ என்கிற கற்பனை ஆப்பிரிக்க நாடு உருவாக்கப்பட்டது. இது அமெரிக்க உளவுத் துறையான சி.ஐ.ஏ.வின் வேலை என்று, அப்படத்தைத் தடை செய்தது ஜிம்பாப்வே அரசு. சமீபத்தில் நடந்த அதிபர் தேர்தலில், முகாபே செய்த அட்டூழியங்களைச் சுட்டிக்காட்டி

எல்லோர் பார்வையையும் தன் மீது பதிய வைத்தது. 1991 அதற்கு டெஸ்ட் உரிமம் வழங்கப்பட்டது. 90களில் ஆண்ட்டி ப்ளவர், கிராண்ட் ப்ளவர், ஹீத் ஸ்ட்ரீக் போன்ற உலகத் தரமான வீரர்கள் உருவானார்கள். 2003 உலகக் கோப்பையின் போதுதான் ஜிம்பாப்வே கிரிக்கெட்டின் தோல் உரிக்கப்பட்டது. ஜிம்பாப்வே வீரர்கள், தங்கள் நாட்டின் மோசமான அர

* மால்கம் ஸ்பீட்



சியல் மற்றும் கிரிக்கெட் நிலைமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கறுப்புப் பட்டை அணிந்து விளையாடினார்கள். அவர்களையெல்லாம் ஒழித்துக்கட்டி புதிய அணியொன்று ஜிம்பாப்வேவில் உருவாக்கப்பட்டது. ஆனால், அது போகிற இடங்களிலெல்லாம் அடிவாங்க ஆரம்பிக்க, வேறு வழியின்றி ஜிம்பாப்வே, டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து தற்காலிக ஓய்வு எடுத்துக்கொண்டது.

குட் பை!



ஜிம்பாப்வேவின் கிரிக்கெட் ஊழல்களை, உலகுக்குத் தெரியப்படுத்தியவர் முன்னாள் ஐ.சி.சி. தலைவரான மால்கம் ஸ்பீட். கிரிக்கெட் வளர்ச்சிக்காகக் கொடுக்கப்பட்ட டாலர்கள், முறைகேடாகப் பயன்படுத்தப்படுவதை அவர்தான் கண்டுபிடித்தார். 2007 உலகக் கோப்பையில் கலந்துகொள்வதற்காக ஜிம்பாப்வேவுக்கு எட்டு கோடி ரூபாய் வழங்கப்பட்டது. வெளி நாட்டிலிருந்து காரை இறக்குமதி செய்து, அதை உள்ளூர் கம்பெனிகளுக்கு, அதிக விலைக்கு விற்று, லாபம் சம்பாதிக்க எண்ணிய ஜிம்பாப்வே வாரியம், அதற்காக ஐ.சி.சி.யின் பணத்தில் கைவைத்தது. அதிபர் முகாபேவுடன் கூட்டுச் சேர்ந்து, வாரியத் தலைவர் பீட்டர் சிங்கோகா பணத்தைக் கபளீகரம் செய்ததை மானசீகமாக உணர்ந்தாலும், அதற்கு நேரடி சாட்சியங்கள் இல்லை. நொந்துபோய் இறுதியில் தம் பதவியைத் துறந்தார் மால்கம் ஸ்பீட். இந்தியாவின் பள்ளிக்கூட கிரிக்கெட் அளவுக்குக்கூட தரமில்லாமல், இன்றைக்கு கிரிக்கெட் ஜிம்பாப்வேயில் சிதிலமடைந்து போயிருக்கிறது. கிரிக்கெட் விளையாட ஸ்டம்ப், க்ளவுஸ் இல்லாமல் ஜிம்பாப்வே நாட்டு கிரிக்கெட் வீரர்கள் சிரமப்படுகிறார்கள். ஆனால், இந்தியா உள்பட ஆசிய நாடுகள், ஜிம்பாப்வேயின் ஊழல் கிரிக்கெட் வாரியத்துக்கு ஆதரவு கொடுப்பதால், ஜிம்பாப்வே கிரிக்கெட் வாரியத்தை வேரோடு பிடுங்க யாராலும் முடியவில்லை.

எனினும், மற்ற விளையாட்டுகளினால் ஜிம்பாப்வேக்கு எந்தவித திருகுவலியும் கிடையாது. இதோ அடுத்த மாதம் ஜம்மென்று பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ள இருக்கிறது. அடுத்ததாக கால்பந்து மற்றும் ரக்பி உலகக் கோப்பை போட்டிகளுக்கான தகுதிச் சுற்று ஆட்டங்கள் இருக்கின்றன. இந்தியாவில் எப்படி கால்பந்தோ, அதுபோல ஜிம்பாப்வேயில் கிரிக்கெட். கிரிக்கெட் எக்கேடு கெட்டுப் போனாலும், அங்கு கேள்வி கேட்க ஒருவரும் கிடையாது.



ச.ந. கண்ணன்

கண்ணனைத் தேடி...

13



திருப்புளிங்குடி பூமிபாலன்

எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடினார் பெரியாழ்வார். மணவாள மாமுனிகள் என்ற பிற்காலத்து மகானோ அனைத்து ஆழ்வார்களுக்கும் பல்லாண்டு பாடினார்:

ஆழ்வார்கள் வாழி!
அருளிச் செயல் வாழி!
தாழ்வாதுமில் குரவர் தாம் வாழி
ஏழ்பாரும் உய்ய அவர்கள்
உரைத்தவைகள் தாம் வாழி
செய்ய மறை தன்னுடனே சேர்ந்து...

- இது மணவாள மாமுனிகளின் உபதேச ரத்தினமாலை பாசுரம்.

'ஸமஸ்கிருத வேதங்களும், அவற்றின் தமிழ்க் கருத்தைக் கூற வந்த ஆழ்வார்களுடைய நாலாயிரம் திவ்யப் பிரபந்தங்களும் அவற்றின் உரைகளோடு சேர்ந்து வாழ வேண்டும்! அவற்றைப் பாடிய ஆழ்வார்களும் வாழ வேண்டும்!' என்பது இதன் பொருள்.

ஆழ்வார்கள் வாழி என்று எதற்காகச் சொல்கிறோம்? எம்பெருமானுடைய வடிவத்தையும் குணங்களையும், அவனுடைய திவ்ய தேசங்களையும் நாம் நன்றாக அனுபவித்து மகிழும்படி காட்டிக் கொடுத்தவர்கள் அவர்கள்தானே; அவர்களுடைய வர்ணனைகள்தானே! அப்படிப்பட்ட ஆழ்வார்களுக்குத் தலைவர் சுவாமி நம்மாழ்வார். அந்த நம்மாழ்வார் உவந்த நவதிருப்பதிகளுள் திருப்புளிங்குடி என்கிற திவ்ய தேசத்துக்கு நாம் கண்ணனைத் தேடிப் போகிறோம்.

திருப்புளிங்குடி எம்பெருமானுக்கு பூமிபாலன் என்று பெயர். சயனத் திருக்கோலம். காசினி வேந்தன் என்பது அவனுடைய தமிழ்ப் பெயர். 'பூமி' என்றால் பூவுலகம். பாலன் - காப்பவன். பூமாதேவியைக் காப்பவன்; காசினி என்றால் பூமி. வேந்தன் என்றால் மன்னன் - பூமிக்கு மன்னன்.

இந்தத் திருப்பெயரை, ஆழ்வார் சற்றே மாற்றி 'காய் சின வேந்தன்' என்று பாசுரத்

"உன் திருவடிகளை வருடி விடக்கூடிய கைங்கர்யத்தையும் கொடுத்தருள்வாய்"

–நம்மாழ்வார்





திலே குறிப்பிடுகிறார். ('காய்சின மாக்களிர் அன்னான் என் கைப்பற்றி' என்று ஆண்டாள் நாச்சியார்கூட குறிப்பிட்டிருக்கிறாளே!). காய் சினம் என்றால், தண்டிக்கக்கூடிய கோபம். துஷ்ட நிக்ரஹம் செய்கிறவனல்லவா எம்பெருமான்.

ஆக, இப்படிப் பல திருநாமங்களோடு கூடிய எம்பெருமான் திருப்புளிங்குடியிலே மிக நீண்ட, திருவுருவத்துடன் சயனித்திருக்கிறான். நீண்டுள்ள அவன் திருவடிகள் அருகே ஸ்ரீதேவி, பூமிதேவி நாச்சியார்கள் அமர்ந்து, அவற்றை வருடிக்கொண்டிருக்கிறார்கள். நாம் நின்று தரிசிக்கும் இடத்திலிருந்து அந்தப் பாதங்களைப் பார்க்க முடியவில்லை. ஸ்ரீதேவி - பூதேவிக்கு மட்டும்தான்

வேளுக்குடி ஸ்ரீ க்ருஷ்ணன் சுவாமிகள்

அந்த ஏற்றம் கிட்டும் போலும். எமக்கு அது கிட்டவே கிட்டாதா! என்று நம்மாழ்வார் இந்தப் பெருமாளிடத்திலே பிரார்த்தித்துப் பாடியது நமக்கு அங்கே நிற்கையில் நினைவு வரும்!

'வடிவிணை இல்லா மலர் மகள் - மற்றை
நிலமகள் பிடிக்கும் மெல்லடியை
கொடுவினையேனும் பிடிக்க நீ ஒரு நாள்
கூவுதல் வருதல் செய்யாயே!'

''எம் பெருமான் திருவடியைத் தொட்டு, அதற்குக் கைங்கர்யம் பண்ணுகிற அளவுக்கு அடியேன் பாக்யம் பண்ணவில்லை. பல காலமாக பாவங்களையே சேர்த்து வைத்துள்ளேன். என் பாபத்தையும் தொலைத்து, உன் திருவடிகளை வருடிவிடக்கூடிய கைங்கர்யத்தையும் கொடுத்தருள்வாய்'' என்று பூமிபாலனிடத்தே பிரார்த்திக்கிறார்! ''ஒரு நாளாவது உன் திருவடி கைங்கர்யத்துக்கு என்னைக் கூப்பிட்டுக்கொள்ள வேண்டாமா! இங்கே திருப்புளிங்குடிக்குப் பக்கத்திலே உள்ள ஆழ்வார்திருநகரியிலேதானே நான் இருக்கிறேன். 'அடியீர், வாரும்! நம்முடைய திருவடிகளைப் பிடியும். வெகு காலமாக ஸ்ரீதேவி - பூதேவி பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். நீரும் கைங்கர்யத்துக்கு வரலாமே!' என்று ஒருமுறை கூப்பிட்டால் ஓடி வரமாட்டேனோ? லக்ஷ்மணனை மட்டும்தானா அடியவனாக வைத்துக் கொள்ள வேண்டும்? ஸ்ரீதேவி, பூதேவி நாச்சியார் மட்டும்தானா பணிவிடை செய்ய வேண்டும்?'' என்று இறைஞ்சிக் கேட்கிறார் நம்மாழ்வார்!

அந்த பூமிபாலன் எம்பெருமானோ தொடர்ந்து இன்றைக்கும் சயனத்திருக் கோலத்தில் ஒயிலாக இருக்கிறான். ஸ்ரீதேவியும் பூதேவியும் அவன் பாதங்களைக்கூட நாம் காண விடாமல் மறைத்த படிதான் இருக்கிறார்கள். சன்னிதி வாசலில் நின்றால் திருப்பாதங்கள் தெரியாது. நாச்சிமார்கள் தெரிவார்கள். நாபியிலிருந்து தாமரை நாளம் புறப்பட்டு கர்பகிருஹ சுவரில் கமலப்பூ மலர்ந்திருப்பது தெரியும். அதிலே பிரம்மா அமர்ந்திருப்பது தெரியும். எம்பெருமான் நாபியிலிருந்து புறப்படும் தாமரை நாளமும், சுவரில் விரிந்துள்ள தாமரையும் அவ்வளவு தூரம் இசைந்து, இழைந்து காணப்படும்.

இவ்வளவும் தெரிந்தும் திருவடிகளைக் காண முடியவில்லை என்பதற்காக வெகு காலமாகவே கோயில் நிர்வாகத்தினர் ஓர் அழகான ஏற்பாடு செய்திருக்கிறார்கள். திருச்சுற்றை வலம் வருகிறபோது, பாதங்





களைக் கடக்கும் இடத்தில் ஒரு சாளரம் அமைத்து, சிறிதாக மூன்று படிகளில் ஏறி அதன் வழியே கண்டு திருவடி தரிசனம் பெற வகை செய்திருக்கிறார்கள்! அந்தச் சிறு மேடை மேல் ஏறி நின்று நாமும் ஆனந்தமாக தரிசிக்கலாம்.

பெருமானுடைய திருக்கோலங்களிலேயே நின்ற திருக்கோலத்தைக் காட்டிலும், இருந்த திருக்கோலத்தைக் காட்டிலும் கிடந்த திருக்கோலத்துக்கே ஏற்றம் மிகுதி. அந்தத் திருக்கோலத்தில் உள்ள பூமி பாலனை ஒருமுறை பகவத் ராமானுஜர் ஸேவிக்க வந்தார். இங்கே ஸேவித்துவிட்டு வெளியே புறப்பட்டுப் போனார். இங்கிருந்து ஆழ்வார்திருநகரிக்குப் போக வேண்டும் என்று அவருக்கு ஆசை. இக்கோயில் அர்ச்சக ஸ்வாமியினுடைய பெண் குழந்தை ஒன்று, நெல்லை உலர்த்திக் கொண்டு வாசலில் அமர்ந்திருந்தது.

''இங்கிருந்து ஆழ்வார்திருநகரி எவ்வளவு தூரம்?'' என்று ராமானுஜர் அந்தச் சிறு பெண்ணைப் பார்த்துக் கேட்டார்.

''கூப்பிடு தூரம்தான். இது தெரியாதா!'' என்றாள் அந்தச் சிறுமி!

''கூப்பிடு தூரமா? அப்படியென்றால் என்ன?'' என்று ராமானுஜர் கேட்க,

''ஆழ்வார் பாசுரம் உமக்குத் தெரியாதா?'' என்று கேட்டுவிட்டு, அச்



நம் மனத்தில் மட்டும் அன்பிருக்குமேயானால், கண்ணன் நமக்கு மிக அருகிலே கூப்பிடு தூரத்தில்தான் இருக்கிறான்.

சிறுமி சொன்னாளாம்:

'' 'வடிவிணை இல்லா மலர் மகள் மற்றை நில மகள் பிடிக்கும் மெல்லடியை, கொடுவினையேனும் பிடிக்க நீ ஒருநாள் கூவுதல், வருதல் செய்யாயே' என்று பெருமானைப் பார்த்து நம்மாழ்வார் கேட்டுக்கொண்டாரே, அதை மறந்து விட்டீரா? இந்த இடத்திலிருந்து 'அடியீர்!' என்று கூப்பாடு போடும்; ஒரு குரல் கொடும். அந்தக் குரலைக் கேட்டு, நான் ஓடி வந்துவிட மாட்டேனா...' என்று நம்மாழ்வார் வேண்டினாரல்லவா. அப்படியானால் ஆழ்வார் திருநகரி கூப்பிடு தூரத்தில்தானே இருக்க வேண்டும்? பாசுரத்திலேயே சொல்லியிருக்கிறதே'' என்று!

'இந்தச் சிறு குழந்தைக்குத்தான் ஆழ்வார் பாசுரத்திலே எத்தனை ஈடுபாடு!' என்று நெக்குருகிப் போனார் ராமானுஜர். மயக்கமாகிக் கீழே விழுந்தார்! அந்த அளவுக்கு இத்திருத்தலங்கள் மீது ஆழ்வார்களுக்கு பக்தி; இறைவனிடத்தில் அவர்களுக்கு அத்தனை பாசம்!

சேயன் அணியன் சிறியன்
மிகப் பெரியன்,
ஆயன், துவரைக் கோனாய்
நின்ற மாயன், அன்று
ஓதிய வாக்கு - அதனைக்
கல்லார், உலகத்தில்
ஏதிலர் ஆம், மெய்ஞ் ஞானம்
இல்.

- இது திருமழிசையாழ்வாருடைய பாசுரம். நம் மனத்தில் மட்டும் அன்பிருக்குமேயானால், கண்ணன் நமக்கு மிக அருகிலே கூப்பிடு தூரத்தில்தான் இருக்கிறான். சிறிய குழந்தையும் அவனே, மிகப் பெரியவனும் அவனே. ஆயர்பாடி மைந்தனும் அவனே! பக்தி உடையவர்களுக்கு எளியவனாக இருக்கிறான். நம் மனத்தில் அன்பில்லாவிட்டால், துவாரகை மன்னனான அந்த மாயக் கண்ணன், வெகுதூரம் தள்ளிப் போகிறான்!

திருப்புளிங்குடி எம்பெருமான் பூமிபாலன் - காசினி வேந்தன் உணர்த்துவதை ஏற்று, மனத்தில் அன்பை இருத்தி, அவனுக்குக் கூப்பிடு தூரத்திலேயே நிற்க நாமும் முயற்சி செய்வோம்.

(தேடுவோம்)

படங்கள்: **ஸ்ரீஹரி**

சித்திரங்கள்: **வேதா**



சோ எழுதிய

மஹாபாரதம்
பேசுகிறது
ரூ. 600/-

வால்மீகி ராமாயணம்
ரூ. 600/-

ஹிந்து மஹா சமுத்திரம்
(3 பாகங்கள்)
ரூ. 600/-

அதிர்ஷ்டம் தந்த அனுபவங்கள்
ரூ. 145/-

இந்து தர்மம்
ரூ. 75/-

எங்கே பிராமணன்?
ரூ. 125/-

வெறுக்கத்தக்கதா பிராமணீயம்?
ரூ. 35/-

1. வந்தேமாதரம்	115.00
2. வாஷிங்டனில் நல்லதம்பி	100.00
3. சர்க்கார் புகுந்த வீடு	100.00
4. கூவம் நதிக்கரையினிலே (பாகம் 1)	130.00
5. கூவம் நதிக்கரையினிலே (பாகம் 2)	75.00
6. கூவம் நதிக்கரையினிலே (பாகம் 3)	40.00
7. துக்ளக் படமெடுக்கிறார்	50.00
8. அதிகப் பிரசங்கம்	45.00
9. இவர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்	50.00
10. யாரோ இவர் யாரோ?	65.00
11. சாதல் இல்லையேல் காதல்	80.00
12. மை டியர் பிரம்மதேவா	30.00
13. இந்தியா எங்கே போகிறது?	20.00
14. துக்ளக் கேள்வி - பதில் I & II	100.00
15. ஒன்னரைப் பக்க நாளேடு	40.00
16. காமராஜை சந்தித்தேன்	60.00
17. புரட்சி கீதை	35.00
18. திரையுலகைத் திரும்பிப் பார்க்கிறேன்	45.00
19. யாருக்கும் வெட்கமில்லை	40.00
20. சட்டம் தலை குனியட்டும்	40.00
21. எங்கே போகிறாய்?	40.00
22. என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?	35.00
23. இறைவன் இறந்து விட்டானா?	35.00
24. இன்பக் கனா ஒன்று கண்டேன்	25.00
25. சாத்திரம் சொன்னதில்லை	40.00
26. சரஸ்வதியின் சபதம்	35.00
27. ஜட்ஜ்மெண்ட் ரிசர்வ்டு	35.00
28. நேர்மை உறங்கும் நேரம்	30.00
29. மனம் ஒரு குரங்கு	40.00
30. ஏன் கூடாது?	40.00
31. இரவில் சென்னை	40.00
32. முகமது பின் துக்ளக்	35.00
33. உறவுகள் இல்லையடி பாப்பா	40.00
34. சம்பவாமி யுகே யுகே	40.00
35. எதற்காக?	35.00
36. உண்மையே உன் விலை என்ன?	45.00

எஸ்.குருமூர்த்தி எழுதிய
தண்ணீர் விட்டோ வளர்த்தோம்
(3 பாகங்கள்)
ரூ. 525/-

பரத்வாஜ் எழுதிய
ஆட்சி முறை - ஒரு பார்வை
ரூ. 200/-

கி.வா.ஜ. எழுதிய

தமிழ்ப் பழமொழிகள் (4 பாகங்கள்) ரூ.400/-

கி.வா.ஜ. பதில்கள் (3 பாகங்கள்) ரூ. 165/-

அபிராமி அந்தாதி விளக்கவுரை (4 பாகங்கள்) ரூ. 300/-

கந்தர் அலங்காரச் சொற்பொழிவுகள் (6 பாகங்கள்) ரூ. 735/-

தேவன் எழுதிய

1. துப்பறியும் சாம்பு - நாடகவடிவம்	ரூ. 65.00
2. சொன்னபடி கேளுங்கள்	54.00
3. மல்லாரி ராவ் கதைகள்	80.00
4. அப்பளக் கச்சேரி	70.00
5. ராஜியின் பிள்ளை	45.00
6. போக்கிரி மாமா	90.00
7. மனித சுபாவம்	65.00
8. ஏன் இந்த அசட்டுத்தனம்	ரூ. 55.00
9. விச்சுவுக்குக் கடிதங்கள்	55.00
10. ராஜத்தின் மனோரதம்	50.00
11. சீனுப்பயல்	80.00
12. பார்வதியின் சங்கல்பம்	60.00
13. பல்லிசாமியின் துப்பு	75.00
14. சின்னஞ்சிறு கதைகள்	65.00
15. ரங்கூன் பெரியப்பா	52.00

அல்லயன்ஸ் (நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
(பு.எண்) 244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மைலாப்பூர் - 600 004



ரீப்ளிகேட் ரியாலிட்டி ஷோக்கள்!



* சுபஸ்ரீ தணிகாசலம்

ஷிஞ்ஜினி லெ‌ன்குப்தா -சமீபகாலமாக செய்தித் தாள்களிலும், தொலைக் காட்சிகளிலும் தலைப்புச் செய்திகளில் இடம்பெற்ற இளம் பெண்ணின் பெயர் இது. 16 வயது நிரம்பிய கொல்கத்தாவைச் சேர்ந்த ஷிஞ்ஜினி, பெங்காலி டீ.வி. சேனல் ஒன்று நடத்திய நடனப் போட்டியில் எப்போதும் போல உற்சாகமாகத்தான் கலந்துகொண்டார். போட்டியின் நடுவர்கள், ஷிஞ்ஜினியின் நடனத்தைப் பார்த்து கன்னா பின்னாவென்று கத்த, ஷிஞ்ஜினி நிஜமாகவே வாயடைத்து, மனசு உடைந்துபோய் விட்டார். பல மேடை நிகழ்ச்சிகளில் திறம்பட பங்கேற்ற ஷிஞ்ஜினி, மன அழுத்தத்தால் வாய் பேச முடியாமல், கை கால்களை அசைக்க முடியாத நிலையில், பெங்களூரில் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

ஷிஞ்ஜினியின் இந்தப் பரிதாப நிலைமைக்குக் காரணம் யார்? ஜெயா டீ.வி.யில் ராகமாலிகா, லிட்டில் மாஸ்டர்ஸ் போன்ற நிகழ்ச்சிகளை நடத்திவரும் சுபஸ்ரீ தணிகாசலத்தைக் கேட்டோம்.

''ரியாலிட்டி ஷோக்கள், எல்லா தரப்பினர்கள் மேலும் மிகப் பெரிய தேவையில்லாத சுமையைக் கொடுக்கும் ஷோக்களாகத்தான் இருந்து வருகின்றன. நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள், தாங்கள் தயாரிக்கும் ஷோக்கள் ஒரு வெற்று ஷோ அல்ல; வெற்றி ஷோ என நிரூபிக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படுகிறார்கள். ஓர் உணர்ச்சிபூர்வமான நிகழ்ச்சியாக அது இருக்க வேண்டும் என்பதற்காக, நிகழ்ச்சிக்கு நடுவர்களாக வருபவர்களிடம், 'கொஞ்சம் கடுமையா பேசுங்க; காரசாரமா பேசுங்க' என்பது போன்ற கட்டளைகளை வேறு அடுக்குகிறார்கள்.

டீ.வி. சேனல்களுக்கும், தயாரிப்பாளர்களுக்கும் டி.ஆர்.பி. ரேட்டிங்கை எப்படி



யாவது அதிகமாக்கியே தீர வேண்டும். ஆகவேதான் நடுவருக்கும் நடுவருக்குமே சண்டை; நடுவர்களுக்கும் போட்டியாளர்களுக்கும் சண்டை. இதில் போட்டியாளர் கண்ணீர் மழை பொழிய மேடையை விட்டு இறங்கினால்தான் நிகழ்ச்சிக்குப் பெருமை என்று சேனல்கள் தப்புக் கணக்கு போடுகின்றன'' என்றார்.

''ஷிஞ்ஜினியின் இந்த நிலைமைக்குக் காரணங்கள் மூன்றே மூன்றுதான்.

* ஷிஞ்ஜினி ஸென்குப்தா



முதல் காரணம், பெற்றோர்கள் தரும் தேவையில்லாத ப்ரெஷர். 'நீ இப்படிச் செய், அப்படிச் செய், இங்கே பார்க்காதே. அங்கே பார்க்காதே, அவ எப்படிப் பாடறா பாரு' என போட்டிக்கு வரும் குழந்தைகளை, பல பெற்றோர்கள் படுத்தும் பாடு இருக்கிறதே அது ஒரு மிகப்பெரிய கொடுமை. குழந்தைகளை அவர்களது போக்கிலேயே விட்டுவிட வேண்டும். அவர்களது திறமைமீது நம்பிக்கை வைத்து, அவர்களுக்குள் தன்னம்பிக்கை வளரும்படி பெற்றோர்கள் பேச வேண்டும்.

இரண்டாவது, நண்பர்கள் கொடுக்கும் ப்ரெஷர். போட்டியில் பங்குகொள்ளும் குழந்தை, ஏதாவது ஒரு காரணத்தால் ரிஜெக்ட் ஆகிவிட்டால், உடனே நண்பர்கள் எல்லாம் சேர்ந்துகொண்டு, 'ஐயையோ, நீ அந்தப் போட்டியிலிருந்து ரிஜெக்ட் ஆயிட்டியா?' என... என்னவோ அந்தக் குழந்தையின் வாழ்க்கையிலேயே அடையக்கூடாத தோல்வியை அடைந்து விட்டது போல கேள்விக் கணைகளைத் தொடுப்பதால், மன அழுத்தத்தில் விழும் குழந்தைகள் ஏராளம். ஒரு ஷோவில் ஜெயித்துவிட்டு வரும் அந்த நபர் அல்லது குழந்தை, சுமார் ஆறு மாத காலங்கள் வரை மட்டுமே, மிகப் பெரிய பாடகராகவோ, நாட்டியக் கலைஞராகவோ பார்க்கப்படுவார்கள். அதன் பிறகு அவர்களை யாரும் கண்டு கொள்ளமாட்டார்கள்.

மூன்றாவது, அக்கம் பக்கத்தினரின் அக்கப்போர் விசாரிப்புகள். 'உங்க வீட்டுப் பையனோ, பொண்ணோ, அந்தப் போட்டில தோத்துட்டாங்களாமே? ஏன் இப்படி...' என ஏதோ துக்கம் விசாரிப்பது போல் விசாரிப்பது இவை எல்லாம் சேர்ந்து ரொம்பவே குழந்தைகளைப் பாதிக்கிறது.

ரியாலிட்டி ஷோக்களில் பங்கு கொள்வதை ஜாலியாக எடுத்துக் கொள்ள வேண்டும். நம் வாழ்க்கையின் நிஜமான வெற்றியையோ, தோல்வியையோ ஒரே நாளில், ஒரே மேடையில் தீர்மானித்து விட முடியாது. எந்த உரிமையில் போட்டியாளர்களை நீதிபதிகளாக வருபவர்கள் சாடுகிறார்களோ, அதே உரிமையில் போட்டியாளர்களும் நீதிபதிகளிடம் தம் பக்கத்தில் உள்ள நியாயத்தை எடுத்துரைக்க வேண்டும்.

ரீமிக்ஸ் பாடல் ஜுரம் போல, இப்பொழுது ரியாலிட்டி ஷோக்களின் ஜுரம் பிடித்துள்ளது. இந்த ஜுரமும் சீக்கிரம் குணமாகிவிடும். அப்படி இல்லையென்றால் காலம் அதனை மாற்றும்'' என்று நம்பிக்கையோடு பேசுகிறார் சுபஸ்ரீ தணிகாசலம்.

– நளினி சம்பத்குமார்



✱ குமாரசாமி

இட்லி... வடை...

கர்நாடகத்தில் சென்ற மே மாதம்தான், பாரதிய ஜனதா கட்சி பதவிக்கு வந்தது. இந்தப் பக்கமா... அந்தப் பக்கமா..? என்று தடுமாறிக்கொண்டிருந்தவர்கள், எப்படியோ மெஜாரிட்டியை 'ஜஸ்ட்' எட்டிப்பிடித்து ஆட்சி அமைத்தார்கள். இரண்டு மாதங்கள் கழித்து, இப்போது பழைய முதலமைச்சர் குமாரசாமி தேவகௌடாவை வம்புக்கு இழுக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

இரண்டு வருடங்களுக்கு முன்னால், அப்போதைய முதல்வர் குமாரசாமி, பெல்லாரியைச் சேர்ந்த சில தொழிலதிபர்களிடம், நூற்றைம்பது கோடி ரூபாய் லஞ்சம் வாங்கியதாக ஒரு குற்றச்சாட்டு எழுந்தது. அப்போது இந்தச் சர்ச்சையைத் தொடங்கிவைத்த பி.ஜே.பி. உறுப்பினர் ஜனார்த்தன் ரெட்டி, தற்போதைய யெதியூரப்பா அரசாங்கத்தில் அமைச்சர்.

இப்போது, அந்தப் பழைய விவகாரத்தை மீண்டும் கையில் எடுத்திருக்கிறார் ஜனார்த்தன் ரெட்டி. 'கூடிய சீக்கிரத்தில் குமாரசாமி குடும்பத்தை ஜெயிலுக்கு அனுப்பாமல் ஓயமாட்டேன்' என்று சபதம் செய்திருக்கிறார்.

குமாரசாமியும் சளைக்கவில்லை, 'என் மேல் தவறு இருப்பது உண்மை என்றால், ஜனார்த்தன்ரெட்டி அதற்கான ஆதாரங்களைப் பகிரங்கமாகக் காட்டட்டும், நான் சவாலுக்குத் தயார்' என்று பதிலடி கொடுத்திருக்கிறார்.

ரமேஷ் அரவிந்த் ஞாபகம் இருக்கிறதா? பாலசந்தரின் கண்டுபிடிப்பான இந்தத் திறமைசாலி இளைஞர், கன்னடத்தில் நடிக்கத் தொடங்கி, தெலுங்கு, தமிழ் என ஒரு ரவுண்ட் வந்து, மீண்டும் கன்னடத்திலேயே சங்கமமாகிவிட்டார்.


கர்நாடக சினிமாவின் சூப்பர் ஸ்டாராக உலா வரும் ரமேஷ், தொடர்ந்து ஒன்பது வெற்றிப் படங்களைக் கொடுத்து அசத்தியவர். அந்த வசூல் சாதனைகளெல்லாம் போதாது என்று, சமீபத்தில் இயக்குநர் அவதாரமும் எடுத்திருக்கிறார்.

ரமேஷ் அரவிந்தை இயக்குநராகத் தூண்டியவர், அவருடைய நண்பர் கமலஹாசன்தான். வெறுமனே தூண்டுவதோடு நிறுத்திக்கொள்ளாமல், ரமேஷ் இயக்கிய, முதல் படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்திலும் நடித்திருந்தார்.

✱ ரமேஷ் அரவிந்த்



தேர்தல்...!



'ராமா, ஷாமா, பாமா' என்ற அந்தக் கன்னடப் படம், தமிழ் சூப்பர் ஹிட் 'சதி லீலாவதி'யின் ரீமேக். அந்த முதல் முயற்சி பிரமாதமாக வெற்றியடைந்ததும், இரண்டாவதாக 'சத்யவான் சாவித்திரி' என்ற காமெடிப் படத்தை இயக்கினார் ரமேஷ் அரவிந்த்.

மூன்றாவதாக, அவர் இயக்கத்தில் வெளிவந்திருக்கும் 'ஆக்ஸிடென்ட்', ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது. 'அசத்திவிட்டார் ரமேஷ்' என்று ரசிகர்கள், விமர்சகர்கள் புகழ்ந்து தள்ளுகிறார்கள்.



* உணவுத் திருவிழா



* ஜனார்த்தன் ரெட்டி

தென்னிந்தியாவின் 'சிக்னேசர்' உணவு எது என்றால், மசாலா தோசை தான்.

பெங்களூருவில் தோசை, காஃபி பிரியர்களை ஒன்றாகத் திரட்டிப் புண்ணியம் தேடிக்கொண்டிருக்கிறது 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' நாளிதழ். 'தோசா காஃபி' என்ற பெயரில் இவர்கள் நடத்திய தேர்தலுக்கு, பிரமாதமான வரவேற்பு.

கர்நாடகா முழுவதும் குறிப்பாக, பெங்களூருவில் தெருவுக்குத் தெரு தோசைக் கடைகளைப் பார்க்க முடியும்.


இந்தக் கடைகளில், யார் மிகச் சுவையான தோசைகளைத் தருகிறார்கள்; எங்கே பிரமாதமான காஃபி கிடைக்கிறது என்று ஒரு வாக்கெடுப்பு நடத்தியது 'டைம்ஸ் ஆஃப் இந்தியா'. நம் ஊர் 'அடையார் ஆனந்தபவன்' உள்பட, பல சிறிய, பெரிய மிகப் பெரிய உணவகங்களெல்லாம் இந்தத் தேர்தலில் பங்கேற்றன.

இதில், டாப் இடங்களைப் பிடித்த ஹோட்டல்களை, ஒரே இடத்துக்கு வரவழைத்து, 'இறுதிச் சுற்று' போட்டி வைத்தார்கள்.

கடைசியில், இந்தச் சுவைத் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள், மல்லேஸ்வரத்தைச் சேர்ந்த சி.டி.ஆர். உணவகம், மற்றும் ஜெயநகரைச் சேர்ந்த கணேஷ் தர்ஷன்!

நம் ஊரிலும், ஒரு இட்லி - வடைத் தேர்தல் நடத்தலாமே!

– என்.ராஜேஷ்வர்



* சந்துரு



* சுரேஷ்

எதுக்கெடுத்தாலும் எகிறுறது; வீதியில் போற சண்டைய வீட்டுக்கு இன்வைட் பண்றது; எப்பவும் 90 டிகிரியைவிட்டு இறங்காம முரண்டு பண்றதெல்லாம்... இப்ப கொஞ்சம் கொஞ்சமாக 'யூத்'கிட்ட குறைஞ்சுக்கிட்டு வருது.

எல்.ஐ.சி பாலிஸி எடுக்கறோமா, இல்லையோ, 'டேக் இட் ஈஸி' பாலிஸி எடுத்துட்டுப் போய்க்கிட்டே இருக்கோம்னு சொல்றாங்க இவங்க...

'டேக் இட்

சந்துரு:

என் ஃப்ரெண்ட்டுக்கு என்னை விட வயசு ஜாஸ்தி. அவனுக்கு மேரேஜும் ஆயிடுச்சு.

அன்னைக்கு வொய்ஃப்கூட ஏதோ பிரச்னை போல. 'ஃபுல்' மப்புல டூவீலரை எடுக்க முடியாம திணறிக்கிட்டு இருந்தான். நைட் 12 மணியைத் தாண்டிடுச்சு. அப்படியே விட்டுட்டுப் போக மனசு வருமா?

(நீங்களாவது தெளிவா இருந்திருக்கீங்க!)

அவன் வீட்டுக்கு அழைச்சிட்டுப் போனேன். அவங்க வொய்ஃப் திட்டினாங்க பாருங்க திட்டு... அவன இல்ல, என்னை!

'என் புருஷனைக் குடிக்க வெச்சு, இத்தனை மணிக்குக் கூட்டிட்டு வர்றியே... நீயெல்லாம் நல்லாயிருப்பியா?' அப்டி இப்டின்னு பொரிஞ்சு தள்ளிட்டாங்க.

ஆனா, நான் எதுவுமே பேசல; அமைதியா வெளியே வந்துட்டேன். எல்லாம் 'டேக் இட் ஈஸி' பாலிஸிதான். என்ன பண்றது?

இருவரும்:

என்னை நீங்க எவ்வளவு வேணும்





ஈஸி'

ணாலும் திட்டுங்க. கோபம் வரும்ங்கறீங்க...? ம்ஹூம்! ஒரு பிட் அளவுக்குக் கூட வராது!

ஏன்னா, அப்படியே 'மைண்ட்'ட மெயின்டெயின் பண்ணிட்டோம்ல...

ஸ்கூல்ல இருந்தே அப்படித்தான். ஒருதடவை மேத்ஸ் டீச்சர் கன்னா பின்னான்னு பேசி, 'நீயெல்லாம் படிக்க வந்தியா...? இல்ல...'ன்னு கண்டபடி கேட்டுட்டாங்க.

க்ளாஸ் ரூமே சிரிப்பா சிரிச்சது. நான் யாரு... சிங்கம்ல!

இதெல்லாம் ஸ்கூல் வாழ்க்கையில சகஜமப்பான்னு, ஈஸியா எடுத்துக்கிட்டுப் போய்க்கிட்டு இருந்தேன்.

இப்பவரைக்கும்... நம்மள யாரும் அசைக்கமுடியலை.

(பில்டிங் ஸ்ட்ராங்தான். ஆனா, பேஸ்மெண்ட்தான் வீக்!)

✱ திருவாரூ



சுரேஷ்:

சில பேரு பேசியே கொல்வாங்க; இன்னும் சில பேரு பேசாமலே கொல்வாங்க. என் ஃப்ரெண்ட் ஒருத்தன் இருக்கான். அவனுக்கு 'அட்வைஸ் அய்யாசாமி'னுதான் பேர்.

பேச ஆரம்பிச்சான்னா, 'வாழ்க்கை ஒரு வட்டம்...



✱ சதீஷ்



✱ கணேசன்

சதுரம்.... செல்வகம்...'னு இஞ்ச் கேப் இல்லாமல் நான்-ஸ்டாப்பா போய்க்கிட்டே இருக்கும்.

ஒரு நாள் நான் சின்னதா ஒரு வார்த்தையை விட்டுட்டேன் அவன்கிட்ட.

ஆரம்பிச்சான் பாருங்க... கரகாட்டக்காரன்ல கவுண்டமணி மாதிரி, 'ஏன்டா... என்னைப் பார்த்து அந்த வார்த்தையக் கேட்ட' அப்டீனு விடவே இல்லை.

'ஸாரிடா... கால்ல வேணாலும் விழுறேன்'னு சொன்னேன்.

'என்னைப் பார்த்துக் கேட்டுட்ட. பரவாயில்ல... இதே இடத்தில் வேறு யாராவது...!' அப்டீனு அடுத்து ஒரு பன்னிரண்டு ரீலு பெட்டியை ஓட்ட ஆரம்பிச்சான்.

முழுசா உட்கார்ந்து கேட்டேன். இப்படி பல விஷயங்களை ஈஸியா எடுத்துக்கறேன். எப்படி என்னோட திறமை!

(அவரு 'அட்வைஸ்' அய்யாசாமி'ன்னா; நீங்க 'பொறுமை' பொன்னுசாமி!)

சதீஷ்:

நூறு, இருநூறு எல்லாம் மலையேறிப் போச்சு. கடன்னா ஆயிரம், இரண்டாயிரம்னு சாதாரணமா ஃப்ரெண்ட்ஸ் கேட்கறாங்க.

'அவசரமா வேணும், அடுத்த நாளே தந்துடறேன்'னு, ஆயிரம் ரூபாய் வேணும்னு வாங்கிட்டுப் போனான்.

'கடன் நட்பை முறிக்கும்'னு பழைய பழமொழியெல்லாம் சொல்லிப் பார்த்துட்டேன்; பார்ட்டி மசியல.

இன்னைக்கு வரைக்கும் அமௌண்ட் வரல! ஒருநாள் சாதாரணமா அவன்கிட்ட கேட்டேன், 'என்ன தான்டா சொல்ற, தர்றேங்கிறியா? இல்லங்கிறியா?'னு.

தெளிவாச் சொன்னான், 'பஞ்ச்' டயலாக் மாதிரி, 'வாங்கின பொருளையும், வாங்கின பணத்தையும் திருப்பிக் கொடுக்கற பழக்கம், எங்க பரம்பரைக்கே கிடையாது'ன்னு.

இதுக்கப்புறம் நான் என்ன பண்ண முடியும்?

(ஒண்ணும் பண்ண முடியாது!)

கணேசன்:

இந்த வெட்கம், மானம், சூடு, சொரணை... இதெல்லாம் நமக்கு எதுக்கு?

'பார்ட் டைம்'மா ஒரு இடத்துக்கு வேலைக்குப் போனேன். 'எவ்வளவு திட்டினாலும் இவன் தாங்குவான், ரொம்ப நல்லவன்' அப்டீன்னு, எதுக்கெடுத்தாலும் குறை சொல்லித் திட்டிக்கிட்டு இருப்பாங்க.

எப்படியாவது சத்தம் போட்டு, என் பார்ட் டைம் வேலைக்குப் பாடை கட்டிடலாம்னு அங்க சீனியரா இருந்த ஒரு குரூப்பே நினைச்சது. நம்மகிட்ட ஆகுமா?

நீங்க என்னை வைச்சு, காமெடி பண்ணினாலும் சரி, இந்த இடத்தை விட்டு நகர்றதா இல்லைன்னு மனசுல நினைச்சுக்கிட்டு, நிலைச்சு நின்னேன்.

எதையுமே பாஸிட்டிவா எடுத்துக்கிட்டா, எல்லாமே ஈஸிதான் பாஸ்!

(எங்க போனாலும் நீங்க பொழைச்சுக்குவீங்க!)

டேக் இட் ஈஸி பாய்ஸ்!

– எம்.திரவியமுருகன்

காஃபி ஷாப்

இரவுக் குறிப்புகள்!

ஆயிரம் பேர் புடை சூழ
அர்த்த ராத்திரியில்
பவனி வரும் அம்மன்

ஏனோ,
அழுகையை வெளிப்படுத்தும்
அடுத்த தெரு நாய்

பசியால்
அழுகின்ற குழந்தையை
தூக்கக் கலக்கத்தினூடே
சமாதானப்படுத்தும் அக்கா

இதில்
எது குறித்தும்
அக்கறையின்றி
மூன்றாவதாய் சேர்த்துக்கொண்டவளோடு
சல்லாபிக்கும் அப்பன்

வழக்கம்போலவே
தூங்குவதாய்
பாவனை செய்து
தலையணை நனைக்கும்
அம்மா.

மாஜினி



பெண்மை என்றொரு வலி!

கிருஷ்ணா

விழிப்பு வந்த பிறகும், எழுந்திருக்க வேண்டுமே என்று அலுப்பாயிருந்தது. இன்னும் கொஞ்சம் படுத்துக்கொள் என்று உடம்பு கெஞ்சியது.

வாசலில் பால்காரனின் மணி சத்தம் கேட்டதும் கட்டிலை விட்டு மெதுவாக எழுந்தேன். மதியம் தூங்குகிற பழக்கமே கிடையாது எனக்கு. ஆனால், இந்த நாலு நாட்களாய், இருபத்துநாலு மணி நேரமும் படுத்தே கிடக்கத் தோன்றியது!

முகத்தை அலம்பிக்கொண்டு, பாத்திரத்துடன் வாசலுக்குப் போனேன்.

''உடம்பு சரியில்லையாம்மா?'' என்று அக்கறையாய்க் கேட்டார் பால்காரர். பத்து வருட வாடிக்கை.

பாலை வாங்கிக்கொண்டு உள்ளே வந்த பின்னும், கால்களில் தளர்ச்சி. இனி ஓய்வெடுக்க முடியாது! இன்னும் ஒரு மணி நேரத்தில் பள்ளியிலிருந்து குழந்தை வந்துவிடுவான்; மூன்றாவது படிக்கிறான்.

நேற்று டாக்டரிடம் காட்டியாகி விட்டது. ''நாற்பது வயதைத் தாண்டிவிட்டாலே இந்தக் காலத்துப் பெண்களுக்கு இது வந்து விடுகிறது'' என்றார் டாக்டர்.

இவருக்குத்தான் கவலை.

''இவளை இதுவரை இத்தனை சோர்வாய்ப் பார்த்ததே இல்லை டாக்டர்'' என்றார்.

டாக்டர் புன்சிரிப்புடன் இவரின் கவலையை அங்கீகரித்தார்.

''இவங்க சக்தியை எல்லாம் இரத்தப் போக்கு கொண்டு போயிடுச்சு. வேலைக்குப் போறாங்களா?''

''இல்லை... ஹவுஸ் ஒய்ஃப்தான்.''

''அந்தவிதத்திலே அதிர்ஷ்டசாலிதான். வேலைக்குப் போற பெண்கள், இந்தச் சமயத்துல படற அவஸ்தை இருக்கே... அப்பப்பா'' என்ற டாக்டரின் குரலில் தாய்மை தெரிந்தது.

''எங்க அம்மா, பாட்டியெல்லாம் இவ்வளவு கஷ்டப்பட்டதா தெரியலியே...'' என்றார் இவர்.

''கர்ப்பப் பைக்கு வேலை குறைஞ்சதுதான் முக்கிய காரணம். இப்பல்லாம் ஒரு குழந்தைக்கு மேலே பெத்துக்கறது இல்லையே! அப்புறம் வேலையும் குறைஞ்சு போச்சு; சாப்பாட்டுல சத்தும் குறைஞ்சு போச்சு'' என்றபடி ஊசி போட்டார். ஒரு வாரத்துக்கு மாத்திரையும் எழுதித் தந்தார்.

பால் பொங்கவே, அடுப்பை அணைத்தேன். அதேநேரம் வாசலில் யாரோ வரும் சத்தம். இவரின் தங்கைதான்; பக்கத்து ஊரில் இருக்கிறாள்.

''அண்ணி, தலைவலி மண்டையைப் பிளக்குது. சூடா காஃபி கொடுங்க'' என்று அதிகாரம் செய்தபடி உள்ளே வந்தாள்.

உடம்பு சரியில்லாதபோது, விருந்தினர்கள் வீட்டுக்கு வந்தால் எரிச்சல்தான். எனக்கும் வந்தது. உடனே அந்த எண்ணத்தை உதறிவிட்டு, காஃபி போட சமையலறைக்குள் சென்றேன்.

தொலைக்காட்சியை ஓட விட்ட நாத்தனார், எம்.டீ.வி, சன் மியூசிக், இசையருவி... என்று மாறி மாறி பாடல்களை அலறவிட்டாள். தலைவலி என்றாளே,



“ஏம்மா
அழறே...
வலிக்குதா
உடம்புக்கு?”
என்ற மகனை, இழுத்து
அணைத்துக் கொண்டேன்!



''டாக்டர்கிட்டே எதையும் மறைக்கக் கூடாதுன்னு தெரியுமில்லே?''

''தெரியும் டாக்டர்.''

''அப்போ, ஏன் உள்பாக்கெட்ல பணத்தை மறைச்சு வைச்சிருக்கீங்க?''

- அ.க.பாலசுப்ரமணியன்

பொய்யா? எனக்குப் பாடல்களின் அலறலால் தலைவலி வந்துவிட்டது.

காஃபி குடித்தபின் அவள் மாமியார், கணவர் பற்றி வம்பு பேசிவிட்டுக் கிளம்பினாள்.

அவள் குடித்த காஃபி டம்ளர் ஹால் டீப்பாய் மேலேயே இருந்தது.

என் முகத்தைப் பார்த்தவுடன் பால்காரருக்கு ஏற்பட்ட அக்கறைகூட, என் நாத்தனாரிடம் காணாதது ஏமாற்றமாய் இருந்தது.

முன்பெல்லாம் உறவினர்கள் வீட்டுக்கு வந்தால், காய்கறி நறுக்குவது, பாத்திரம் தேய்ப்பது என்று உதவியாய் இருப்பார்கள். உறவினர் வருகைக்கும், விருந்தினர் வருகைக்கும் வித்தியாசம் தெரியும். இப்போது எல்லோருமே விருந்தினர்கள்தான்.

நேரத்தைப் பார்த்தேன். மகன் இதோ வந்துவிடுவான். அவனுக்கு ஏதாவது டிஃபன் செய்ய வேண்டும் என்று நினைத்திருந்தேன். நாத்தனாரின் வருகையால் கெட்டுவிட்டது. பசியோடு வருவானே குழந்தை!

களைப்பைப் புறம்தள்ளி, சாதத்தில் நெய்விட்டு, தெளிவாய் ரசம் ஊற்றிப் பிசைந்து வைத்தேன்.

''அம்மா'' என்று வெளி வாசலிலேயே கன்றுக்குட்டியாய் அழைத்தபடி வந்தான்.

''இன்னிக்கு மிஸ் என்னை 'குட் பாய்'னு சொன்னாங்கம்மா. பக்கத்துல உட்கார்ந்திருப்பானே ராகவ், அவன் என்னைக் கையிலே கிள்ளிட்டான்.''

பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பியதும், மடமடவென அங்கு நடந்ததை ஒப்பிப்பான்.

''என்ன டிஃபன்ம்மா?''

''ரசம் சாதம்டா கண்ணா.''

மூஞ்சி சுருங்கிப் போனது.

''போம்மா! தோசை, பூரி ஏதாவது செய்யக்கூடாதா? காலையிலே சொன்னியே!'' என்று கோபப்பட்டான்.

அவனை அணைத்தபடி சொன்னேன்.

''அம்மாவுக்கு உடம்பு சரியில்லேடா கண்ணா! நாளைக்குச் சரியாயிடும். எல்லாம் செஞ்சு தர்றேன்.''

ஒரு நொடி என்னையே பார்த்தான். கன்னத்தில் பசக்கென முத்தம் தந்தான்.

''நான் ஏதும் உதவி செய்யட்டுமா, உனக்கு?''

அவன் அப்படிக் கேட்டதும் நெகிழ்ந்து போனேன்.

''ஏம்மா, அழறே! வலிக்குதா உடம்பு?'' என்றவனை இழுத்து, அணைத்துக்கொண்டேன்.

''சாப்ட்டுட்டு, விளையாடிட்டு வா'' என்றதும், தலையசைத்தபடி ஓடினான்.

இரவு உணவு சமைத்து முடிப்பதற்குள் உடம்பு ஆட ஆரம்பித்துவிட்டது. போட்டது போட்டபடி போய்ப் படுத்துக்கொண்டேன்.

ஆறரை மணிக்கு என் கணவரும், அவர் தோளில் தொங்கியபடி மகனும் வந்தனர்.

''என் தங்கச்சி ஃபோன் பண்ணினாள். வந்திருந்தாளாமே, வீட்டுக்கு.''

தலையசைத்தேன்.

''சாப்பிட ஏதும் கொடுத்தியா?''

''காஃபி மட்டும் குடிச்சா.''

''ஏன் டிஃபன் ஏதும் கொடுக்கலியா?''

அவரின் கேள்வியும், என் உடல் சோர்வும் என்னை உக்கிரமாக்கிவிட்டது.

''ஆமாம், பெரிய பாசமலர் அண்ணன், தங்கை பாசம். இங்கே நான் ஒருத்தி நொந்து நூலாய்ப் படுத்திருக்கேன். எப்படி இருக்கன்னு கரிசனமாய் ஓர் ஆறுதல் வார்த்தை கிடையாது. நான் இருந்தா என்ன... செத்தா என்ன?''

அழுகை கூடவே வந்தது. குலுங்கி அழ ஆரம்பித்தேன்.

அவரும், என் மகனும் எனது இரு பக்கமும் அமர்ந்துகொண்டனர். நான் அழுது முடித்தபின் என் கணவர் கேட்டார்.

''என்னாச்சு? ரொம்ப முடியலியா? நான் வேணும்னா நாளைக்கு லீவு போட்டுடவா?''

தோளைப் பிடித்து அணைத்துக்கொண்டார்.

மிரட்சியுடன் அமர்ந்திருக்கும் மகனையும், கவலை தோய்ந்த முகத்துடன் என்னையே பார்த்த கணவரையும் நோக்கினேன்.

'கடவுளே, ஏன் எனக்கு இப்படி ஒரு வலியைத் தந்தாய்' என்று என்னை நானே நொந்துகொண்டேன். அவர்களைப் பார்த்துச் சிரித்தேன்.

''சரி, சாப்பிடலாமா? கையை அலம்பிக்கிட்டு வாங்க'' என்றபடி எழுந்தேன்.

அவர்கள் முகம் இயல்புக்கு மாறுவதை ரசித்தபடி, என் உடல் சோர்வைப் பொறுத்தபடி சாப்பாட்டுத் தட்டுகளை எடுத்து வைக்க ஆரம்பித்தேன். ○



சமீபத்தில் கோலிவுட்டில் பரபரப்பாகப் பேசப்படும் 'நியூட்டனின் மூன்றாம் விதி' திரைப் படம் நா.முத்துக்குமாரின் கவிதை தொகுப்பை ஞாபகப்படுத்தவே... இயக்குநரிடம் பேசினோம். ''அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. நம்மைப் போன்ற ஒரு சராசரி மனிதன், பணபலம், ஆள் பலம், அதிகாரபலமுள்ள ஒருவனை ஒரே நாளில் இரண்டு மணி நேரத்தில் எப்படிப் பழி வாங்குகிறான் என்பதுதான் கதை. (அடேயப்பா! கின்னஸ்ல சேர்ப்பாங்களா!) சூர்யாவுக்கு இரண்டு கெட்-அப்பில் வரும் மூளை பலமுள்ள சாமான்யன் வேடம்'' என்கிறார் இயக்குநர் தாயுமுத்து செல்வம்.

– அமிர்தா

● 'நியூட்டனின் மூன்றாம் விதி' படத்தில் சூர்யா



* 'நாயகி' ஸ்வாதி

மொழியில் சொல்லியிருக்கிறேன். அவர்கள் காதலாலும் சமூகத்தாலும் பாதிக்கப்படு வதைப் பதைபதைப்புடன் படைத்திருப் பதாய் நம்புகிறேன்'' என்று கூறும் சசி குமார், 80களில் தம் படம் பயணம் செய்த விதத்தை விளக்கியுள்ளார்.

''1980களில் இருந்த சந்தோஷமும் பிரச் னையும்தான் இன்றும் இருக்கின்றன. இதைச் சொல்லாமல் சொல்லவே, இந்த ஃப்ளாஷ் பேக் உத்தியைத் தேர்வு செய்தேன். ஆனால், நடைமுறையில் 80களில் நுழைவது சுலபமாயிருக்கவில்லை. அதற்காக மிகவும் சிரமப்பட்டோம். அந்தக் காலகட்டத்துக்கு ரசிகர்களை அழைத்துச் செல்ல வேண்டும் என்று கடுமையாக உழைக்க வேண்டியிருந் தது. 1980 காலகட்ட மக்கள் நடை, உடை, ஊர்களின் தோற்றம், வண்டி, வாகனங்கள், பேச்சு, சினிமா... எனப் பலவற்றையும் பற்றித் தகவல் சேகரித்து வைத்துக் கொண்டுதான் படப்பிடிப்பைத் தொடங்கினோம். செட் போட்டுப் படமாக்கினோம். உடைகளுக்காக மிகுந்த சிரமப்பட்டோம்.''

இந்தக் கதைக்கு நடிகர் களைத் தேடவும் சசிகுமார் மிகவும் கஷ்டப்பட்டிருக் கிறார்.

நடிக்க மறுத்த நாயகி!

பாலா, அமீர் மாதிரி அவர்களின் சிஷ்ய ரான சசிகுமாரும், தமது முதல் படமான 'சுப்ரமணியபுரம்' மூலம் தமிழ் சினி மாவை, தம் பக்கம் ஈர்த்துள்ளார். அவருட னான சந்திப்பிலிருந்து...

''ஐந்து இளைஞர்களின் ஆட்டோ பயோகிராஃபியை, எனக்குத் தெரிந்த

''உண்மைதான். முதலில் ஒரு புதுமுக நடிகரைக் கேட்டேன். அவர் நடித்த முதல் படமே வெளிவராத நிலையில், காட்சியை மாற்ற வேண்டும்; கதையை மாற்ற வேண் டும் என்றார். இவரை வைத்துப் படத்தை முடிக்கமுடியுமா என்று பயந்து அவரை விலக்கிவிட்டேன். இதுதான் கதை. அதை யாருக்காகவும் மாற்ற மாட்டேன். என்



* 'சுப்ரமணியபுர' வாசிகள்...

கதைக்கு ஏற்றவர்களைத் தேடினேன்; நடிக்க வைத்தேன்.''

தெரியுமா...? சசிகுமாரும் ஒரு நாயகராக நடித்து, படத்தை இயக்கித் தயாரித்தும் இருக்கிறார்!

''எனக்கு நடிக்கும் எண்ணம் இல்லை. என் கேரக்டரில் வேறு ஒருவர் நடிப்பதாக இருந்தது. அவர் சரிப்பட்டு வரவில்லை. பிறகுதான் நான் நடிக்க வேண்டியதாயிற்று. முதலில் 'டீம் ஒர்க்ஸ்' நிறுவனம்தான் படத்தைத் தயாரிப்பதாக இருந்தது. ஆனால், அவர்கள், பருத்திவீரனை வெளியிடவே பல போராட்டங்களைச் செய்ய வேண்டியிருந்தது. எனவே, என் படத்தை நானே தயாரித்தேன். நடிகர்கள், எனக்குத் திருப்தி வராமல் திரும்பத் திரும்ப பல டேக் வாங்கிய போது பதற்றப்பட்டார்கள். ''நீங்கள்தான் தயாரிப்பாளர். இவ்வளவு செலவழிக்கிறீர்களே...'' என்றார்கள். 'ஓர் இயக்குநராக நான் சொல்வதை மட்டும் நீங்கள் கேட்டால் போதும்'' என்றேன்.

கதாநாயகி ஸ்வாதி, நடிக்கவே முதலில் ஒப்புக்கொள்ளவில்லை என்பது எத்தனை பேருக்குத் தெரியும்!

''ஸ்வாதியை செல்வராகவன் இயக்கிய தெலுங்குப் படம் பார்த்துத் தேர்ந்தெடுத்தேன். 'மா' டி.வியில் 'கலர்ஸ் ஸ்வாதி' என்றொரு நிகழ்ச்சி வருகிறது. அதில் நம்மூர் பெப்சி உமா மாதிரி ஸ்வாதி பிரபலம். அணுகிய போது அவருக்கு ஆர்வம் இல்லை. தமக்கு விருப்பம் இல்லையென்பதை நேரில் சொல்லவே சென்னைக்கு வந்தார். படக் குழுவினர், இளைஞர் கூட்டணியைப் பார்த்த பிறகு, மனம் மாறினார். நடிக்க சம்மதித்தார்.

- இயக்குநர் சசிகுமார் பேட்டி



பாலாவுடனும் அமீருடனும் உதவி இயக்குநராகப் பணியாற்றியுள்ள சசிகுமார், அவ்விருவரிடம் கற்றதும் பெற்றதும் மிக அதிகம் என்கிறார்.

''அமீர் நிறைய திட்டுவார். ஆனால் அது திட்டல் இல்லை; தீட்டல்!''

– மதுமிதா

மாடர்ன்



டாக்டராக இருப்பது கஷ்டமா, நோயாளியாக இருப்பது சிரமமா? நீங்கள் இதில் யாரென்பதைப் பொறுத்து பதில் இருக்கும். சீக்கு வந்து சிக் லீவ் எடுத்து ஆஸ்பத்திரிக்குப் போனால், சட்டுப்புட்டென்று டாக்டரைப் பார்த்துவிட முடியாது.

டாக்டரின் கஷ்டம் வேறு மாதிரி. பொழுது விடிந்து பொழுது போய் விதம் விதமான நோக்காடு, மருந்து, மாத்திரை... 'டாக்டர் போன வாரம் எழுதிக்கொடுத்த மருந்து முழுசாச் சாப்பிட்டாச்சு. இன்னும் வயிறு வலிக்குது.' போன வாரம் என்ன மருந்து எழுதிக் கொடுத்தது? மருந்துச் சீட்டையும் சேர்த்து இவர் முழுங்கி விட்டாரா?

இரண்டு தரப்புக்கும் துணை புரிய தொழில்நுட்பம் முன் வந்திருக்கிறது. நோயாளி முனையில் இருந்து பந்து வீச்சைத் தொடங்கலாம். காலையில் சாப்பிட வேண்டிய மருந்தை மதியத்தில் சாப்பிட்டு, ராத்திரி முழுங்க வேண்டிய மாத்திரையைச் சாப்பிட மறந்து தூங்கிப் போய்விடுகிறீர்களா? அல்லது மனைவிக்கு வாங்கிய மருந்தைத் தவறுதலாகச் சாப்பிட்ட அவதியா? கவலையை விடுங்கள். டிஜிட்டல் மருந்து பெட்டி வந்துகொண்டிருக்கிறது. டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்து மாத்திரையை ரகம் வாரியாகப் பிரித்து அதற்குள் அடுக்கி, எப்போது சாப்பிட வேண்டும்; யார் சாப்பிட வேண்டும் என்று தகவல்களைப் பதிந்து வைத்தால் போதும். 'காலை வணக்கம், எழுந்து இந்த மாத்திரையைச் சாப்பிடவும்' என்று மருந்து பெட்டியோடு இணைந்த கம்ப்யூட்டர் சீராக அறிவித்துவிடும். மருந்து மாற்றி எடுத்தால், பெட்டி எச்சரிக்கை மணி எழுப்பி உஷார்ப்படுத்தும்.

டாக்டர் முனையில் இருந்து பந்து வீச்சு தொடர்கிறது. பேஷண்ட் முதல்முறை வந்ததும், பிள்ளையார் சுழி போட்டு மருத்துவமனை கம்ப்யூட்டரில் கணக்குத் தொடங்கப்படுகிறது. நோய் விவரம் அலசி ஆராயப்பட்டுப் பதிவாகிறது. மாத்திரை பெயர், சாப்பிடும் வரிசைக் கிரமம் இதையெல்லாம் மருந்துச் சீட்டில் கிறுக்காமல் டாக்டர் கம்ப்யூட்டரிலேயே விவரம் பதிகிறார். மருந்துகடை கம்ப்யூட்டருக்கு இணைப்பு உள்ளதால், நோயாளி அங்கே அடையாள அட்டையைக் காட்டியதுமே சரியான மருந்து, சரியான அளவு தரப்படுகிறது. மருந்து வாங்கிப் போனவர் வீட்டு கம்ப்யூட்டரும், அதில் இணைந்த டிஜிட்டல் மருந்து பெட்டியும் இந்த கணினி வலையில் இணைந்தால், இன்று காலையில் மாத்திரை சாப்பிட்டது வரை டாக்டர் கம்ப்யூட்ட



15 மருத்துவம்!

ருக்குத் தகவல் தெரிகிறது. மாத்திரை தீர்கிற நேரம் என்றால், நோயாளி வீட்டுக் கம்ப்யூட்டரே மருந்து கடை கம்ப்யூட்டரோடு தொடர்புகொண்டு வரவழைக்கும். பேங்க் கணக்கிலிருந்து இன்டர்நெட் மூலம் அதற்குப் பணம் செலுத்தவும் வழி உண்டு. இதெல்லாம் கூடிய சீக்கிரமே வரப் போகிற வசதிகள்.

நோயாளியின் ரத்த அழுத்தம், இதயத் துடிப்பு, பிரியும் நீரில் சர்க்கரை... இப்படி பலவற்றையும் டாக்டர் வராமலேயே பரிசோதிக்கும் மின்னணுக் கருவிகளை வீட்டு கம்ப்யூட்டரில் இணைப்பது இன்னொரு சௌகரியம். எக்குத்தப்பாக பிளட் பிரஷர் எகிறினால், வீட்டு கம்ப்யூட்டர் ஆதிமூலமே என்று, டாக்டர் கம்ப்யூட்டருக்கு அவசரச் செய்தி அனுப்பும். டாக்டர் பயணம் செய்துகொண்டிருந்தால், அவருக்கு 4ஜி மொபைலில் செய்தி பறக்கும். அதை இன்டர்நெட்டில் இணைத்து, உடனே நோயாளியை மருத்துவமனையில் சேர்க்கவோ, உடனடி நிவாரணமாக மருந்து எழுதித் தரவோ முடியும். எல்லா கம்ப்யூட்டர்களும் செயல் ஒழுங்கு முறையில் இணைக்கப்படுவதால், ஒரு டாக்டர் இல்லாவிட்டாலும் இன்னொருவருக்குத் தகவல் வழிமாற்றப்படும். உடம்புக்கு என்ன பண்ணுது என்று புதுசாக விசாரிக்காமல், அவர் உடனே நடவடிக்கை எடுக்க நோயாளிக்கு அதுவரை அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்த சகல விவரங்களும் பட்டனைத் தட்டியதும் தெரிந்துவிடும்.

இதையே இன்னும் கொஞ்சம் விரிவுபடுத்தி, ரத்தப் பரிசோதனை, எக்ஸ் ரே, ஸ்கேனிங்... போன்ற சோதனைகளை நோயாளி உடம்பில் செய்யும் சோதனைக் கூடங்களையும் மருத்துவ வலையில் இணைத்துவிடலாம். நோயாளியின் நெஞ்சக்கூட்டு எக்ஸ்ரே லேபில் எடுத்து முடித்த அடுத்த வினாடி டாக்டரின் கம்ப்யூட்டரில் தெரிவதால், பேஷண்ட் திரும்ப வருவதற்குள் அவர் மருந்து எழுதி வைத்திருப்பார். க்ளினிகல் லேப் உபதொழிலாக நடத்தும் டாக்டர்கள், அந்த வருமானத்தையும் பைசா சுத்தமாக அவ்வப்போது சரிபார்க்க இன்னும்கூட வசதி!



எல்லாம் சரிதான். டாக்டர், லேப், மருந்துகடை இப்படிச் செலவு செய்வது போதாது என்று கம்ப்யூட்டர், டிஜிட்டல், மருந்து பெட்டி என்று வருங்காலத்தில் இன்னும் காசு கையைவிட்டுப் போக வேண்டியிருக்குமே என்ற யோசனையா? அதை நினைத்து இப்போது கவலைப்பட்டால் அல்சர் வரும். ஜாக்கிரதை!

மேஷம் : தொழில்ல புதிய மாற்றம் ஏற்படப் போகுதுங்க. உடல் ஆரோக்கியம் நல்லா இருக்குமுங்க. வீடு, மனை மூலமாக ஆதாயம் கிட்டுமுங்க. பொறுப்புள்ள பதவிங்க தேடி வருமுங்க. கடன் சுமையெல்லாம் தீருமுங்க. நினைத்த காரியம் நடக்குமுங்க. குழந்தைகள் மூலம் சந்தோஷம் வந்து சேருமுங்க. ராகு / கேது / குரு வழிபாடு நன்மை தருமுங்க!

ரிஷபம் : குழந்தைகள் மேல் கொஞ்சம் கவனம் செலுத்துங்க. வியாபாரம் நல்ல நிலையில் இருக்குமுங்க. புதிய தொழில் துவங்க நல்ல காலமுங்க. வேலையில் உயர்வு உண்டுங்க! வெளிநாடு போவீங்க! புதிய பொருட்கள் வாங்கிக் குவிப்பீங்க. எதிர்பாராத நேரத்துல சுபகாரியம் நடக்குமுங்க. ராகு / கேது வழிபாடு நன்மை தருமுங்க.

மிதுனம் : பணவசதி பெருகப் போகுதுங்க. வீடு, மனை வாங்க நல்ல நேரமுங்க. வாகன யோகமும் உண்டுங்க. உத்தியோகத்துல உயர்வு ஏற்படுமுங்க! வெளியூரிலிருந்து இனிப்பான செய்தி வருமுங்க. பட்டங்களும் பதவி உயர்வுகளும் உங்களைத் தேடி வருமுங்க. பணிவோட நடந்துக்குங்க. எல்லாம் நன்மையாய் முடியுமுங்க. வாரந்தோறும் சனீஸ்வர வழிபாடு நன்மையளிக்குமுங்க.



கடகம் : எதிலும் கவனமுடன் செயல்படுவது நல்லதுங்க. இல்லற வாழ்க்கைல அனுசரணையோடு நடந்துக்குங்க. உடல் ஆரோக்கியம் நல்ல நிலையில் இருக்குமுங்க. எதிர்பார்த்தபடி புதிய வேலை வாய்ப்புகள் வீடு தேடி வருமுங்க. குழந்தைகள் நலத்தில் அக்கறை காட்டுங்க. பணியிடத்தில் அனுசரித்துப் போங்க. ராகு / கேது / குரு / சனி வழிபாடு நன்மையளிக்குமுங்க.

சிம்மம் : உங்கள் வாக்கு மேன்மையடையுமுங்க. தடைப்பட்ட திருமணம் நடக்கப்போகுதுங்க. வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவைங்க. உடல் நலத்துல அக்கறை செலுத்துங்க. பதவி வரும்போது பணிவா இருங்க. வழக்கு வெற்றி அடையுமுங்க. ராகு / கேது / குரு வழிபாடு நன்மை யளிக்குமுங்க.

கன்னி : உங்களுக்கு மகிழ்ச்சிகரமான வாரமுங்க. வெளிநாடு போவீங்க. பொன் பொருள் சேர்க்கை இருக்குமுங்க. புதிய தொழில் தொடங்குவீங்க. காதல் இனிக்குமுங்க. பதவிங்க தேடி வருமுங்க. கலைத் துறையினர் மகிழ்ச்சி அடையும் வகையில் தகவல்கள் வருமுங்க. சனீஸ்வர வழிபாடு மேலும் நன்மையை அதிகப்படுத்தும்.

துலாம் : வெளியூர்ப் பயணம் செல்வீங்க. உத்தியோகத்துல உயர்வு ஏற்படப்போகுதுங்க. இல்லற வாழ்க்கை ஜம்முன்னு இருக்குமுங்க. வியாபாரம் வெற்றிகரமா நடக்குமுங்க. வழக்குல வெற்றி பெறுவீங்க. அயல்நாட்டு

நண்பர்கள் மூலம் ஆதாயம் கிட்டுமுங்க. கைப் பொருள்மீது கவனம் தேவைங்க. ராகு / கேது / சனி வழிபாடு நன்மையைத் தருமுங்க.

விருச்சிகம் : நெருங்கிய நண்பர்கள் உங்களை விட்டு விலகப் போறாங்க. தொழில்ல ஏற்றம் இருக்குமுங்க. விட்டுக் கொடுத்துப் போவது நல்லதுங்க. வாகனத்தில் செல்லும்போது உஷாரா இருங்க. வேறு பணி தேடும் முயற்சியை சற்று தள்ளி வையுங்க. ராகு / கேது வழிபாடு நன்மை யைத் தருமுங்க.

தனுசு : வீண் விரயங்கள் ஏற்படுமுங்க. பூர்வீகச் சொத்து பிரிவினை ஆகுமுங்க. எதிர் பார்த்த உத்தியோக மாற்றம் உண்டுங்க. கல்வியில் மேன்மை அடைவீங்க. மனைவி வழியில் ஆதாயம் உண்டாகும். நண்பர்கள் விலகிச் செல்வார்கள். ராகு / கேது / குரு / சனி வழிபாடு நன்மை யளிக்குமுங்க.

மகரம் : மன உளைச்சல் தீருமுங்க. குடும்பப் பிரச்னைகள் இனி இருக்காதுங்க. கொடுக்கல் வாங்கல் நல்ல நிலையில் இருக்குமுங்க. எதிர் பார்த்த இடத்தில் வேலை மாற்றம் ஏற்படுமுங்க. வீடு / மனை வாங்க ஏற்ற நேரம் இதுங்க. வியா பாரத்துல எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டுங்க. ராகு / கேது / குரு / சனி வழிபாடு நன்மையைத் தரும்.

கும்பம் : பணம் பல வழிகளில் வந்து பாக்கெட்டை நிரப்பும்ங்க. நீண்ட காலமாக எதிர்பார்த்த காரியம் நடை பெறும்ங்க. கல்வி வளம் மேம்படுமுங்க. வெளிநாடு செல்ல அழைப்பு வருமுங்க! புதிய தொழில் துவங்க ஏற்ற கால முங்க. கொடுக்கல் வாங்கல் சிக்கல் தீருமுங்க. எதிரிங்க தொல்லை இருக்காது. சனீஸ்வர வழிபாடு நன்மையளிக்குமுங்க.

மீனம் : உடல் ஆரோக்கியம் நல்ல நிலையில் இருக்குமுங்க. அயல்நாட்டு மனிதர்கள் மூலம் ஆதாயம் கிட்டுமுங்க. வீடு / மனை வாங்கும் யோகம் ஏற்படுமுங்க. குழந்தைகள் வழியில் சுபச் செலவு உண்டுங்க. புதிய வேலைவாய்ப்புங்க தேடி வருமுங்க. மகான்களின் தரிசனம் கிட்டுமுங்க. வழக்கு வெற்றி பெறுமுங்க. வாரந் தோறும் சனி/ குரு வழிபாடு நன்மையளிக்குமுங்க.

13.07.08 முதல் 19.07.08 வரை

நடக்குமா? நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்

உலகே மாயம்

ஆஸ்திரேலியாவின் இயான் உஷர் என்பவர், தமது மணவாழ்க்கை முறிந்து போன வருத்தத்தில், இ-பே என்கிற இணைய ஏலத்தில் தம் வாழ்க்கையையே ஏலம் விட்டுக்கொண்டார்! மூன்று படுக்கையறை கொண்ட வீடு, பார்த்துக்கொண்டிருந்த வேலை, பயன்படுத்திய மோட்டார் சைக்கிள், பாசத்துக்குரிய நண்பர்கள்... என்று எல்லாம் சேர்ந்து 3,99,300 ஆஸ்திரேலிய டாலர்களுக்கு விலை பேசியும் முடித்துவிட்டார். எல்லாவற்றையும் விற்றுவிட்டுப் புது மனிதராக வாழ்க்கையைத் தொடங்கிவிட்டார்.

கதை அத்தோடு முடிந்ததா என்றால், அதுதான் இல்லை.

நியூஸிலாந்தின் வால்டர் ஸ்காட் என்கிற இளைஞர், தம் ஆன்மாவை ஏலம் விடப் போவதாய் அறிவித்திருக்கிறார்! காரணம், தம் பழைய ஆன்மாவுக்கு மேரேஜ் செய்து பார்க்கும் ஆசையாம்.

'நான் அதைப் பார்க்க முடியாது; தொடவோ, உணரவோ முடியாது. ஆனாலும், அதை என்னால் விற்றுவிட முடியும்' என்கிறார் நம்பிக்கையோடு!

(வெறுங்கையில் முழம் போடுவது என்று இதைத்தான் சொல்வார்களோ?)


அமெரிக்காவின் டெக்ஸாஸ் காய் கனி ஆராய்ச்சி நிலையத்தில், தர்ப்பூசணியின் புகழ்பாட ஆரம்பித்திருக்கிறார்கள். ஓர் ஆண்டு தர்ப்பூசணி சாப்பிட்டால், வயாக்ரா சாப்பிட்ட எஃபெக்ட் இருக்குமாம்.

தர்ப்பூசணியில் உள்ள சிட்ரலின், உடலிலுள்ள ரத்தக் குழாய்களை ரிலாக்ஸ்டாக வைத்துக்கொள்ள உதவுகிறதாம். வயாக்ரா செய்வதும் இதே வேலையைத்தான்.

ஆனால், தர்ப்பூசணியில் எஃபெக்ட் மட்டும்தான் இருக்கும். வயாக்ராவுக்கு மாற்றாக மருத்துவத் துறையில் பயன்படுத்த முடியாது.

(கோடைக்காலத்தில் ரோட்டோரமாய் குவித்து வைத்திருப்பார்கள். குளிர்காலத்தில் என்ன செய்வது என்று நீங்கள் கேட்கக் கூடாது.)

✱ ரிலாக்ஸ் தர்பூசணி



போப்பாண்டவர் பெனடிக்ட் பற்றி, சில வருஷங்களுக்கு முன்பு காரசாரமாக நடந்த சர்ச்சைக்கு, இப்போதுதான் வாய் திறந்து பதில் சொல்லியிருக்கிறது வாடிகன்.

இத்தாலியின் பிரபல ஃபேஷன் நிறுவனமான ப்ராதா தயாரிக்கும் ஷூ வகைகளைத்தான், போப் அணிந்து கொள்கிறார் என்ற செய்தி காற்றாட ஆரம்பித்தது. அது உண்மையா... வெறும் வதந்தியா...? போப்

ஆன்மா ஒரு தரம்...



✱ போப்பாண்டவர் பெனடிக்ட்...

தரப்பிலிருந்து எந்தப் பதிலும் இல்லை.


ஆனால், இப்போது அது ஒரு விளையாட்டுத்தனமான செய்தி என்று அறிவிப்பு வந்திருக்கிறது. போப் அணியும் ஆடை அணிவகைகள் அனைத்துமே, மரபைப் பின்பற்றித்தான் தயாரிக்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அதைத் தயாரிப்பது ஃபேஷன் நிறுவனமா... இல்லையா? என்ற தகவல் மட்டும் மிஸ்ஸிங்.

அமெரிக்காவின் ஃப்ளோரிடா மாகாணத்தில் லிண்டா யூரியோஸ்ட் என்கிற பெண், ஆசைஆசையாக ஒரு நாயை வளர்த்து வந்திருக்கிறார். வீதியில் ஹாயாக வாக்கிங் போய்க்கொண்டிருந்த செல்லத்தைப் பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள், விலங்குகள் கட்டுப்பாட்டு அலுவலர்கள்.



காணாமல் போன நாயைத் தேடித் தேடி, கடைசியில் கண்டுபிடித்துவிட்டார் லிண்டா. அதை ஜூலட்டா ஹால்லர் என்கிற பெண் வளர்த்துக்கொண்டிருந்திருக்கிறார். அழுது, அடம்பிடித்து, கெஞ்சிப் பார்த்தார். ஹால்லர் மனம் இரங்கவில்லை. வழக்குப் போடுவேன் என்று மிரட்டியும் பார்த்தார். ம்ஹூம்...

✱ இயான் உஷர்



வருத்தத்தோடு லிண்டா திரும்பி வந்துவிட்டார். இரண்டு வாரம் கழித்துத்தான் ஹால்லருக்கு விஷயம் புரிந்தது. வீட்டிலிருந்த பூனையைக் காணவில்லை. ஃபோனில் வந்த குறுஞ்செய்தி சொன்ன விஷயம், **'உனக்கு நாய்... எனக்குப் பூனை... கணக்கு முடிஞ்சு போச்சு...'**

தன் பூனையைத் திருடிவிட்டதாக ஹால்லர் வழக்குபோட, ஆறாயிரம் டாலர் பணம் கட்டிவிட்டு ஜெயிலில் இருந்து வெளியே வந்திருக்கிறார் லிண்டா.

(நாய்க்கு நாயும் போச்சு... பிடிச்சுக்கிட்டு வந்த பூனையும் போச்சு.)

– ஸாந்த்



ஆன்மா ரெண்டு தரம்..!



உயிர்குடித்த பிறந்தநாள்

தமிழக முதல்வர் மு.கருணாநிதியின் 86வது பிறந்தநாள் விழாவினையொட்டி, திருச்சி மாவட்ட தி.மு.க. இரண்டு வாரங்களுக்கு முன்பு, அண்ணா விளையாட்டரங்கில் மாபெரும் ஜல்லிக்கட்டு நடத்தியது. இதில் மாடு முட்டி, தஞ்சையைச் சேர்ந்த இருபத்தியெட்டு வயது இளைஞர் சுப்பிரமணி, அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டார்; மூன்று நபர்களுக்குப் படுகாயங்கள்; சுமார் நாற்பது நபர்களுக்குச் சிறு காயங்கள். திருச்சி மாவட்ட தி.மு.க. நடத்திய 'திடீர் ஜல்லிக்கட்டு' பல்வேறு சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளது.

திருச்சி சுற்று வட்டாரம் மட்டுமின்றி, தென் தமிழகத்திலிருந்தும் நூறுக்கும் மேற்பட்ட காளைகள் வந்திருந்தன. சில காளைகள், தங்களை அடக்க வந்தவர்களைக் கூரிய கொம்புகளினால் குத்திப் பதம் பார்த்தன. சில காளைகள் திசை தடுமாறி, வேடிக்கை பார்த்தவர்களையும் முட்டி மோதி விட்டுத் தாவி ஓடின.



* அறிவுச் செல்வன்

“இன்றைக்குப் பொதுமக்களை பாதிக்கிற முக்கியமான பிரச்னை விலைவாசி உயர்வு. இந்தப் பிரச்னையைக் கையில் எடுத்துக்கொண்டு, தமிழ்நாட்டின் மாவட்டத் தலைநகரங்களில் பேரணி நடத்திட எங்களுக்கு அனுமதி மறுத்த காவல்துறை, உயிர்ப்பலிகளை ஏற்படுத்தக்கூடிய ஜல்லிக் கட்டுக்கு எப்படி அனுமதியளித்தது? ஆளுங்கட்சியின் தலைமை அலுவலகமாக, காவல்துறை இயங்கி வருகிறதோ என்றே நினைக்கத் தோன்றுகிறது” என்கிறார் **தே.மு.தி.க. திருச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் நடராஜன்.**

“ஓர் அரசியல் கட்சித் தலைவரின் பிறந்த நாளினை முன்னிட்டு, ஜல்லிக்கட்டு என்பது மிகவும் அபத்தமானது. பழந்தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்றுதான் ஜல்லிக்கட்டு; மறுப்பதற்கில்லை. அதுவே இன்றைய இளந்தமிழனுக்குத் தேவையா என்பது ஆய்வுக்குரியது. எதிர்காலத்தில் மு.க.அழகிரி பிறந்த நாளுக்கும், கனிமொழி மற்றும் கயல்விழி பிறந்த நாட்களுக்கும் நீதிமன்ற அனுமதி பெற்று ஜல்லிக்கட்டு நடத்த முன் வருவார்களா... இவற்றை ஏற்றுக்கொள்ள முடியுமா? மது மற்றும் கள்ளச்சாராய



கொண்டாட்டம்!



✱ நடராஜன்



✱ ஜெயந்திராணி

விற்பனையை உண்மை யாகவே தடை செய்துவிட்டு, ஒரு ஜல்லிக்கட்டு நடத்திப் பார்க்கட்டும். முதலில் மாடுபிடி வீரர்கள் எவருமே துணிந்து முன்வரமாட் டார்கள். திருச்சி மாவட்ட தி.மு.க. நடத்தியுள்ள இந்தத் திடீர் ஜல்லிக்கட்டுக் கடும் கண்டனத்துக்குரியது'' எனச் சொல்கிறார், **பா.ம.க. மாநில இளைஞரணிச் செயலாளர் அறிவுச் செல்வன்.**

``**எ**ங்களின் பேரன்ட்ஸ் அறக்கட்டளையும், அமிர்தம் சேவா அறக்கட்டளையும் இணைந்து, ஜல்லிக்கட்டு நடத்திட தடைவிதிக்கக் கோரி, 2007ல் திருச்சி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந் துள்ளோம். வழக்கு நிலுவையில் உள்ளது. அன்றைய விழாவில் ஓட்டப்பந்தயம், சைக்கிள் பந்தயம், விளையாட்டுப் போட்டிகள் நடத்தியுள்ளனர். இதில் யாருக்கும் எவ்வித விமர் சனமும் எழவில்லை. ஜல் லிக்கட்டு மட்டுமே ரொம்பக் கொடுமை. இது ஏனைய அரசியல் கட்சித் தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களிலும், வழக்கமாகி விடுமோ என்கிற அச்சம் எழுகிறது. உச்சநீதி மன்றம், தைப்பொங்கல் சமயத்தில் மட்டுமே, தகுந்த பாதுகாப் புடன் ஜல்லிக்கட்டு நடத்திட இடைக்காலத் தீர்ப்பினை வழங்கியுள்ளது. இந்நிலை யில் ஆளுங்கட்சியான தி.மு.க., நீதிமன்ற அனுமதி பெற்று ஜல்லிக்கட்டு நடத்தி யிருப்பது, அனைவரையும் வியப்புக்கு ஆளாக்கியுள்ளது!'' என்கிறார் **வழக்கறிஞரும், விலங்குகள் நல ஆர் வலருமான ஜெயந்திராணி.**

செய்தி, சித்திரம் :
இருள்நீக்கியான்







கை-கால் முளைத்த கனவு!

"வண்ணங்களால் சூழப்பட்ட வண்ணத்துப்பூச்சிகளின் வாழ்க்கையைப் போல, கனவுகளால் சூழப்பட்டுக் குதூகலத்தால் நிரம்பி வழிகிறது குழந்தைகளின் வாழ்வு. இன்னும் சரியாகச் சொல்வதெனில் கை - கால் முளைத்தோடும் கனவுதான் குழந்தைகள். குழந்தைகளின் கண்களைக் கடன் வாங்கி, கனவுகளைத் தரிசிக்கத் தெரிந்த பெற்றோர்கள் பேறு பெற்றவர்கள்'' என்கிறார் அழகப்பன்.சி. யார் இவர்? 'வண்ணத்துப்பூச்சி' படத்தின் இயக்குநர். இருபத்தைந்து வருட திரைப்பட போராட்டத்தில், முதல் படமே குழந்தைகளுக்கானதாகக் கொடுத்து, அனைவரது கவனத்தையும் ஈர்த்திருக்கிறார்.

''பெரும்பாலும் பெற்றோர்கள் யாருமே குழந்தைகளைக் குழந்தையாகவே பார்ப்பதில்லை. தங்கள் கனவுகளின் விதைநிலமாகத்தான் பார்க்கிறார்கள். 'குழந்தைகள் மீது அதிகாரம் செலுத்த, பெற்றோருக்கு எந்த உரிமையும் இல்லை. ஏனெனில், குழந்தைகள் பெற்றோர்களின் வழியே வந்திருக்கிறார்கள் அவ்வளவுதான். மற்றபடி, அவர்களுக்கென்று



* அழகப்பன்.சி.




* டி.லக்ஷ்மி



தனித்த சிந்தனை இருக்கிறது' என்பார் கலில் ஜிப்ரான். அப்படிப்பட்ட தனித்த சிந்தனையின் மீது அதிகாரம் செலுத்தும் பெற்றோருக்கும், அதனால் பாதிக்கப் பட்ட குழந்தைக்குமான மனப் போராட்டம் தான் இந்தக் கதை. இந்தக் கதையைப் படமாக எடுப்பதற்குக் காரணமே என் மகன் தான். அவனின் ஒவ்வொரு செயலும், பேச்சும் நான் உணர்ந்திராத ஓர் உலகத்துக்கு என்னை இட்டுச் செல்கின்றன. பத்து மாதத் திலே தாயை இழந்த நான், ஒரு வயதில் திரு மணம் என்ற பந்தத்தின் மூலம், என் சகோதரி களை இழந்து தனித் தீவானேன். என் வயதை ஒத்த பையன்களை அவர்களது அம்மாக்கள் கொஞ்சும்போது, என்னை அடிப்பதற்குக்கூட ஆளில்லையே என்று ஏங்கித் திரிந்திருக்கிறேன். அந்த ஏக்கத்தையும், நான் வாழ விரும்பி, ஆனால் வாழ முடியாத குழந்தைப் பருவத்தையும் இந்தப் படத்தின் மூலம் எய்தினேன் என்பது பேருண்மை'' என்கிறார் அழகப்பன்.

- கதிர்பாரதி





''எங்கப்பா இருக்கு அந்தப் பொண்ணு?''ன்னு விஜய் சிரிச்சுக்கிட்டே கேட்டான். சிரிச்சாலும், இப்படியும் பொண்ணுங்க இருக்காங்களேங்கற அவனோட வேதனை வெளிப்படையாகவே தெரிஞ்சது.

அதிர வைத்த ரசிகை

முதல் முதல்ல சங்கீதா எங்க வீட்டுக்கு வந்தப்போ, ஒரு சாதாரண காட்டன் புடைவையைக் கட்டிக்கிட்டுதான் வந்திருந்துச்சு. அந்த எளிமை எனக்கும் என் கணவருக்கும் ரொம்பப் பிடிச்சுப் போச்சு. அப்பவே சங்கீதாவை எங்க மருமகளா மானசீகமா நெனச்சுப் பார்த்தோம். ஆனா, உடனே அவனோட சம்மதத்தைக் கேட்டுடலை.

ரெண்டு பேரோட ஜாதகமும் பொருந்திப் போச்சு. இனிமே விஜய்கிட்ட நேரடியா கேட்டுடறதுன்னு முடிவு செஞ்சோம். அதுக்கு முன்னாடி அவங்க குடும்பத்தைப் பத்தி விசாரிச்சோம். லண்டன்ல சங்கீதாவோட அப்பா ஒரு பெட்ரோல் பங்க் வைச்சிருந்தார். ரொம்ப நல்ல குடும்பம். பொண்ணுங்களை அவ்வளவு நல்ல விதமா வளர்த்திருந்தாங்க.

நம்ம தமிழ்நாட்லயேகூட நிறைய தமிழ்க் குடும்பங்கள்ல தமிழ் பேசறதில்லை. அது என்னவோ, வார்த்தைக்கு வார்த்தை ஆங்கில வார்த்தை வந்து விழறது ஒரு பழக்கமாவே ஆகிப் போச்சு. ஆனா, சங்கீதா வீட்ல தமிழ் விளையாடும். யாரா இருந்தாலும் ரொம்ப மரியாதை குடுத்துப் பேசுவாங்க.

ஒரு நாள், விஜய் வீட்ல இருந்தப்போ, நானும் என் கணவரும் மெதுவா பேச்சை ஆரம்பிச்சோம். ''விஜய்! எனக்கும் அப்பாவுக்கும் சங்கீதாவை ரொம்பப் பிடிச்சிருக்கு. நல்ல பொண்ணாவும் இருக்கா. நீ அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா வாழ்க்கை ரொம்ப நல்லா இருக்கும். என்ன நினைக்கிறே? உன் மனசுல வேற ஏதாவது யோசனை இருக்கா? யோசிச்சு சொல்லு''ன்னு சொன்னோம்.

ஆனா, விஜய் யோசிக்கவே இல்ல. சட்டுன்னு பதில் சொல்லிட்டான். ''சரிப்பா. உங்களுக்குப் பிடிச்சிருந்தா போதும்.'' விஜய்யை இப்படி வளத்ததுக்காக நாங்க ரொம்ப சந்தோஷப்பட்டோம்.

என் கணவர் வாழ்க்கையெல்லாம் ரொம்பப் போராடி முன்னுக்கு வந்தவர். அவர் முன்னுக்கு வர ரொம்பக் காலம் ஆச்சு. கல்யாணமும் லேட்டாதான் நடந்தது. ஆனா, விஜய் அப்படி இல்ல. இருபத்தஞ்சு வயசுலயே ஓரளவுக்கு வாழ்க்கையில செட்டில் ஆயிட்டான்னுதான் சொல்லணும். அதனாலதான் அவனுக்கு அந்த வயசுல கல்யாணம் பண்றதைப் பத்தி எங்களால யோசிக்க முடிஞ்சது.

விஜய் கல்யாணத்துக்கு சரின்னு சொன்னதும் நானும் என் கணவரும் லண்டனுக்குப் போய்ப் பேசினோம். அது 1998ஆம் வருஷம். சங்கீதா வீட்லயும் கல்யாணத்துக்குச் சம்மதிச்சாங்க. ஆனா, உடனே கல்யாணம் பண்ண முடியாது, இல்லையா? நிறைய அவகாசம் வேணும். கல்யாண ஏற்பாடுகளைக் கவனிக்கணும். அதோட, விஜய்க்குத் தொடர்ந்து ஷூட்டிங் இருந்தது.

ஷோபா சந்திரசேகர்

என்ன பரிசு?

சரியான விடைகளுடன் வரும் முதல் 10 கூப்பன்களுக்கு விஜய் படம் பொறித்த டி-ஷர்ட்... குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 100 அதிர்ஷ்டசாலிகளுக்கு விஜய் கையெழுத்திட்ட ஸ்டில்ஸ்...

அதனால, ஒரு வருஷம் கழிச்சு கல்யாணத்தை வைச்சுக்கலாம்னு என் கணவர் சொல்லிட்டார்.

லண்டன்ல வைச்சு நிச்சயதார்த்தம் மட்டும் நடந்தது. ஆனா, அந்த நிச்சயதார்த்தத்தையே சில பத்திரிகைக்காரங்க 'விஜய்க்குக் கல்யாணம்'னு எழுதிட்டாங்க. அதுக்கு அடுத்த வருஷம்தான் (1999) சென்னைல விஜய்க்குக் கல்யாணம் நடந்தது.

கடவுளோட கிருபைல எங்களுக்கு நல்ல மருமகள் கிடைச்சா. சங்கீதா இப்போகூட ரொம்ப சிம்பிளாத்தான் இருக்கும். குழந்தையைத் தூக்கும்போது அது உடம்புல குத்திடும்னு, உறுத்தற மாதிரியான வளையலைக்கூட போட்டுக்காது சங்கீதா.



குழந்தையைப் பாத்துக்கறதுக்கு வீட்ல ஆளைப் போட்டுட்டு, எத்தனையோ என்டர்டெயின்மென்டுக்குப் போற பொண்ணுங்க மத்தியில, இப்படியும் ஒரு பொண்ணு! விஜய்க்கு எல்லாமே நல்ல படியா அமைஞ்சிடுச்சு. விஜய் சங்கீதாவை கல்யாணம் பண்ணிக்கிட்டு, அதுக்கு அப்புறமா லவ் பண்ண ஆரம்பிச்சான்.

'காதலுக்கு மரியாதை' படம் வந்ததுக்கு அப்புறம், ஒரு பொண்ணுகிட்ட இருந்து வந்த கடிதத்தைப் பாத்துட்டு நாங்க எல்லாருமே அதிர்ச்சியாயிட்டோம்.

'விஜய்! நீங்க எத்தனை பேரை வேணும்னாலும் கல்யாணம் பண்ணிக்கங்க. நூறாவது ஆளாவாவது நான் உங்களைக் கல்யாணம் பண்ணியே தீருவேன்'னு அந்தப் பொண்ணு லெட்டர் போட்டிருந்துச்சு.

விஜய், ''எங்கப்பா இருக்கு அந்தப் பொண்ணு?''ன்னு சிரிச்சுக்கிட்டே கேட்டான். சிரிச்சாலும், இப்படியும் பொண்ணுங்க இருக்காங்களேங்கற அவனோட வேதனை வெளிப்படையாவே தெரிஞ்சது.

அந்தப் பொண்ணு ஒரு காலேஜ்ல படிச்சுக்கிட்டு இருந்தா. ஆளனுப்பி அவளை எங்க வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு வந்தோம். ரொம்பப் பக்குவமாப் பேசினோம்.

'இது சினிமா இல்லம்மா; வாழ்க்கை. வாழ்க்கையில நீ இன்னும் எவ்வளவோ அனுபவிக்க வேண்டியிருக்கு. இப்படியெல்லாம் முடிவு பண்ணக்கூடாது'ன்னு அந்தப் பொண்ணுக்குப் புரியற மாதிரி எளிமையாப் பேசினோம்; அறிவுரை சொன்னோம். ஒரு வழியா அந்தப் பொண்ணு நாங்க சொன்னதைப் புரிஞ்சுக்கிட்டு, ஹாஸ்டலுக்குத் திரும்பிப் போனா.

(தொடரும்)

எழுத்து வடிவம் : **பாலு சத்யா**

ஹலோ வாசகர்களே!

ஷோபா சந்திரசேகர் எழுதற, 'என் செல்ல தளபதி' தொடர் அசத்தலா இருக்குதாவே? நீங்களும் சும்மா அசத்தறீங்க இல்ல. போன வாரப் போட்டிக்கு மளமளன்னு என்ட்ரீஸ் குவியுது!

- விஜய் வின்னர்ஸ் - 8 தொடர் சங்கிலிப் போட்டிக்கான முடிவும், இந்த வார கூப்பனும் பக்கம் 54ல் உள்ளன.
- பதிமூணு வாரமும் அதிரடிப் போட்டி தொடரப் போகுது. ஒவ்வொரு வாரமும் பரிசு! பதிமூன்றாவது வாரம் பம்பர் போட்டி, வியப்பான மெகா பரிசுகள்!
- நீங்க செய்ய வேண்டியது ரொம்ப சிம்பிள்! ஒவ்வொரு வாரமும் ஐந்து கேள்விகள் கேட்போம். அதுல ஒண்ணு தொடரிலிருந்து வரும். சரியான விடைகளை 'டிக்' அடிச்சு கூப்பனையும் நிரப்பி, அந்தப் பக்கத்தைக் கத்தரிச்சு அனுப்பணும்.
- ஒருவரே எத்தனை கூப்பன் வேணும்னாலும் அனுப்பலாம். ஆனா ஜெராக்ஸ் கூடாது. எவ்வளவு வேகமா அனுப்பறீங்களோ அந்தளவுக்குப் பரிசு பெற சான்ஸ் இருக்கு!
- வெய்ட்! பதிமூன்றாவது வார பம்பர் போட்டியில நீங்க கலந்துக்கணும்னா 'விஜய்' ஸ்டில் போட்ட 'தொடர் சங்கிலி கூப்பனை' பத்திரமா சேகரிக்கணும். (இந்த வாரம்-53ஆம் பக்கம் இருக்கு)
- பதிமூன்றாவது வார போட்டியோடு தொடர் சங்கிலி கூப்பன்கள் அனைத்தையும் இணைச்சு அனுப்பணும். ஒரு கூப்பனை 'மிஸ்' பண்ணினாலும், நீங்க அந்த வியப்பான பரிசுகளை 'மிஸ்' பண்ணிடு வீங்க.
- இந்த பதிமூன்று வாரத்தில் உங்களுக்கு ஒரு இதழ் கிடைக்காமப் போனாலும், உடனே எங்களுக்கு ஃபோன் பண்ணுங்க. உங்க நகரத்து ஏஜென்ட் மூலமா கிடைக்க உதவி செய்யறோம்.

  ஸோ, டயல் : 4343 8888
- போட்டி குறித்த முடிவுகளில் ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.

தொடர் சங்கிலிப் போட்டி கூப்பன்



விஜய் வின்னர்ஸ் - 11



விஜய் வின்னர்ஸ் - 8

தொடர் சங்கிலிப் போட்டி பரிசு பெற்றோர் விவரம்...

1. கே.கனகராஜ், திருவண்ணாமலை
2. ஏ.ஆர்.வலம்புரிநாகராஜன், ஈரோடு
3. கே.சுலோசனா, திருவண்ணாமலை
4. எஸ்.பலராமன், திருவண்ணாமலை
5. ரா.பிரசன்னா, மதுரை
6. சி.பரமேஸ்வரி, வாணியம்பாடி
7. ஜி.பாரதி, நெல்லிக்குப்பம்
8. எம்.முராரி, ஆடுதுறை
9. எஸ்.பிரேம் ராகுல், நாகர்கோவில்
10. எஸ்.நிரஞ்சன், தருமபுரி

✱ முதல் பத்து கூப்பன்களை அனுப்பிய மேற்கண்டோருக்கு விஜய் படம் பொறித்த டி-ஷர்ட் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.

✱ குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 அதிர்ஷ்டசாலிகளுக்கு விஜய் கையெழுத்திட்ட ஸ்டில்ஸ் அனுப்பி வைக்கப்படும்.

இந்த வாரக் கேள்விகள்!

கடைசி தேதி : 31.07.2008

1. எந்தப் படத்தின் மூலம் விஜய்க்கு பெண் ரசிகர்கள் அதிகம்?
   - ☐ காதலுக்கு மரியாதை
   - ☐ கண்ணுக்குள் நிலவு
2. காதலுக்கு மரியாதை படத்தின் இயக்குநர்?
   - ☐ பாசில் ☐ பாலா
3. விஜய், வீட்டில் எத்தனையாவது குழந்தை?
   - ☐ முதலாவது ☐ இரண்டாவது
4. விஜய் திருமணம் எந்த வகை?
   - ☐ காதல் ☐ நிச்சயிக்கப்பட்டது
5. விஜய் மனைவி எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
   - ☐ இங்கிலாந்து ☐ அமெரிக்கா

பெயர் : .... வயது : ....

முகவரி : ....

....

செல் : .... இ.மெயில் : ....

போட்டி கூப்பன் அனுப்ப வேண்டிய முகவரி :

விஜய் வின்னர்ஸ் போட்டி - 11,

கல்கி, 47-NP, ஜவாஹர்லால் நேரு ரோடு,

ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032



அருக்காணி

கே.ராமச்சந்திரன்

சுவாமி தரிசனம் முடித்துக்கொண்டு, கோயில் வாசலில் நிறுத்தியிருந்த காரில் வந்து அமர்ந்தார் டைரக்டர் வித்யாதரன். அருகில் இரு மாமிகள் பேசிக்கொண்டிருந்தனர்.

''நேத்து டீ.வில என்ன ப்ரோக்ராம் பார்த்தீங்க?''

''ஒரு கேசட் வெளியிடற நிகழ்ச்சி! 'மயிலும் குயிலும்'னு பேர்! புதுமுகம், பாடகியாவும் டான்ஸராவும் டபுள் ஆக்ட்டாம்! டைரக்டர் சொன்னார். புதுசா ஸ்டைலா 'நந்தினி'னு அந்தப் பொண்ணுக்குப் பேராம்!'' தம் படத்தைப் பற்றி அவர்கள் பேசுவதால், ஆர்வமாய்க் கேட்டார் வித்யாதரன்.

''புதுசா? ஸ்டைலாவா? அந்தப் பேரு படு பழசாச்சே! புராணக் கதையில வருமே காமதேனுன்னு ஒரு பசு! அதோட பொண்ணு பேருதான் நந்தினி!'' வித்யாதரனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''பேர்ல என்ன இருக்கு மாமி, நல்லா நடிச்சா, படம் ஓடப் போறது. கிராமத்துல பெரியவங்க குலதெய்வம், ஊர்த் தெய்வத்துக்கு அருக்காணி, அம்சவல்லி ஆராயின்னு பேர் வைச்சப்பா. பழைய பேரா இருந்தாலும் கிராமத்துப் பொண்ணுங்க நறுவிசா, ப்ரியமா, பாசமா இருப்பாங்க... பேரா முக்கியம்?''

அதிர்ந்து போனார் வித்யாதரன்.

இருபது ஆண்டுகள் ஆகியிருக்குமா? தம் தாயிடம் அன்று சொன்னது?

''அம்மா, நான் முறைப்பையன்தான்! அதுக்காக மாமா பொண்ணு, அது இதுன்னு அவளை என் தலையில கட்டாதே! பேரைப் பாரு! அருக்காணி. இந்தக் கிறுக்காணியெல்லாம் வேண்டாம்!''

சென்னைக்கு வந்து ஒரு துணை நடிகையைக் காதலித்துக் கல்யாணம் பண்ணிக்கொண்டு, இரண்டே ஆண்டுகளில் விவாகரத்து ஆகி, தனி மரமாக இத்தனை வருடங்களாய்... இப்போது அருக்காணி எங்கே இருக்கிறாளோ...? எத்தனை குழந்தைகளோ...?

''சார், பூ வாங்கிக்க சார்! மல்லிப்பூ சார், நல்ல வாசனையா இருக்கும்!''

சிறுமியின் குரல் கேட்டுத் திடுக்கிட்டார். அவளைப் பார்த்ததும் சின்ன வயது அருக்காணியின் ஞாபகம் வந்தது.

''தட்டுல இருக்கற மொத்தப் பூவும் என்ன விலை? சொல்லு!''○



"நாங்கள் ஆட்சிக்கு வந்தால், பூரண மது விலக்கை அமல்படுத்துவதற்காக, 'சரக்கு' ரயிலைக்கூடத் தடை பண்ணுவோம்."


– சுப.ஸ்ரீஅமரஜோதி



"அடுத்த ஜென்மத்திலும் நாமதான் கணவன் – மனைவியா இருக்கணும்!"

"அப்பவாவது நீ எனக்கு வாஷிங் மெஷின் வாங்கித் தருவியா?"

– லெ.நா.சிவகுமார்



"டாக்டர், எனக்குத் தற்கொலை பண்ணிக்கிட்டுச் சாகணும் போல இருக்கு!"

"ரொம்ப தப்பு. அப்புறம் நாங்க எதுக்கு இருக்கோம்!"

– அ.அப்துல் காதர்



"வீட்டுல இருந்த எல்லாத்தையும் திருடன் கொண்டு போயிட்டானா... நீங்க ஏன் போலீஸுக்குப் புகார் கொடுக்கலை?"

"போலீஸுக்குக் கொடுக்க, என்ன சார் இருக்கு?"

– சீர்காழி வி.ரேவதி

"ஏங்க, நம்ம பையனுக்குப் பொண்ணு பார்க்கப் போக இருந்தோமே, அவங்க வீட்டுல நிறைய திருடு போயிடுச்சாம்!"

"சே! திருடன் முந்திக்கிட்டானே!"

சரக்கு ரயில் மறியல்!





"தலைவரே! நீங்க படிக்கும் போது வாத்தியாரா இருந்தாராம், உங்களைப் பார்க்க வந்திருக்கார். அனுப்பவா?"

"நான் பள்ளிக்கூடத்துக்குப் போனதேயில்லை. பொய் சொல்ற அந்த ஆளை உள்ளே விடாதே!"

– வந்தை ஜி.கே.நிதி



● ஒரு சாதாரண மனிதனுக்குள் வைரஸ் கிருமிகளைப் புகுத்தி, அவனை அசுர பலசாலியாக்கி ஆயுதமாக்க நினைக்கிறார் ராணுவ அதிகாரி.

ஆயுதம் செய்வோம்

ஜெயிலுக்குப் போய் வருவதை, ஊருக்குப் போய் வருவதைப் போல கொண்டாடும் ரௌடி, 'சைதை சத்யா'வாக சுந்தர்.சி. அவர் செய்யும் குற்றங்களுக்கு உடந்தையாக 'டிராஃபிக் போலீஸ்' விவேக்.

இவர்கள் செய்யும் குற்றங்களுக்குத் தண்டனையாக, மதுரை காந்தி மியூசியத்தில் தங்கச் சொல்கிறார் நீதிபதி. அங்கே அவர்கள் மனசுக்குள் நிகழும் மாற்றங்களுக்குத் திரைக்கதை அமைத்து, கூடவே கமர்ஷியல் அம்சங்கள் குழைத்துக் கொடுத்திருக்கிறார் இயக்குநர் உதயன். அகிம்சை குறித்த அர்த்தமுள்ள பதிவுகள் படத்தின் பலம்.

அநியாயத்தைத் தட்டிக் கேட்கும் வழக்குரைஞராக விஜயகுமார்; சாகும் தருவாயில் அவர் சொல்லும் 'வாழ்க வளமுடன்' டயலாக், செம டச்! அதுவே சுந்தர்.சி.யின் மனத்தை மாற்றும் முதற்காரணியாகக் காட்டியிருப்பதில் இயக்குநர் தெரிகிறார்.

கலகலப்புக்கு விவேக். ''வாயும் வயிறுமா வந்து நிக்கிறோமே இன்னுமா எங்களை போலீஸுனு நம்பலை'' என தொப்பையை ஆட்டி ஆட்டிப் பேசும் காட்சிகளில், தியேட்டரில் சிரிப்பு வெடி. காந்தி கணக்குக்கு அவர் கொடுக்கும் விளக்கம், கலகல சரவெடி. 'என் கவுன்டர் ஸ்பெஷலிஸ்டாக' நெப்போலியன்; மிடுக்கான போலீஸ் ட்ரெஸ்ஸில் ஸ்மார்ட்.

'மாளவிகா'வை வைத்து சத்திய சோதனை புத்தகத்தை விற்பதும், சத்திய சோதனையிலிருந்து கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் சொன்னால், அவரோடு சாப்பிடலாம்; கை குலுக்கலாம் என்பதும் காந்தியத்தையும் காந்திஜியையும் மலினப்படுத்துகிறது. பெரிய சறுக்கல்.

● ராணுவ அதிகாரியின் தீய எண்ணத்தையும் அதனால் விளையப் போகும் ஆபத்தையும் உணர்ந்து, பரிசோதனையிலிருந்து பச்சை மனிதனாக வெளியேறுகிறான் ராட்சஷஸன்!

● பச்சை மனிதனைப் பிடிக்க ராணுவ அதிகாரி, இன்னொரு ராட்சஷஸனை உருவாக்க, அவன் தீய சக்தியாக உருமாறி ஒரு நகரத்தையே அழிக்கத் திட்டமிடுகிறான். மோதல், சஸ்பென்ஸ்!

● அமைதியாக வரும் எட்வர்ட் நோர்டன். பச்சை மனிதனாக உருகொள்கையில் காட்சிகள் பரபரவென பற்றிக்கொள்கின்றன.

● தன்னைத் தாக்கும்போது நடக்கும் மோதலில், காதலியைச் சிறுகாயம்கூட இல்லாமல் காப்பாற்றுவது, செம அசத்தல்.

● பச்சை மனிதனின் நல்ல எண்ணத்தை நினைத்து, ராணுவ அதிகாரி மனம் மாறுவது அழுத்தமான காட்சி.

● 1960களில் காமிக்ஸ் புத்தகம்; 1970களில் டீ.வி. சீரியல்; இப்போது படமாக வந்திருக்கும் கதையை, அவசியம் குழந்தைகளும் பார்க்க வேண்டும்.

- சூர்யபுத்திரன்

கதாநாயகியாக வந்து போயிருக்கிறார் அஞ்சலி. நடிக்கத் தெரிந்த அவருக்கு வெறும் கவர்ச்சி, காதல் அசைன்மெண்ட் ஏன்?

ஸ்ரீகாந்த் தேவாவின் இசையில் 'மூணு காசு முட்டாயி' மட்டும் இனிக்கிறது. செல்வராஜின் ஒளிப்பதிவு யதார்த்தம். ஆக்ஷன் படத்தில் அகிம்சை பாடம். ஆயுதம் செய்வோம் - இனிக்கும் காரம்!

- மகிமைராஜன்



செல்வராஜா



இந்தா... இருநூறு!

மல்லிகா வீட்டுக்கு, இது வரை வந்துபோன வேலைக்காரிகள் ஐந்து பேர். ஒருத்தரும் நிலையாக இருக்கவில்லை. இப்போது ஆறாவதாக ஒருத்தி வந்திருந்தாள். இவளை எப்படியாவது தக்க வைத்துக்கொள்ள வேண்டும்.

''ஏங்க, பணம் நூறு ரூபாய் தர்றேன். அவகிட்டே அட்வான்ஸா கொடுத்து நிக்காம வரச்சொல்லி ஏற்பாடு பண்ணுங்க. இவளும் வராட்டி இனிமே எனக்கு எந்த வேலைக்காரியும் வேண்டாம். நானே செய்துக்கறேன்'' பணத்தை கணவனிடம் கொடுத்தாள்.

சிங்காரம் வேலைக்காரியைத் தனியே அழைத்துப் போனான். கையில் இன்னும் நூறு ரூபாய் சேர்த்து, இருநூறாக வைத்துக் கொண்டான்.

''என் மனைவியைப் பார்த்தியா? எவ்வளவு குண்டா இருக்காங்க. உடம்பு இளைக்கறதுக்காக ஜிம்மு, ஸ்கேட்டிங்குன்னு செலவு செய்றாங்க. ஆனால், வீட்டிலே ஒரு துரும்பைக்கூட எடுத்து வைக்க மாட்டேங்கறாங்க. இந்தா, இருநூறு ரூபாயா வைச்சுக்கோ. நாளையிலிருந்து வேலைக்கு வராதே; நின்னுடு'' சிரித்துக்கொண்டே வந்தார் சிங்காரம்.

அருள்வாக்கு

வெளி அடக்கம் உண்டானால்தான், கொஞ்சம் கொஞ்சமாக உள்ளடக்கம் சித்திக்கும். இதனால்தான், ''இந்திரிய வியாபாரங் களைக் குறைத்துக்கொள்; கூட்டத்தில் சேராதே; 'உலகுக்கு நல்லது செய்வது' என்பது உள்பட சகல காரியங்களையும் விலக்கப் பிரயாசைப்படு; பணத்தைப் பக்கத்தில் சேர்க்காதே; காட்டுக்குப் போ'' என்றெல்லாம் சொன்னார்கள். இப்படி இதைவிடு, அதைவிடு என்று நமக்கு இஷ்டமானதை எல்லாம் துறக்கச் சொன்னால், நாம் கேட் போமா? மாட்டோம். சித்தம் சுத்தமானால்தான், இதைச் செய்யப் பக்குவம் வரும்.

இதனால்தான் முதலில் சித்தம் சுத்தமாவதற்காக 'இதைவிடு, அதைவிடு' என்று சொல்வதைவிட, முக்கியமாக 'இதைச் செய், அதைச் செய்' என்று பலவிதமான கர்மாக்களை விதித்திருக்கிறது. ஒரு காரியத்தில் ஈடுபடுவதே நமக்கு இயல்பாக, சுபாவமாகக் கைவருகிறது. எனவே, இந்த மாதிரி, நமக்குச் சொந்த விருப்பு வெறுப்பு இல்லாமல், சாஸ்திரம் சொல்கிற காரியங்களை ஆரம்பிக்கிறோம். இதிலும் ஆரம்பத்தில் விருப்பு வெறுப்பு தலைதூக்கத்தான் செய்யும். இருந்தாலும், எடுத்த எடுப்பில் சிந்தையை அடக்கித் தியானம் செய்வதைவிட, ஏதோ கொஞ்சத்தில் கொஞ்சமாவது விருப்பு வெறுப்புகளை, சௌகரிய அசௌ கரியங்களைப் பாராமல் கர்மாக்களை அனுஷ்டானம் செய்ய முடிகிறது. இப்படி ஒரு பிரயத்தனத்தை ஆரம்பித்து விட்டால், அப்புறம் பகவத்கிருபையால் விருப்பு வெறுப்புகள், சௌகரிய அசௌகரிய எண்ணங் கள் மேலும் மேலும் குறைந்து, ஸத்கர்மாக்களை ஒழுங்காகச் செய்ய முடிகிறது. ஆசையும் துவேஷமும் குறைவதால், சித்தம் சுத்த மாகிறது. இப்படி சுத்தமான பிறகுதான் அது ஒருமுகப்பட்டு தியானத்தில் அமிழ முடியும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்



அடக்கம்



''இன்னைக்கும், குணப்படுத்த முடியாதுன்னு சொல்ற எத்தனையோ நோய்களை, சித்த வைத்தியம் பூரணமா குணப்படுத்திக் காட்டறதை, எல்லோரும் ஆச்சரியம் விலகாமத்தான் பார்க்கறாங்க! அதுதான் சித்த மருத்துவத்தோட மகிமை!'' என்கிறார் டாக்டர் கே.எஸ்.சுப்பையா.

''சித்தர்கள், தங்களை மெய்ஞ்ஞான அறிவால் ஆய்வு செஞ்சு, மனித உடம்புக்கு அடிமுதல் முடிவரை எல்லாப் பிரச்னைகளுக்கும் 4448 நோய்கள்னு வரையறை வைச்சு, அதுக்குத் தீர்வும் சொல்லியிருக்காங்க. அதனால சித்த மருத்துவத்தால தீர்க்க முடியாத நோய்னு ஒரு நோய்கூட இல்லை.

உடம்புல கொலஸ்ட்ரால் சேர்ந்தா என்னென்ன பிரச்னைகள் வருதுன்னு, எல்லோருக்கும் தெரியும். ஆனா கொத்தமல்லி காஃபி சாப்பிட்டா, நம்ம உடம்புல கொலஸ்ட்ரால் சேரவே சேராதுன்னு எத்தனை பேருக்குத் தெரியும்? அதேபோல உடம்பின் எல்லாப் பிரச்னைகளுக்கும் வலி, ஆபரேஷன்னு எந்தத் தொல்லையும் இல்லாமல் ரொம்ப சிம்பிளா சித்த மருத்துவம் தீர்வு சொல்லுது!'' என்ற டாக்டர் சுப்பையாவிடம், தலைமுடியைப் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி, சித்த மருத்துவம் என்ன சொல்றது என்ற கேள்வியை முன் வைத்தோம்.

''இளநரை, முடி உதிர்தல்தான் இன்னைக்கு இளம்தலை முறையினரோட தலைபோகும் பிரச்னையா இருக்கு. இதுக்கு சித்த மருத்துவத்தில் ஏராளமான தீர்வு இருக்கு!

தலைமுடி கொட்டறதுக்கு மனச் சோர்வு, தூக்கமின்மை, ஊட்டச்சத்துக் குறைவு, ஹார்மோன் குறைபாடு, பொடுகுன்னு... பல காரணங்கள் இருந்தாலும், ரசாயனக் கலப்புள்ள ஹேர் ஆயில், ஷாம்பு போன்ற ஒத்துவராத விஷயங்கள்கூட சிலருக்கு இப் பிரச்னையை உண்டாக்கிடுது!



முடிப் பிரச்னைக்கு

இயற்கை நமக்கு நிறைய மூலிகைகளைத் தந்திருக்கு. கரிசலாங்கண்ணி, மருதாணி, செம்பருத்தின்னு மூன்றும் சேர்ந்த கலவையை, தினமும் தலைக்குத் தேய்ச்சுக் குளித்தால், இளநரை போயே போய்விடும். கருகருன்னு அடர்த்தியா கூந்தல் வளரும்!

செம்பருத்திப் பூவை அரைச்சு வாரம் ஒருமுறை தலைக்குத் தேய்ச்சு, பயத்தம் மாவு போட்டுக் குளித்தால், முடி கொட்டற பிரச்னைக்கு முற்றுப் புள்ளி!

உஷ்ணமான உடல்வாகு இருக்கறவங்களுக்கு முடி உதிர்தல் அதிகம் இருக்கும். இவர்கள், இரவில் படுக்கும்போது, உள்ளங்காலில் நல்லெண்ணெய் வைச்சு மஸாஜ் செய்துக்கலாம்.

மன அழுத்தம் உள்ளவர்களுக்கு முடி கொட்டும் பிரச்னை இருக்கும். சிலருக்கு, தலையிலிருந்து முடி கொத்துக் கொத்தாக வேருடன் பிடுங்கிக்கொண்டு வருவதற்கு மன அழுத்தம்கூட காரணமாக இருக்கலாம். இவர்கள் மனத்தை ஒருமுகப்படுத்த தியானம், யோகா போன்றவற்றை மேற்கொள்ளலாம்.

மேலும் தேங்காய்ப்பாலில் எலுமிச்சை சாறு கலந்து, தலையில் தேய்த்து ஊற வைத்து அலசினால் தருந்த பலன் இருக்கும்.

சத்து குறைவு உள்ளவர்கள் கீரைகள், திராட்சை, பால், நெய், முருங்கை வகைகள் உணவில் சேர்த்துக்கிட்டா, கேசம் ரொம்ப ஆரோக்கியமா இருக்கும். பழங்கள், மூலிகைகள்னு நம்மைச் சுத்தி இருக்கிற இயற்கை உணவுகளை, நமக்குச் சிறந்த மருந்தா அடையாளப்படுத்தித் தர்றதுதான் சித்த மருத்துவம்!'' என்று 'ஹெல்த் டிப்ஸ்' தருகிறார் டாக்டர் கே.எஸ்.சுப்பையா.

இயற்கையோடு இணைந்த வாழ்வுதான் இணையற்ற இன்ப வாழ்வு என்கிறதோ சித்த மருத்துவம்!

– எம்.ஆர்.இராஜேந்திரன்



முற்றுப்புள்ளி!



4 கஷ்டப்படுத்தாத இஷ்ட தெய்வம்

கூரம்ப அய்யனார்!

மன்னார்குடி - திருத்துறைப்பூண்டி பேருந்து மார்க்கத்தில், முள்ளியாறு என்கிற அகஸ்திய நதியின் கீழ்க்கரையில் உள்ளது இக்கோயில். மன்னரின் வேட்டைப் பகுதியான தான்யம் நிறைந்த இடம்தான் இன்று தான்யகாந்திபுரம் என்று அழைக்கப்படுகிறது.

தல விருக்ஷமான கூந்தல் பனை, காலப் போக்கில் மறைந்துவிட்டது. ஆயினும், இக்கோயில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று சிறப்புகளைக் கொண்டது.

கூரம்ப அய்யனாருக்கு இடது வலது புறங்களில் அமைந்துள்ள சிறிய தனித் தனி கற்கள், பூரண - புஷ்கலா தேவதைகளாக அழைக்கப்படுகின்றன.

அகஸ்திய மாமுனி முள்ளால் தரையைக் கீறி உருவாக்கிய ஆறு என்பதால் முள்ளாறு என்று அழைக்கப்படலாயிற்று. நாளடைவில் முள்ளியாறாக மருவியது. இந்த விசேஷ சக்தியைக் கொண்ட நதியில் மக்கள் நீராடி நலம் பெறுகிறார்கள்.

ஆண்டுதோறும் பங்குனி உத்திர தினத்தில் சிறப்பு வழிபாடு நடக்கும். அண்மையில் காஞ்சி ஸ்ரீமடம், கூரம்ப அய்யனாருக்கு தங்கத்தில் விபூதி பட்டை அணிவித்து கும்பாபிஷேகத்துக்குக் கணிசமான தொகை அளித்துள்ளது.

குழந்தைப் பேறு அளித்தல்; ஒரே வாரத்தில் பக்கவாதம் நீக்கியது; இஸ்லாமிய பெண்ணின் தீராத வயிற்று வலி தீர்த்தது; நியாயமான வழக்குகளில் உடனடி வெற்றி தந்தது என, கூரம்ப அய்யனாரின் மகிமைகள் சுற்று வட்டாரங்களில் பிரசித்தம்.

எங்கள் காவல் தெய்வ அருளாசி பெற, நீங்களும் வாங்களேன்.

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு திருவாரூரை ஆட்சி செய்து வந்த முசுகுந்த ராஜன், வேட்டையாடுவதற்காக அடர்காட்டில் தானியங்கள் நிறைந்த பகுதியை அடைந்தான். தனது அம்பைக் கூர் தீட்ட எண்ணி அப்பகுதியிலிருந்து ஒரு கல்லில் அதைத் தீட்ட முற்பட்டபோது, கல்லிலிருந்து இரத்தம் பீறிட்டு வந்தது. திடுக்கிட்ட மன்னருக்கு வானிலிருந்து ஓர் அசரீரி கேட்டது. ''நீ உன் அம்பைக் கூர் தீட்ட எந்தக் கல்லைப் பயன்படுத்தினாயோ அந்தக் கல்லை இன்றிலிருந்து நீயும் உன் மக்களும் இறைவனாக வழிபட்டுப் பூஜை செய்யுங்கள்'' என்றது. உத்தரவுப்படியே அக்கல்லை எல்லோரும் இறைவனாக வழிபட ஆலயம் அமைத்தான். அம்பைக் கூர் செய்த கல் என்பதனால், அந்தக் கிராம தெய்வத்துக்கு கூரம்ப அய்யனார் எனப் பெயர் வழங்கலாயிற்று.

செய்தி, படம்: **டி.வி.ராமமூர்த்தி**

கால் கிலோ காதல்

''என் ரூமுக்குப் போயி வெயிட் பண்ணு. அஞ்சு நிமிஷத்துல வர்றேன்'' என்று ஹெட்மாஸ்டர் சொன்னார்.

இதென்னடா ரோதனை என்று பத்மநாபனுக்கு அடிவயிற்றில் ஒரு பய பூச்சி பறந்தது. இன்றைக்கு ரிசல்ட். நாளைக்குப் பள்ளி திறக்கிறது. ரிசல்ட் பார்த்தாகிவிட்டது. அது ஒரு சம்பிரதாயம். பிரச்னை ஒன்றுமில்லை. பாஸாகிவிட்டிருந்தான். ஒரு முழு நாளை நிம்மதியாகக் கழித்துவிட்டு, நாளை முதல் தேசிய நீரோட்டத்தில் இணைந்துவிடலாம் என்று இருந்தவனுக்கு, இப்படி திடீரென்று ஹெட்மாஸ்டர் கூப்பிட்டு, ரூமுக்கு வரச் சொன்னது மிகுந்த அச்சத்தை விளைவித்தது.

எதற்கு வரச் சொன்னார்? குழப்பமாக இருந்தது. வளர்மதி ஏதாவது சொல்லியிருப்பாளா? வாய்ப்பில்லை. அவள் சமத்து. கடங்காரன் கலியமூர்த்தி ஏதாவது டபுள் கேம் ஆடியிருப்பானோ? விடுமுறைக் காலத்தில் அவனைப் பார்க்கவேயில்லை. ஒருவேளை நிரந்தர வில்லன் பெருமாள்சாமி வத்தி வைத்திருப்பானோ?

எப்படியும் அவன் பாஸாகியிருக்க மாட்டான் என்று பத்மநாபனுக்கு உறுதியாகத் தோன்றியது. நம்பர் தெரியாது. தெரிந்திருந்தால் பார்த்திருக்கலாம். ஆனால், ரிசல்ட் பார்த்த கூட்டத்தில் அவன் கண்ணில் படவில்லை. ஃபெயில் ஆனவர்களுக்கு ரிசல்ட் பேப்பர் அத்தனை முக்கியமில்லை. அந்தராத்மா முன்னறிவிப்பு செய்துவிடும்.

எதற்கு வரச் சொல்லியிருப்பார் ஹெட்மாஸ்டர்?


நின்றபடி யோசித்துக்கொண்டிருந்தான். கால் வலித்தது. ஐந்து நிமிடத்தில் வருவதாகச் சொன்னவர் இருபது நிமிடங்கள் கழித்து வந்தார். கூடவே மகாலிங்க வாத்தியார்! கடவுளே, இன்றைய ராசிபலன் ஏன் இத்தனை மோசமாக அமைந்திருக்கிறது?

''என்னடா, பாஸ் பண்ணிட்டியா?'' என்று கேட்டபடி, மகாலிங்க வாத்தியார் ஹெட்மாஸ்டருக்கு எதிரே உள்ள நாற்காலியில் அமர்ந்தார். ஹெட்மாஸ்டரும் உட்கார்ந்து ஒரு வாய் மோர் எடுத்துக் குடித்தார்.

''அப்புறம்... நீதான் பத்மநாபனா?' என்றார் ஹெட்மாஸ்டர்.

''உக்காருடா'' என்றார் மகாலிங்க வாத்தியார்.

பத்மநாபனுக்குச் சகலமும் சுழல்வது போலிருந்தது.



ஜிலுஜிலு தொடர்கதை 15

அரை கிலோ கனவு

"அட உக்காருடா பரவால்ல" என்று திரும்பவும் சொன்னார். அவன் தோளைப் பிடித்து அருகிலிருந்த நாற்காலியில் அழுத்தினார். பத்மநாபன் அடித்துப் போட்ட கரப்பான்பூச்சி போல் நாற்காலியின் ஓரத்தில் தொங்கியபடி அமர, "அன்னிக்கு நீ சொன்னப்ப நான் நம்பலை. ஆனா, இப்ப நம்பறேன்" என்று அந்தரத்தில் ஆரம்பித்தார் ஹெட்மாஸ்டர்.

அவனுக்கு உண்மையில் ஒன்றும் புரியவில்லை.

"ஐயம் வெரி ப்ரவுட் ஆஃப் யூ மை பாய்! அல்மோஸ்ட் எல்லா பாடத்துலயும் நைன்ட்டிஃபைவ் பர்சன்டுக்கு மேல வாங்கியிருக்க. கொஞ்சம் கஷ்டப்பட்டேன்னா அடுத்த வருஷ பப்ளிக் எக்ஸாம்ல, ஸ்டேட் லெவல் மார்க்குக்குக் கிட்ட வந்துடுவ."

பேசுவது யார்? ஹெட் மாஸ்டரா? பக்கத்தில் உட்கார்ந்து கையை அழுத்திப் பிடித்து மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டிருப்பது மகாலிங்க வாத்தியாரா! கடவுளே, இங்கு என்னதான் நடக்கிறது? இதெல்லாம் நிஜம்தானா?

"முழிச்சிக்கடா! நிஜந்தான். என்னாலயே நம்ப முடியல. நீ எப்படி நம்புவ?" என்று வாத்தியார் சிரித்தார்.

"சார்... யார் சார் ஃபர்ஸ்ட் ரேங்க் என் கிளாஸ்ல?" என்று குழறியபடி கேட்டான்.

"போடா லூசு! ஆறு செக்ஷன்லயும் சேத்து நீதான்டா ஃபர்ஸ்டு! என்ன ஃப்ராடு பண்ணியோ, என்னமோ. ஐந்நூறுக்கு நானூத்தி எண்பத்தொம்பது மார்க் எடுத்திருக்க! மேத்ஸ்ல சென்டம்; சயின்ஸுல சென்டம்; இங்கிலீஷ் செகண்ட் பேப்பர்ல சென்டம்! உங்கப்பாட்ட சொல்லு; சந்தோஷப்படுவாரு."

பத்மநாபனுக்குக் கரகரவென்று கண்ணிலிருந்து நீர் பொங்கி வழிந்தது.

"சேச்சே. இல்ல மகாலிங்கம். அன்னிக்கு எதுக்கோ இவனக் கூப்பிட்டு



பா.ராகவன்

வார்ன் பண்ணேன். அப்பவே சொன்னான். 'இனிமே ஒழுங்கா படிக்கறேன்; க்ளாஸ்ல ஃபர்ஸ்ட் வந்து காட்டறேன்'னு. டேலன்ட் உள்ள பையன்தான். வயசு பாருங்க! நடுவுல கொஞ்சம் தடுமாறிட்டான் போல. என்னடா?'' என்றார் ஹெட் மாஸ்டர்.

''எப்பவும் ஒம்பது, பத்தாவது ரேங்க் வருவான் சார். திடீர்னு புத்தி வந்திருக்கு போலருக்கு'' என்று மகாலிங்க வாத்தியார் விடாமல் சிவப்புத் தொப்பி அணியப் பார்த்தார்.

''எப்படியோ. தபாரு பத்மநாபா! கவர்மெண்டு ஸ்கூல்ஸ்ல பெரிய ரேங்க் வாங்கறவங்க யாரும் வர்றது கிடையாதுன்னு ஒரே குற்றச்சாட்டு. இதே மார்க்க நீ பப்ளிக் எக்ஸாம்ல காட்டிட்டன்னா, பேசறவங்க வாய அடைச்சிரலாம்! என்ன சொல்ற?''

''நிச்சயமா சார். இங்க சொல்லிக் குடுக்கற மாதிரி, வேற எங்கயுமே முடியாது சார்'' என்று மகாலிங்க வாத்தியார் தலையில் ஒரு கட்டி பனியை வைக்கும் விதமாக அவரைப் பார்த்தபடியே சொன்னான். ''உலகத்துலயே இவர்தான் சார் பெரிய மேத்ஸ் வாத்தியாரு!''

''சேச்சே. நீ நல்லா படிச்சேடா. அதான் காரணம்!'' என்றார் தியாகியாகும் உத்தேசத்துடன்.

பத்மநாபனுக்குக் கிறுகிறுவென்றிருந்தது. இன்னும் நம்பமுடியாமல்தான் இருந்தது. படித்திருந்தான். தேர்வு எழுதியதும் திருப்திகரமாகவே இருந்தது. ஆனாலும் இத்தனை மார்க் எதிர்பார்க்கவில்லை. ஒரு வகையில் ஹெட்மாஸ்டர் சொல்வது சரிதான். பள்ளியில் முதல் மார்க் என்று வருவதெல்லாம் நானூற்றுப் பத்து, நானூற்றுப் பதினைந்து என்கிற அளவில்தான். அதற்குமேல் முடியாது. குட்டிக்கரணம் அடித்தாலும் ஆங்கிலத்தில் யாரும் எண்பதைத் தாண்டியதில்லை. ஆனால், இதென்ன செகண்ட் பேப்பரில் சென்டம் என்கிறாரே! பழிகாரப் பன்னீர் செல்வம் முகத்தில் கரி பூசலாம்.

ஹெட் மாஸ்டர் அறையைவிட்டு அவன் வெளியே வந்தபோது, விஷயம் அநேகமாக அனைவருக்கும் தெரிந்து விட்டிருந்தது. அவனது வகுப்புத் தோழர்கள் அத்தனை பேரும் 'ஹூர்ரேஏஏ' என்று தூக்கிச் சுற்றி வீசினார்கள்.

''க்ரேட்ரா டேய், சைலன்டா சாதிச்சிட்ட!'' என்று பன்னீர்கூட வந்து கைகொடுத்தான். கலியமூர்த்தி, உடனடியாக ஒரு பாக்கெட் கமர்கட் வாங்கி அனைவருக்கும் வினியோகித்தான். ''பின்னிட்டடா மாப்ள! இன்னமே இஸ்கோல்ல இருக்கற எல்லா பொண்ணுங்களும் உன்னியத்தான் லவ் பண்ணும்'' என்றான் பாபு.

படத்தைப் பார்த்தா சிம்லா சீன் மாதிரி தெரியுதா...? ஏமாந்துடாதீங்க! நாகர்கோவில் பகுதி பள்ளம் கடற்கரையில மீன் வாசனைக்கு மத்தியில வளர்ந்துட்டு வர்ற 'அந்தோணியார்' படத்துக் காட்சிதான் இது. கனவுல சிம்லா என்ன, சுவிட்ஸர்லாந்துக்குக்கூட போகுற சௌகரியம் வாழ்க!

வளர்மதி!


ரிசல்ட் போர்டுக்குக் கீழே பெண்கள் அணி வட்டமிட்டு அமர்ந்திருந்தது. வளர்மதி இருந்தாள். பொற்கொடி, ராஜாத்தி, சுமதி, க்ளாரா எல்லோரும் இருந்தார்கள். பத்மநாபன் ஓடி வந்தபோது, வளர்மதி புன்னகையுடன் எழுந்து நின்றாள்.

''இங்க வாடா'' என்று அழைத்தாள். அருகே சென்றதும் நம்பமுடியாமல் ஒரு

காரியம் செய்தாள்.

''கங்கிராட்ஸ்!'' என்று கைகுலுக்க, நீட்டினாள்.

''எனக்குத் தெரியும்டா குடுமி. நீ இந்த வாட்டி சாதிச்சிருவேன்னு எதிர்



பார்த்தேன். எவ்ளோ சந்தோஷமா இருக்கு தெரியுமா? உங்கப்பா, அம்மா எவ்ளோ சந்தோஷப்படுவாங்க?''

''ஆமா வளரு. என்னால நம்பவே முடியல. நாநூத்தி எண்பத்தொம் போதாம்!''

''பழனி வாத்தியார் இப்பத்தான் சொல்லிட்டுப் போனார். தமிழ்லகூட தொண்ணூத்தி ஆறாம்டா! என்னடா செஞ்ச?''

''தெரியல வளரு'' என்று சொன்னான். தலை சுற்றுவது போலிருந்தது. பசிப்பது போலவும், வயிறு நிரம்பியது போலவும் உணர்ந்தான். எல்லாமே தித்திப்பாக, எல்லாமே வண்ணமயமாகத் தெரிந்தன.

இனி ஒன்றுமில்லை. தன்னால் முடியும்; நிச்சயம் முடியும்; என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும். ஃபர்ஸ்ட் ரேங்க் என்பது ஆசீர்வதிக்கப்பட்டவர்களின் சொத்து அல்ல. அடுத்த வருடம் நிச்சயம் இதற்குமேலே மார்க் வாங்கி விட முடியும். போகிற போக்கில் ஹெட் மாஸ்டர் சொல்லிவிட்டார். ஸ்டேட் ரேங்க். முடியாதா என்ன? ஒரு முயற்சி தானே? செய்து பார்த்தால்தான் என்ன?

உற்சாக வாழ்த்துகள் ஓய்ந்து, எல்லோரும் வீட்டுக்குப் புறப்பட்ட வேளையில் வளர்மதி மீண்டும் அவனிடம் வந்தாள். புன்னகை செய்தாள்.

''குடுமி, என்னை மன்னிச்சிருடா.''

''ஐயோ என்னாச்சு வளரு?''

''ஒன்ன ரொம்ப அலைய விட்டுட்டேன் இல்ல? பாவம் நீ. திரும்பத் திரும்ப என்னாண்ட வந்து நின்னுக்கிட்டே இருந்த. பெரிய இவ மாதிரி நான் கண்டுக்கவே இல்ல ஒன்ன.''

''சேச்சே. அப்படியெல்லாம் இல்ல வளரு. நான்.''

''நீ நெசமாகவே பெரியாளுடா. உன் அருமை தெரியாம இருந்துட்டோம் இத்தன நாளா.''

அவன் அமைதியாக இருந்தான். ஆனால், மனம் சிறகடிக்க அவன் காத்திருந்தான். 'சொல், சொல், சொல் வளர்மதி. இதற்காகத்தான் இத்தன நாளாகத் தவமிருக்கிறேன்.'

''நீ தப்பா நினைச்சிக்கலன்னா, ஒண்ணு சொல்வேன்.''

''சொல்லு வளரு.''

ஒரு கணம் தாமதித்தாள். பிறகு சிறிது வெட்கப்பட்டாள். ''வந்து... நானும் உன்னிய... லவ் பண்றேன்டா''

பத்மநாபனுக்குச் சகலமும் அமிழ்ந்து அடங்கியதுபோல் இருந்தது. இதுதான்; இவ்வளவுதான்; இதற்குமேல் ஒன்றுமில்லை. ஒரு கணம் கண்ணை இறுக்கி மூடி பெருமூச்சுவிட்டான். சட்டென்று அவளைப் பார்த்து உறுதியாகச் சொன்னான்.

''தெரியும் வளரு. ஆனா, கொஞ்சம் வெயிட் பண்ணு. அடுத்த வருஷம் பப்ளிக் எக்ஸாம் எழுதிட்டுப் பதில் சொல்றேன்'' என்று சொல்லிவிட்டு, விறுவிறுவென்று திரும்பிப் பாராமல் வீட்டுக்கு ஓடினான்.

(முற்றும்)

நடிகர் ஜே.கே.ரித்திஸ் தம் அலுவலகத்திலுள்ள தமது ஆளுயற புகைப்படம் முன்பு, 'டேய் ரித்திஸ், இந்தியப் பிரதமர் ஆகிற அளவுக்கு உன்கிட்ட அறிவும், அழகும் இருக்குடா' என்று நினைத்துக் கொண்டு இருக்கும்போது அவருடைய பி.ஏ. வருகிறார்.

பி.ஏ. : *சார்... இன்னைக்குக் காலைல பத்து மணிக்கு உங்களுக்கு குட்மார்னிங் சொல்ல 48 பேரும், கால்ல விழுந்து வணங்க அறுபது பேரும், கதை சொல்ல மூணு பேரும் ஏற்பாடு பண்ணிட்டேன். நீங்க அவங்களைச் சந்திக்கறீங்க.*

ரித்திஸ் : *அப்புறம்?*

பி.ஏ. : பன்னிரண்டு மணிக்கு, கத்திப்பாராவுல கழிப்பறையும், ஒரு மணிக்கு ஓட்டேரியில ஹோட்டலும் திறக்கறீங்க.

ரித்திஸ் : ஏம்பா, ஹோட்டல்னா சாப்பிட்டுத் திறந்து வைக்கலாம். கழிப்பறை திறந்தா கொஞ்ச நேரம் குந்தணுமோ?

பி.ஏ. : அதெல்லாம் தேவையில்லை. அப்புறம் 'கழிப்பறை திறந்த கார் மேகமே'ன்னு போஸ்டர் ரெடி பண்ணி, தமிழ்நாடு முழுக்க ஒட்டச் சொல்லிட்டேன்.

ரித்திஸ் : வெரிகுட்... அப்புறம்...?

(அப்போது பி.ஏ.வின் செல்ஃபோன் அலற, எடுத்துப் பேசிவிட்டு)

பி.ஏ. : *(ரித்திஸிடம்)* சார், சூப்பர் ஸ்டார் ரஜினிதான் பேசினார். அடுத்த மாசம் 'குசேலன்' படம் ரிலீஸ் பண்ணப் போறாங்களாம். நீங்க அவசரப்பட்டு உங்க 'நாயகன்' படத்தை ரிலீஸ் பண்ணிட்டிங்கன்னா, குசேலன் வசூல் பயங்கரமா பாதிக்கப்படுமாம். பத்து வட்டிக்கு வாங்கி, படத்தை முடிச்சிருக்காங்களாம். கொஞ்சம் அவருக்காக நீங்க விட்டுக் கொடுக்கணுமாம்.

ரித்திஸ் : அப்படியா சொன்னார். சரி, குசேலனோட மொத்த பட்ஜெட்டுக்கு மேல, இருபது கோடி கொடுத்து, படத்தை வாங்கி ரூம்ல பூட்டி வை. நாயகனுக்கு அப்புறம் நாமளே ரிலீஸ் பண்ணிடுவோம்.

(அப்போது ஓர் இளைஞர் பட்டாளம் 'வீர தளபதி'. மஞ்சள் எம்.ஜி.ஆர். அண்ணன் ரித்திஸ் வாழ்க என கோஷமிட்டபடி வருகிறது.)

ஜாலி ஸ்டோரீஸ்

தசாவதாரத்து ஒண்ணு!

ரித்திஸ் : என்னப்பா விஷயம் சொல்லுங்க.

இளைஞர் : நாங்கல்லாம் படிச்சிட்டு, வேலைவெட்டி இல்லாம சும்மா இருக்கோம். அதான் உங்களுக்கு மன்றம் ஆரம்பிச்சுப் பொழைச்சிக்கலாம்னு வந்திருக்கோம்.

ரித்திஸ் : பி.ஏ. இவங்களுக்கு ஒரு மன்றமும், மாசம் இருபதாயிரம் பணமும் அனுப்பிடுங்க.

பி.ஏ. : *(சிறிது நேரத்துக்குப் பிறகு)* அப்பாடா எல்லாம் முடிஞ்சது இனிமே கதைகேக்கறது மட்டும்தான்.

ரித்திஸ் : தூங்கறதுக்கு முன்னாடி கதை கேட்டுருவோம்; வரச்

உத்தமபுத்திரன்

சொல்லு. (அப்போது ஒரு இயக்குநர் பவ்யத்துடன் பம்மியபடி வருகிறார்).

டைரக்டர் : சார், உலகத்துல இதுவரை யாரும் பண்ணாத கேரக்டர் சார். ஒரு தங்கைக்கு அண்ணனா நடிக்கிறீங்க.

ரித்திஸ் : அப்படியா ரொம்ப வித்தியாசமா இருக்கே! படத்தோட பேரு?

டைரக்டர் : **தசாவதாரத்து ஒண்ணு.** பதினொரு அவதாரத்துல நடிக்கறீங்க. கமலைத் தூக்கிச் சாப்புடறீங்க.

ரித்திஸ் : அடடே... பதினொரு அவதாரமா? நல்லா இருக்கே.

டைரக்டர் : ஆமா சார். மான்ல இருந்து



மயிலு வரைக்கும். கோட்டான்ல இருந்து குரங்கு வரைக்கும் கெட்டப் போடப் போறீங்க.

ரித்திஸ் : படத்தோட பட்ஜெட் ரெண்டு கோடி மட்டும் தயாரிப்பாளர் போடட்டும். பப்ளிசிட்டி செலவு ஆறு கோடி மட்டும் நான் பார்த்துக்கறேன்.

டைரக்டர் : அப்புறம், வாலி சாரை வெச்சி '**ஒத்தையில நிக்கிறாரு ரித்தீஸு; அவர் அடிச்சா உடையுமா தர்பூஸு**'ன்னு ஒரு குத்துப்பாட்டு. க்ளைமாக்ஸ்ல அமிதாப்பச்சனைப் புரட்டி எடுக்கறீங்க. அவரு தலைக்கு மேல, காலைத் தூக்கி ஒரு போஸ் கொடுப்பீங்க பாருங்க...

ரித்திஸ் : என் உசரத்துக்கு ஒத்து வருமா?

டைரக்டர் : க்ராஃபிக்ஸ்ல பாத்துக்கலாம் சார்.

ரித்திஸ் : வெரி குட். அப்புறம் வர்ற எலக்ஷன்ல நிக்கப் போறேன். மக்களைக் கவர்ற மாதிரியும் சில சீன்கள் வேணும்.

டைரக்டர் : இருக்கு சார். மத்த தலைவருங்க, கிழவிங்க கண்ணை மட்டும்தான் துடைப்பாங்க. ஆனா நீங்க. புளிச்.... புளிச்சுன்னு தண்ணிய அடிச்சி, அவங்க முகத்தையே கழுவிவிடறீங்க. அப்புறம் வயக்காட்டைப் பாத்தா, நாத்து நடறீங்க. குருவிக்கார கும்பலோடு சேர்ந்து குருவி சுடறீங்க. '**நீங்க... நல்லா இருக்கோணும் நாடு முன்னேற**' பாட்டை ரீமிக்ஸ் பண்றோம். சொல்ல முடியாது. இந்த ஒரே படத்துல சி.எம். ஆனாலும் ஆயிடுவீங்க.

(அப்போது ஃபோன் வருகிறது)

பி.ஏ. : ஹலோ 'வாரி வழங்கும் பாரி வள்ளல்' ரித்தீஸ் ஆபீஸ்தான் இது. நீங்க?

(ஃபோன் குரல்) யோவ்... அங்க தசாவதாரத்து ஒண்ணுன்னு கதை சொல்ல ஒருத்தன் வந்தானா?

பி.ஏ. : ஆமா... சார்.. உள்ள கதைசொல்லிக்கிட்டு இருக்கார்.

(ஃபோன் குரல்) யோவ்... அவன் கீழ்ப்பாக்கம் மெண்டல் ஆஸ்பத்திரியில இருந்து தப்பிச்சு வந்த சினிமா பைத்தியம்யா...

(என்று சொல்லிக் கொண்டு இருக்கும் போதே, 'ஐயய்யோ.. காப்பாத்துங்க.. காப்பாத்துங்க' என்று ரித்தீஸ் குரல் கேட்கிறது)

பி.ஏ. : டேய் ஓடி வாங்கடா. நாட்டைக் காப்பாத்த வந்த அண்ணனை, முதல்ல பைத்தியத்துக்கிட்ட இருந்து காப்பாத்துவோம்.

(என்றபடி ரித்தீஸ் இருக்கும் அறையை நோக்கி ஓடுகின்றனர்.)

"வாரி வழங்கும் பாரி வள்ளல் அண்ணன் ரித்திஷ் ஆபீஸ்லேர்ந்து பேசறோம். நீங்க யாரு ரஜினியா?"



அனுபவ முத்துகள்!

புத்தக விமர்சனம்

சங்கீதப் பெருங்கடல் - ராணி மைந்தன், கலைஞன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், சென்னை - 17, விலை ரூ.80

டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா அவர்களின் வாழ்க்கை வரலாறு. மழலையாக மேடையேறிய அனுபவம் முதல், சபாக்களின் அழைப்பு, வானொலியில் வேலை, கல்லூரி முதல்வர், வெள்ளித்திரை பாடகர்... என, அடுத்தடுத்து உயர் சிகரங்களைத் தொட்ட தம் வாழ்வனுபவங்களை ரசனையுடன் வெளிப்படுத்தியுள்ளார் இம் மாபெரும் இசைமேதை. அனுபவ முத்துகளின் சங்கமம்.

கண்டுபிடித்தது எப்படி? - கே.என்.ஸ்ரீனிவாஸ், விகடன் பிரசுரம், 757, அண்ணாசாலை, சென்னை - 02, விலை.ரூ.50

மருத்துவம், அணு ஆய்வு துறைகளில் சாதனை புரிந்த கண்டுபிடிப்பாளர்களின் வாழ்க்கைக் கதைகள், மற்றும் கண்டு பிடிப்புகளுக்காக அவர்கள் பட்ட சிரமங்கள் பற்றி விளக்கிச் சொல்லும் தொகுப்பு நூல். மருத்துவத் துறைக்குத் தேவைப் படும் கருவிகள், தடுப்பு மருந்துகள், அணுக்கள் குறித்த கண்டுபிடிப்புகள்... என அறிவியல் செய்திகள் மட்டுமின்றி, கண்டுபிடிப்புகளின்போது நடந்த சம்பவங்களையும் சுவாரஸ்யத்துடன் வழங்கியுள்ளார் ஸ்ரீனிவாஸ்.

சுகப் பிரசவம் - டாக்டர் மகேஸ்வரி ரவி, நலம், 33/15, எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார் பேட்டை, சென்னை - 18, விலை. ரூ.60

தாய்மைப்பேறு பெற்ற பெண்களுக்குத் தேவையான புத்தகம். கர்ப்ப காலத்தில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள், பரிசோதனைகள், பிரசவம் எப்போது ஏற்படும், பிரசவத்துக்குப் பின் குழந்தையைப் பராமரிப்பது எப்படி போன்ற தகவல்களுடன் வந்திருக்கிறது. கிராமப்புறப் பெண்களும் எளிதில் புரிந்துகொள்ளும் நடையில் விளக்கியுள்ளார் லக்ஷ்மிமோகன்.

காகிதப் பூவில் தேன்துளிகள் - நந்தவனம் சந்திரசேகரன், இனிய நந்தவனம் பதிப்பகம், 5, புதுத்தெரு, உறையூர், திருச்சி - 03, விலை ரூ.45.

மனிதநேயம், சமுதாய நோக்கு, பொதுநல உணர்வோடு வாழ்வது பற்றி அறிவுறுத்துகிறார் கவிஞர். மதவெறி, சாதிபேதம், அரசியல், சிசுக் கொலை, அக்கா கவிதைகளில் குமுறுகிறார். தன்னம்பிக்கை கவிதைகள் சிறு துளிகளாய்ச் சொட்டும் தேன் துளிகள்!

- மித்ரா



முடி சூட்டப்பட்ட தங்கபாலு...

* இளங்கோவன்



ஒரு செவ்வாய்க்கிழமை, தங்கபாலுவை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக நியமிக்கும் அறிவிப்பை வெளியிட்டது தில்லி மேலிடம். அதற்கு முந்தைய வெள்ளிக்கிழமை இரவு தில்லியிலிருந்து சென்னை வந்தார் ஜி.கே.வாசன். ''தில்லியில் நிலைமை எப்படி இருக்கு?'' என்று ஆர்வமுடன் விசாரித்த நெருங்கிய பிரமுகர்களிடம், ''ஞானதேசிகனுக்கு எல்லா மட்டத்திலும் ஓ.கே. ஆகிவிட்டது. செவ்வாய்க்கிழமை அறிவித்துவிடுவார்கள்'' என்று உறுதியுடன் சொன்னார். ஆனால், செவ்வாய் அன்று வந்த அறிவிப்பு, வாசன் ஆதரவு பிரமுகர்களை அதிர்ச்சியடைய வைத்துவிட்டது. இடைப்பட்ட நாட்களில் என்ன நடந்தது?

ஞானதேசிகனா... சுதர்சன நாச்சியப்பனா... என்கிற ரேஸில், ஞானதேசிகன் முன்னணியில் இருந்தது என்னவோ உண்மை. ஆனால், இறுதிக் கட்டத்தில் ப.சிதம்பரத்திடம், 'ஏற்கெனவே தமிழ்நாடு சட்டமன்ற காங்கிரஸுக்கு வாசன் கோஷ்டியைச் சேர்ந்த சுதர்சனம் தலைவராக இருக்கிறார். இந்த நிலையில், மாநிலத் தலைமையையும் வாசன் கோஷ்டிக்கே கொடுத்தால், த.மா.காவுக்குப் போகாமல் விசுவாசத்துடன் தொடர்ந்து கட்சியில் இருந்து உழைத்த பிரமுகர்களின் மனம் புண்படாதா... அப்புறம் அவர்கள் எப்படி உற்சாகத்துடன் பணியாற்றுவார்கள்?' - என்ற கருத்து முன் வைக்கப்பட்டது. 'பரிசீலிக்கப்பட வேண்டிய கருத்தாக இருக்கிறதே' என்று கருதிய ப.சி., உடனே சோனியாவின் முதன்மை அரசியல் ஆலோசகரான அகமது படேலைத் தொடர்புகொண்டார். தமிழகத்தைப் பொறுத்தவரை, காங்கிரஸ் சார்பில் எதிர்காலத்தில் முதல்வர் பதவிக்கு முன்னிலைப்படுத்தக் கூடியவராக ப.சிதம்பரத்தையே காங்கிரஸ் தலைமை நினைக்கிறதாம். எனவே, மாநிலத் தலைவரை நியமிப்பதால், ப.சி.யின் கருத்துக்கள் மதிக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில்தான் சுதர்சன நாச்சியப்பன் கழற்றி விடப்பட்டார்.

ப.சி., எழுப்பிய கோரிக்கையை மிக நியாயமாகக் கருதிய தலைமை, 'அப்படி என்றால் யாரைப் போடலாம்?' என்ற



* தங்கபாலு

தேடுதலில் இறங்கியது. ப.சிதம்பரம், தமக்கு வேண்டாமென்று சொல்லிவிட்டார். ஜெயந்தியும், தில்லியில் அரசியல் செய்ய விரும்புவதாகச் சொல்லிவிட்டார். இளங்கோவனைப் போடலாம் என்று சற்றுத் தீவிரமாகவே பரிசீலித்த போது, 'தேர்தல் வரும் நிலையில், மனிதர் எதாவது அதிரடியாகப் பேசிவிட்டால் கூட்டணி ஆட்டம் கண்டுவிடுமே' என்ற அடிப்படையில் அவர் ஒதுக்கப்பட்டார். தங்கபாலுவின் அந்தக் கால நண்பரான வயலார் ரவி, அவரது பெயரை முன்மொழிந்தார். காஷ்மீரிலிருந்து குலாம் நபி ஆசாத்தும், தங்கபாலுவுக்காக

"ஞானதேசிகனுக்கு எல்லா மட்டத்திலும் ஓ.கே. ஆகிவிட்டது செவ்வாய்க்கிழமை அறிவித்து விடுவார்கள்" என்று உறுதியுடன் சொன்னார் ஜி.கே.வாசன்!



முடக்கப்பட்ட வாசன்!

அகமது படேலிடம் சொல்லி வைத்தார். தனிப்பட்ட முறையில் நன்கு பழகும் தங்கபாலுவுக்கு, பரந்துபட்ட அரசியல் செல்வாக்கு இல்லாததால் சிதம்பரமும், இளங்கோவனும் உடனே ஒப்புக்கொண்டனர். அறிவிப்பு வந்துவிட்டது; முடக்கப்பட்டார் வாசன்.

தங்கபாலுவைப் பொறுத்த வரை, கட்சியில் தொண்டராக இருந்து இந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறார். தலைமை மீது அப்பழுக்கில்லாத விசுவாசம். இளைஞர் காங்கிரஸ் தலைவராக இருந்த போது எம்.ஜி.ஆரை எதிர்த்து அரசியல் நடத்திக் கலக்கியவர். கடும் உழைப்பாளி. அனைவரையும் அனுசரித்துப் போகக்கூடியவர். ஏற்கெனவே தலைவராக இருந்திருந்தாலும், மீண்டும் வாய்ப்புக் கிடைக்க இவையே கூடுதல் காரணங்கள்.



* ப.சிதம்பரம்

* ஞானதேசிகன்



"சட்டமன்றத் தலைவரான சுதர்சனத்தைக் காப்பாற்றுவதற்காக, மாநில தலைமை வாய்ப்பை இழந்திருக்க வேண்டியதில்லை" என்கிறார், வாசன் தரப்புப் பிரமுகர் ஒருவர்.

"இன்னமும் த.மா.கா - காங்கிரஸ் என்று பிரித்துப் பார்த்துச் செயல்பட்டால், கட்சி எப்படி வளரும்; கோஷ்டி எப்படி ஒழியும்?" என்கிறார்கள், நடுநிலையான சில காங்கிரஸ் பிரமுகர்கள்.

– ப்ரியன்

உடற்பயிற்சிக்கு முன் உண்ணலாமா?

கூலா சாப்பிடுங்க!

என்ன சாப்பிடுவது என்பது முக்கியம்தான். எப்போது சாப்பிடுகிறோம் என்பதும் முக்கியம். சாப்பிட்டவுடன் எதைச் செய்யக்கூடாது என்பதும் சந்தேகமில்லாமல் முக்கியமானதுதான்.

சாப்பிட்டவுடன் எந்தவிதமான செயல்களில் ஈடுபடக்கூடாது?

இது தொடர்பாக, லண்டனில் நடைபெற்ற ஓர் ஆராய்ச்சி குறிப்பிடத்தக்கது.

'பிபிஸி ஹெல்த்'தில் விவரித்திருந்த அந்த ஆராய்ச்சிக்கு உடன்பட்டவர்கள் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். இரு தரப்பினரும் வயிறு நிறைய காலைச் சிற்றுண்டி சாப்பிட்டனர். ஒரு மணி நேரத்துக்குப் பிறகு, ஒரு குழுவினர் கடுமையான உடற்பயிற்சியில் (exercise cycle) ஈடுபட்டனர். மறு குழுவினர் ஓய்வெடுத்துக்கொண்டனர்.

கணக்கெடுத்ததில் பயிற்சி செய்தவர்கள், 492 கிலோ கலோரிகளை இழந்திருந்தனர். ஓய்வெடுத்தவர்கள், 197 கிலோ கலோரிகளைத்தான் இழந்திருந்தனர்.

மேலும் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு, இரு குழுவினரும் வேண்டியதைச் சாப்பிடலாம் என்று கூற, எதிர்பார்த்தபடியே பயிற்சி செய்தவர்கள் அதிகமாகத்தான் சாப்பிட்டனர். அப்போது இரு தரப்பினரும் உடலில் சேர்த்துக்கொண்ட கலோரிகள் எவ்வளவு தெரியுமா?

பயிற்சி செய்தவர்கள் 913 கிலோ கலோரிகளையும், பிற குழுவைச் சேர்ந்தவர்கள் 762 கிலோ கலோரிகளையும் சேர்த்துக்கொண்டனர்.

என்றாலும், மொத்தம் கணக்கிட்டுப் பார்த்தால், பயிற்சி செய்தவர்கள் 421 கிலோ கலோரிகளை மட்டுமே சேர்த்திருக்க, ஓய்வெடுத்துக்கொண்டவர்கள் 565 கிலோ கலோரிகளைச் சேர்த்துக் கொண்டிருந்தனர்.

ஆக கூட்டிக் கழித்துப் பார்த்தால், 'சாப்பிட்ட பிறகு பயிற்சி செய்வது நல்லது. இதன்மூலம் அதிகக் கலோரிகளை இழக்க முடியும்' என்று கூறுகிறார்கள்.

உடற்பயிற்சி என்பது சந்தேகமில்லாமல் சிறந்ததுதான். அதுமட்டுமல்ல, வயிறு எப்போது நிறைகிறது என்பதை மூளைக்குத் தெரிவிக்க, சில ஹார்மோன்கள் உள்ளன. அந்த ஹார்





டாக்டர் எஸ்.ராஜேந்திரன்

மோன்களின் அளவும் உடற்பயிற்சியினால் அதிகமாகிறது.

எனினும், மேற்படி ஆராய்ச்சியில் கவனிக்க வேண்டிய இன்னொரு விஷயமும் இருக்கிறது. சாப்பிட்ட ஒருமணி நேரத்துக்குப் பிறகுதான் அவர்கள் பயிற்சியில் ஈடுபட்டனர் என்பதுதான் அது.

பொதுவாகவே சாப்பிட்டவுடன் எந்த உடற்பயிற்சியையும் செய்வது நல்லது அல்ல. ஏன்? வாந்தி வரும் என்பதாலா? அதைவிட முக்கிய காரணங்கள் உண்டு.

சாப்பிட்டவுடன் இரத்தத்தில் சுமார் நான்கில் ஒரு பங்கு, முக்கிய ஜீரணப் பகுதிகளை நோக்கி விரைகிறது; அதாவது வயிறு மற்றும் குடல் பகுதிகளை நோக்கி. இதன் விளைவை வேறொரு விதமாகவும் சொல்லலாம். மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டம் வழக்கத்தை விடக் குறைகிறது. மூளை செல்களுக்கு அதிகம் தேவைப்படும் ஆக்ஸிஜன் மற்றும் பிற சத்துக்கள், இதனால் போதிய அளவு கிடைக்காமல் போகிறது. இதன் காரணமாகத்தான் சாப்பிட்ட சற்று நேரத்தில் ஒருவிதச் சோர்வு அல்லது மெத்தனம் உண்டாகிறது. மூளை போதிய அளவு சுறுசுறுப்பாக, விழிப்புணர்வோடு இல்லாதபோது கடும் உடற்பயிற்சியில் ஈடுபட்டால், ஜீரண மண்டலத்துக்குச் செல்ல வேண்டிய இரத்தம் திசை திரும்புகிறது. எனவே அஜீரணம் உண்டாக வாய்ப்பு தோன்றுகிறது. தவிர, மூளை முழுமையாகச் செயல்படாதபோது பலவித ஆபத்துகள் உண்டாகலாம்.

எண்ணெய் தேய்த்துக் குளித்தவர்களுக்கு அதன் அருமை தெரியும். குளித்து முடித்த ஓரிரு மணி நேரத்தில், தூக்கம் கண்களைச் சுழற்றும். ஏன்? அப்போது தோல் பகுதிக்கு இரத்தம் பாய்கிறது. மூளைக்கு இரத்தம் குறைகிறது.

மாரடைப்பு உண்டானவர்கள் சிறிது காலத்துக்கு உடலுறவு கொள்ளக்கூடாது. அல்லது முன்னெச்சரிக்கையுடன் ஈடுபட வேண்டும் என்று சொல்வதுண்டு. காரணம், அந்த நேரத்தில் இதயத் தசைகளுக்குப் பாயும் இரத்தம் குறைந்து விடலாம் என்பதுதான்.

நடைப் பயிற்சி செய்பவர்கள்கூட, சாப்பிட்ட ஒரு மணி நேரத்துக்குப் பிறகே அதைச் செய்ய வேண்டும். இங்கே இன்னொரு விஷயத்திலும் தெளிவு வேண்டும். சாப்பிட்டவுடன் நடக்கக்கூடாதென்று நான் கூறவில்லை. மார்க்கெட்டுக்கோ பஸ் நிறுத்தத்துக்கோ பிற இடங்களுக்கோ நடந்து செல்வதில் பாதகமில்லை. ஆனால், நடைப் பயிற்சியாக (அதாவது விரைவான நடையாக) செய்வது குறித்துதான் எச்சரிக்கை.

(தொடரும்)

எழுத்து வடிவம்: **ஆதர்ஷ்**

தங்கச் சங்கிலி

அண்ணாசாமி

என்னுடைய மனைவியின் நற்குணங்களையெல்லாம் விவரிக்க வேண்டுமானால் 'விகட'னில் இடம் போதாது. ஆகையால் துர்க்குணங்கள் இரண்டை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன். அவளுக்கு நகைப் பைத்தியம் அசாத்தியம். ஜோதிடத்தில் பைத்தியமோ அதைவிட அதிகம். என்ன காரியமானாலும் நாள் நட்சத்திரம் பாராமல் செய்யமாட்டாள். அதிலும் ஜோசியர் நாள் பார்த்துச் சொன்னால்தான் அவளுக்குத் திருப்தி.

என் மனைவியின் கல்யாணத்தின்போது, அவளுக்குக் கழுத்தில் ஒரு வடம் தங்கச் சங்கிலி செய்து போட்டிருந்தார்கள். சென்ற வருஷத்தில் எனக்கு சம்பளம் 50 ரூபாயிலிருந்து 60 ரூபாய்க்கு பிரமோஷன் ஆனதும், ஒற்றை வடம் சங்கிலியை இரட்டைவடமாக்கிக் கொள்ள வேண்டுமென்று என் மனைவி பிரேரணை செய்தாள். அதை அவளே ஆமோதித்து, ஆதரித்தும் விட்டாள். வாக்கெடுக்கும்போது நான் நடுநிலைமை வகித்தபடியால் பிரேரணை நிறைவேறிவிட்டது. எனவே, அதைக் காரியத்தில் நடத்தி வைப்பதைத் தவிர, எனக்கு வேறு வழியில்லாமல் போயிற்று.

அதாவது, அந்த மாதம் முதல் மாதம் 10 ரூபாய் மீதி செய்து பாங்கியில் போட்டுவரத் தொடங்கினேன். சென்ற மாதத்தில் இது 120 ரூபாய்க்கு வந்தது. மற்றொரு வடம் சங்கிலிக்கு எட்டு பவுன் வேண்டும். பவுன் 13½ வீதம் எட்டு பவுனுக்கு 108 ரூபாயும், கூலிக்கு பாக்கி 12 ரூபாயும் போதுமாகையால், ஒரு நாள் நகைக் கடைக்குப் போய் வருவ



தென்று தீர்மானித்தோம். செப்டெம்பர் 20ஆம் தேதி எனக்கு அவகாசமிருந்தது. ''இன்றைக்குப் போகலாமா? பாங்கியில் போய்ப் பணம் வாங்கி வரட்டுமா?'' என்று கேட்டேன். ''ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுக்கவில்லையா? நாலு நாள் போகட்டும்'' என்றாள் என் மனைவி. எனக்கு இது மிகவும் அதிசயமாயிருந்தது. ஆனால், காலையில் அண்ணாசாமி ஜோசியர் வந்துவிட்டுப் போனது ஞாபகம் வந்ததும் அதிசயம் போய்விட்டது. ''ஓகோ! நாள் நன்றாயில்லையோ? என்றைக்குத்தான் நன்றாயிருக்கிறது?'' என்று கேட்டேன். ''அடுத்த வெள்ளிக்கிழமை நகை பண்ணுவதற்கு ரொம்ப நல்ல நாளாம்'' என்றாள் என் மனைவி.



பத்திரிகை, கித்திரிகை படிக்கும் வழக்கம் என்னிடம் கிடையாது. யார் எப்படிப் போனால் என்ன என்று என்பாட்டில் இருப்பேன். எனவே, வியாழக்கிழமை பாங்கிக்குச் சென்ற போது, சென்ற நாலு நாட்களாக பாங்கி மூடியிருக்கிறதென்று அறிந்து திடுக்கிட்டுப் போனேன். 'பிச்சைக்காரன் குடிசையில் சனீசுவரன் புகுந்தது போல' என்னுடைய சொற்பப் பணத்துக்கு மோசம் வந்துவிடுமோ என்று பீதி அடைந்தேன். நல்லவேளையாக மறு நாள் காலையில் பாங்கி திறந்து பணமும் கொடுத்தார்கள். முதல் நாள் இரவு கலங்கியிருந்த என் மனைவி இப்போது, ''பார்த்தயளா? பார்த்தயளா? தட்டாமல் கிடைத்ததே! பெரியவாள் நாள் பார்த்துச் சொல்றது வீண் போகுமா?'' என்று சொல்லிச் சொல்லி சந்தோஷப்பட்டாள்.

சாயங்காலம் நகைக் கடைக்குப் போனோம். எட்டு பவுனில் மனதுக்குப் பிடித்ததாய்ப் பார்த்து, என் மனைவியே ஒரு சங்கிலியை எடுத்துக்கொண்டாள். கடைக்காரன் பில் எழுதிக் கொடுத்தான். அதில் மொத்தம் 145 ரூபாய் போட்டிருந்ததைக் கண்டு நான் புன்சிரிப்புடன், ''செட்டியாரே! கணக்கு தவறாகப் போட்டிருக்கிறீர்களே!'' என்றேன். செட்டியார் வாங்கிப் பார்த்துவிட்டு, ''தவறு ஒன்றும் இல்லையே'' என்றார். ''தவறு இல்லையா? எட்டு பவுனுக்கு 13½ ரூபாய் வீதம் 108 ரூபாய்



"நன்றாய்ச் சொன்னீர்கள், இதுதான் புருஷாள் அசட்டுத்தனம் என்பது."

தானே. 136 ரூபாய் போட்டிருக்கிறீர்களே?'' என்றேன். செட்டியார் சிரித்துவிட்டு, ''பவுன் விலை 17 ரூபாய்'' என்றார். ''இது என்ன கூத்து?'' என்றாள் என் மனைவி. ''என்ன செட்டியாரே! என்னைப் பட்டிக்காட்டான் என்று நினைத்துக்கொண்டீரா?'' என்று கோபமாய்க் கேட்டேன். ''இல்லை... ஸார்! நீங்கள் பட்டணத்து மனிதர்தான். ஆனால், வாசலில் போர்டில் எழுதியிருக்கிறது. போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள்'' என்றார் செட்டியார்.

சங்கிலி வாங்காமலே நாங்கள் வீடு திரும்பவேண்டியதாயிற்று. வீடு சேரும் வரையில் வாயை மூடிக்கொண்டு வந்த என் மனைவி, வீட்டுக்குள் நுழைந்தோமோ இல்லையோ, தன்னுடைய ஆத்திரத்தையெல்லாம் அண்ணாசாமி ஜோசியர் மீது காட்டத் தொடங்கினாள். ''அந்தக் கட்டேலே போற பிராமணன் இனிமேல் இங்கே வரட்டும். காப்பியா காப்பி! கழுநீரைக் கரைத்துக் கொடுக்கிறேன்'' என்றும், இன்னும் பலவிதமாகவும் அவரை வசை மொழிகளால் அலங்கரிக்கத் தொடங்கினாள்.

''ஏன் இவ்வளவு ஆத்திரப்படுகிறாய்? நாளை தினம் வேண்டுமானால் 30 ரூபாய் கடன் வாங்கிக்கொண்டு வருகிறேன். சங்கிலி வாங்கிக்கொண்டு வந்துவிடலாமே!'' என்றேன்.

''நன்றாய்ச் சொன்னீர்கள், இதுதான் புருஷாள் அசட்டுத்தனம் என்பது. நேற்று 13½ ரூபாயா இருந்த பவுனை இன்றைக்கு 17 ரூபாய் கொடுத்து யாராவது வாங்குவார்களா? அப்படி என்ன வந்தது இப்போது? பாங்கியில் பணம் இருந்தாலும் வட்டியாவது கிடைக்கும்'' என்றாள் என் மனைவி.

அண்ணாசாமி ஜோசியரை என் மனதுக்குள் வாழ்த்தினேன்.

''இன்னொரு வடம் சங்கிலி இல்லை என்று என் கழுத்து ஒன்றும் காத்துக் கிடக்கவில்லை. பிழைத்துக் கிடந்தால் பார்த்துக் கொள்ளலாம். ஆனால், அந்தக் கட்டேலே போற பிராமணன் ஜோசியம் பார்க்கிறானே, ஜோசியம்? பவுன் விலை இப்படி ஏறப்போறது என்று ஜோசியத்தில் பார்த்துச் சொல்கிறதுதானே! அன்றைக்கு எட்டு பவுன் வாங்கி வைத்திருந்தால் இப்போது 28 ரூபாய் லாபத்துக்கு விற்கலாமே?'' என்றாள்.

அப்பொழுதுதான், என்னுடைய மனைவி கேவலம் ஓர் ஆபீஸ் குமாஸ்தாவுக்கு வாழ்க்கைப்பட்டது பெருந்தவறு என்பதை அறிந்தேன். பெரிய பாங்க் முதலாளியையாவது, பொக்கிஷ மந்திரியையாவது அவள் மணம் புரிந்து கொண்டிருக்க வேண்டும்! - நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ○

''பெரிய தொந்தியோட ஓடி திருடனைத் துரத்த முடியுமா?''

''துரத்த வேணாம்! அவங்களே கரெக்டா மாமூலைக் கொண்டு வந்து கொடுத்திடுவாங்க!''

- ஆர்.சம்பத்



நீங்கள் கேட்டவை

தராசு

● கே.கணேசன், மறைமலைநகர்

? கருணாநிதி தலைமையிலான தி.மு.க. ஆட்சி, நீதித் துறைக்குப் பொற் காலம் என்று துரைமுருகன் பெருமிதப் படுகிறாரே?

! நீதிமன்ற வளாகங்கள், வசதிகள் பெருகுவதால் மட்டுமே பொற்காலம் அமைவதில்லை. மக்களுக்கு விரைந்து நீதி கிடைக்க வேண்டும். பிரமுகர்கள் குற்ற வாளிகளாக தொடர்புபடுத்தப்பட்டுள்ள பல முக்கிய வழக்குகள் துரிதமாக நடந்து, உரிய தண்டனை விதிக்கப்பட வேண்டும். அரசு தரப்பு வழக்குரைஞர்கள் அரசியலுக்கப் பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும். இவையெல்லாம் எந்த ஆட்சியிலும் சீராக இருப்பதாகத் தெரியவில்லை.

● எஸ்.பக்கிரிசாமி, திருவாரூர்

? கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய பிறகு மகிழ்ச்சியாக இருப்பதாக, நடிகை நக்மா குறிப்பிட்டுள்ளது பற்றி...?

! மகிழ்ச்சி என்பது மனம் சார்ந்தது; மதம் சார்ந்ததல்ல. கிறிஸ்தவ மதத்தில் சேராமல் சந்தோஷமாக இருக்கும் வேறு மதத்தினரும் ஏராளமாக உண்டு.

● என்.கோதண்டராமன், மதுராந்தகம்

? வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் ஏழை எளிய மக்களிடமிருந்து மட்டும் ஆண்டுக்கு, தொள்ளாயிரம் கோடி ரூபாய் லஞ்சம் பெறப்படுவதாக ஆராய்ச்சி மூலம் தெரிய வந்துள்ளதே... நம் நாட்டு மக்களுக்கு

வேட்பாளர் பட்டியல் வெளியிட்டுள்ளதே பா.ஜ.க.?

● க.வேடியப்பன், கும்மிடிப்பூண்டி

? வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கு, முன்கூட்டியே பா.ஜ.க. வேட்பாளர் பட்டி யலை வெளியிட்டுள்ளது எதைக் காட்டு கிறது?

! பெரும்புள்ளிகளான ஒரு சில வேட் பாளர்கள் தொகுதிகள்தான் வெளியிடப்பட் டுள்ளன. போட்டி, அதிருப்தி, உட்பூசல் எல்லாம் இனிமேல்தான் தலைதூக்கும். இப்போதைய அறிவிப்புக்கு இரண்டு நோக்கங்கள் - 1) மத்திய அரசு விரைவில் கவிழும் என்ற எண்ணத்தை உருவாக்குதல், 2) தேர்தலுக்குத் தாங்கள் தயார் என்று தோள் தட்டுதல்!



* ஒரு கோடி வாழ்த்துகள்!

விழிப்புணர்வே ஏற்படாதா?

! ஏழை - எளிய மக்கள் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளத்தான் வேறு வழியின்றி லஞ்சம் கொடுப்பார்கள். விழிப்புணர்வு அவர்களுக்கு இருந்து என்ன பயன்? தொள்ளாயிரம் கோடி ரூபாய் கறுப்புப் பணம், நாட்டின் பொருளாதாரத்தை என்ன பாடு படுத்தும்? விழிப்புணர்வு ஏற்பட வேண்டியது ஆட்சியில் இருக்கும், தலைகால் புரியாத தலைவர்களிடம்தானேயொழிய சாமானிய மக்களிடம் அல்ல!

● **என்.காளிதாஸ், சிதம்பரம்**

? முஃப்தி முகமது சயீத் கட்சி ஆதரவு வாபஸ் பெறப்பட்டதால், காஷ்மீரில் காங்கிரஸ் கூட்டணி அரசு மெஜாரிட்டி இழந்துவிட்டதே?

! தொடர்ந்து குலாம் நபி ஆசாத் ராஜினாமா செய்துவிட்டார். யாத்திரிகர் நலனுக்குச் செயல்படுவது என்ற ஒரு சிறிய விஷயத்தில், இத்தனை பெரிய பின் விளைவு ஏற்பட அனுமதித்தே இருக்க வேண்டாம். ஆட்சியில் இருப்போருக்கு முன் யோசனை எவ்வளவு அவசியம் என்பதை எடுத்துக்காட்டும் நிகழ்வு!

● **லெமூரியன், திருவண்ணாமலை**

? பத்திரிகையாளரான அஷீஷ் நந்தி மீது, குஜராத் அரசு தொடுத்த வழக்கை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது பற்றி...?

! கருத்துச் சுதந்திரத்துக்குக் கிடைத்த நியாயமான வெற்றி.

● **ரேவதிப்ரியன், ஈரோடு**

? 'அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை; நிரந்தர எதிரியும் இல்லை' என்று கூற, இப்போது வடநாட்டிலும் ஒரு கட்சித் தலைவர் கிளம்பிட்டாரே?

! தெற்கே, வடக்கே, மேற்கே, கிழக்கே - எல்லா திக்கிலும் இதே கதைதான். அரசியலில் நிரந்தர நண்பரும் இல்லை; நிரந்தர எதிரியும் இல்லை. நிரந்தரமானது பதவி ஆசை மட்டுமே!

● **பா. அச்சுதன், வயலூர்**

? கவிஞர் ஈரோடு தமிழன்பன் பற்றி...?

! தமிழ் அவரிடம் அன்பு பூண்டிருக்கிறது என்று சொல்லத்தக்க அளவில் ஆழமான, நுட்பமான விஷயங்களைச் சொல்லவல்ல அரிய கவிஞர்.

● **லெ.நா.சிவகுமார், சென்னை - 33**

? மக்களவைத் தேர்தலுக்குத் தயாராகும்படி சோனியாகாந்தி தமது கட்சியினருக்குக் கட்டளை இட்டுள்ளாரே?



* அரசியல் சறுக்கல்!



* திருமண தியாகம்



* கிளம்பிட்டாரய்யா!

! கட்சித் தொண்டர்களைவிட மக்கள், வாக்களிக்க ரொம்பவே தயாராக இருக்கிறார்கள். விலைவாசி உயர்வுக்கு அசட்டுச் சமாதானம் சொல்லிக் கொண்டிருக்கும் பொருளாதாரப் புலிகளுக்குப் புல் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள்.


● **கி.துரைசாமி,**
மங்கலப்பட்டி *

? யாருடைய கேள்விக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டியதில்லை; யாருடைய கேள்விக்கு பதில் சொல்லியாக வேண்டும்?

! 'யாருடைய' என்பதைவிட 'எத்தகைய' என்பதே முக்கியம். அணு சக்தி ஒப்பந்தம் பற்றி கம்



✱ நேரம்தான்!



✱ அன்பு கொண்ட தமிழ்!



✱ மகிழ்ச்சி தத்துவம்

யூனிஸ்டுகளின் கேள்விகளுக்கு, பிரதமர் பதில் சொல்லியாக வேண்டும்; சொல்லவில்லை. 'ஜெ'யின் சில கேள்விகளுக்கு, கருணாநிதி பதில் கூற அவசியமில்லை; சொல்கிறார்!

● **எஸ்.வெங்கடரமணன், சென்னை - 33**

? 'மொபைல் டாய்லட்' திட்டத்தைச் செயல்படுத்தும் சிவகாசி மற்றும் ஆலந்தூர் நகராட்சி பற்றிய கருத்து என்ன...?

! சரியாகப் பயன்படுத்தப்பட்டு, முறையாகச் சுத்தம் செய்யப்பட்டால், இது வரப்பிரசாத ஊர்தி; இல்லாவிட்டால், இதுவே வியாதிகள் பரப்பும் ஊர்தியாக மாறிப் போகும். நன்கு பராமரிக்கப்படும் நிரந்தர டாய்லெட்டுகளே நிரந்தரத் தீர்வு.

● **இரா.சக்கரபாணி, மதுரை**

? தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே திருமணம் செய்துகொள்ளாமல் இருந்து வருவதாக திருமாவளவன் சொல்கிறாரே?

! அது அவருடைய சொந்த விருப்பத்தின் பேரிலான முடிவு. ஆனால், திருமணம் செய்துகொண்ட பிறகும், எடுத்த காரியத்தையும் பிடித்த இலட்சியத்தையும் விடாமல் தொடர்பவர்கள் உண்டு.

● **எஸ்.ராமசாமி, வடக்குநயினார்பாளையம்**

? செம்மொழி தமிழ் ஆய்வு மையத்துக்கு, தம் சொந்த பணத்திலிருந்து ஒரு கோடி ரூபாய் தந்துள்ளாரே கலைஞர். அவருடைய அக்கறையும் பங்களிப்பும் பாராட்டுக்குரியவைதானே?

! அவருடைய தமிழ்ப் பற்றுக்கு ஒரு கோடி வாழ்த்துகள். அவர் ஆர்வத்துக்கு ஏற்ப ஆய்வு மையம், அர்த்தமுள்ள பணியாற்றினால் சரி.

● **டி.முருகேசன், திருவாரூர்**

? 'பொருளாதார வளர்ச்சியின்போது விலை உயர்வு போன்ற சிறு சறுக்கல் ஏற்படத்தான் செய்யும்' என்கிறாரே மத்திய அமைச்சர் இளங்கோவன்?

! சறுக்கியதில் விழுந்து, எலும்பு முறிந்து, கட்டுப் போட்டுக்கிட்டுப் படுத்த படுக்கையாய்க் கிடக்கிறது இந்தியப் பொருளாதாரம். சிறு சறுக்கலாவது! பதவி சுகம் அனுபவிக்கிறவங்களால உணர முடியாது சாமானியன் தவிப்பை!

● **ஜே.வி.ஜே.கண்ணன், திருச்சி**

? 'சீன ராணுவம் நவீன மயமாகி வருவதால், இந்தியா எச்சரிக்கையாக இருக்க வேண்டும்' என்று நமது ராணுவ தலைமை தளபதி தீபக் கபூர் கூறியுள்ளது குறித்து...?

! அக்கர லட்சம் பெறும் எச்சரிக்கை வாக்கியம். இந்திய மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி!

❒ ரூ. 100 பரிசு பெறுபவர்: **என்.கோதண்டராமன், மதுராந்தகம்**
✱ ரூ. 50 பரிசு பெறுபவர்: **கி. துரைசாமி, மங்கலப்பட்டி**

உடை அழகு... நடை அழகு... தூக்கம்

உடலுக்குத் தேவையானது போஷாக்கான ஆகாரம் மாத்திரமல்ல, உடற்பயிற்சியுடன் நல்ல தூக்கமும்தான். உப்பலான முகம், கருவளையம், சோகை, சிவப்பான கண்கள், வெளுத்த உடல்... இவையெல்லாமே போதுமான அளவில் தூக்கமின்மையைக் குறிப்பிடும் அடையாளங்கள்! எந்த மேக்கப்பும் ஃபேஷியலும், க்ரீமும் தராத ஒரு ஜொலிப்பை உறக்கம் தந்துவிடும்.

சரியான தூக்கம் இல்லாத நபர்கள் நாள் முழுக்க ஒருவித எரிச்சலுடன் 'வள்வள்' என்று விழுந்துகொண்டிருப்பார்கள். அது மட்டுமல்ல, சருமமும் பொலிவிழந்து



போய்விடும். ஸ்ட்ரெஸ் இல்லாமல் இருந்தாலே உறக்கம் கண்களைத் தழுவும். ஒரு மனிதன் உறங்கும்போது அவன் மூளை ஓர் ஆர்கனைஸராக, நரம்பு மண்டலம் நினைவாற்றல், திசுக்களைப் புதுப்பித்து மற்றும் மராமத்துப் பண்ணுகிறதாம்.

மூளைக்கு ஒரு 'ஜே' போட்டுவிட்டு எப்படி நன்றாக உறங்குவது (ஆஃபிஸில் அல்ல) எனப் பார்ப்போமா?

★ படுக்கைக்குச் செல்வதற்கு முன்னால், ஏகமாக வயிறு நிறைய சாப்பிட்டு விட்டுப் போகாதீர்கள். லைட்டான டின்னர் முக்கியம். சாப்பிட்ட இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு உறங்கப் போகவும். அதற்கு முன் மீண்டும் பசி எடுத்தால் பால் அல்லது பழம் சாப்பிடவும்.

★ தினமும் உடற்பயிற்சி செய்யவும். 20 நிமிட ஸ்லோ வாக்கிங்கூட போதுமானது. ஸ்ட்ரெஸ் ஹார்மோன்கள் தொந்தரவு செய்யாது.

★ பெட்ரூமில் இரைச்சல் சப்தம் இருக்கக் கூடாது. 'கடாமுடா' என்ற சப்தம் போடும் மின்விசிறியை உடனே சரி செய்யவும்.

★ சரியான டெம்ப்ரேச்சரில் பெட்ரூம்

இருப்பது அவசியம். மிக உஷ்ணம்... ஏ.ஸியை ஹைபாயிண்டில் வைத்து ஒரே குளிர் மயம்... இரண்டுமே கெடுதல்!

★ படுத்துக்கொண்டே படிப்பது, டீ.வி. பார்ப்பது எதுவுமே கூடாது.

★ ஆபீஸ் வேலையை நினைத்துக் கொண்டே படுக்கச் செல்லக்கூடாது.

★ படுக்கச் செல்வதற்கு நான்கு மணி நேரம் முன்பே டீ, காபி, சாக்லேட், கோக் மாற்றிக்கொண்டே இருக்கக் கூடாது.

★ படுக்கையில் படுத்துக்கொண்டே சூடான வாக்குவாதம், சண்டையைத் தவிர்க்கவும்.

★ மெத்தை, தலையணை சரியாக உள்ளனவா எனப் பார்க்கவும். மெத்தை களினால் கழுத்து வலி, முதுகு வலிதான் வரும்; தூக்கம் வராது!

★ இயற்கையின் சப்தங்கள் உறக்கத்

- ஒரு டானிக்!

போன்றவற்றைத் தவிர்ப்பது நல்லது!

★ செல்லப் பிராணிகளை உங்கள் படுக்கையில் படுக்க அனுமதிக்காதீர்கள்.

★ ஒவ்வொரு நாளும் ஒரே நேரத்தில் தான் உறங்கச் செல்ல வேண்டும். கிரிக்கெட், சினிமா, சீரியல் என டயத்தை துக்கு நல்லதாம். சலசலத்து ஓடும் நதி, பறவைகளின் ரீங்காரம், நீர்வீழ்ச்சியின் ஓசை... இவை உறக்கத்துக்குத் துணை.

தூக்கமும் கண்களை தழுவட்டுமே... ஹேப்பி ஸ்லீப்பிங்!

- லதா சேகர்

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையின் தாக்குதல் என்பது வாடிக்கையான நிகழ்வாகிவிட்டது. கடலோர கிராம மீனவர்களின் வாழ்வாதார பிரச்னைகளை முன்னிறுத்தி, மத்திய - மாநில அரசுகளின் கவனத்தை ஈர்க்கும் விதமாக, கடலோர கிராமங்களின் வழியே, மீனவர்கள் வாழ்வுரிமை விழிப்புணர்வு பயணத்தை நடத்தி முடித்திருக்கிறது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி.



★ ராமகிருஷ்ணன்

நடுவே அவர்கள் சந்திக்கும் இடையூறுகளையும் கேட்டறிந்து திரும்பியுள்ளது பயணக் குழு.


● அவர்கள் பயணம் மேற்கொண்ட (வேதாரண்யம் கோடியகரை முதல் இராமேஸ்வரம்) கடல் பகுதிக்கு 'பாக் ஜலசந்தி' என்று பெயர்.

சோக வலையில்

● பயணத்தை வழிநடத்தியவர்கள் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன், இணை மாநிலச் செயலாளர் சி.மகேந்திரன்.

● நாகை மாவட்டம், பழையாறு சிங்காரவேலர் துறைமுகத்திலிருந்து துவங்கிய பயணம், பழையாறு, முத்துப்பேட்டை, மல்லிப்பட்டிணம், மீமிசல், பெரிய பட்டிணம் வழியாக இராமேஸ்வரம் வரை சென்று வந்துள்ளது.

★ சி.மகேந்திரன்



● இருநூற்றி எழுபது கி.மீ. கொண்ட இப்பயணத்தில் இருநூறு மீனவக் கிராமங்கள்; சுமார் நான்கு லட்சம் மீனவர்கள்; அவர்களது பிரச்னைகளையும், கடல்

இந்தக் கடல் பகுதிக்கு பாக். ஜலசந்தி என்று ஏன் பெயர் வந்தது? காரணம் சற்று சுவாரஸ்யமானது.

● கி.பி. 1755 முதல் கி.பி. 1763 வரை பிரிட்டிஷ் இந்தியக் கம்பெனியில் கவர்னராகப் பொறுப்பேற்றிருந்தவர் ராபர்ட் பாக். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஓர் ஆதிக்க அங்கமாக இயங்கிய அவர், தம் பெயரையே இந்தக் கடல் பகுதிக்கு வைத்துவிட்டார்.

● பாக் எனப்படும் வளைகுடா கடல் பகுதியின் வடப் பக்கம் தமிழகக் கடலோரக் கிராமங்கள்; தென் பக்கம் இலங்கை கடலோரக் கிராமங்கள். இதன் நடுவே இருநூற்றைம்பது ஏக்கர் பரப்பளவு கொண்ட கச்சத் தீவு.

● "எங்களால் கடலுக்குள் சுதந்திரமாகச் சென்று, மீன் பிடித்து வர முடிய

அந்தோணியார் திருவிழாவுக்கு வந்த ஆபத்து!

"1974ல் இந்திரா காந்தியும் - பண்டாரநாயகாவும் நல்லெண்ண அடிப்படையில், இரு நாடுகளும் உபயோகித்துக்கொள்ளும் வகையில் கச்சத்தீவு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். கச்சத்தீவில் வலைவிரித்துக் காய வைக்கவும், அங்கிருக்கும் அந்தோணியார் கோயிலில் திருவிழா நடத்தவும், தற்போதும் தமிழக மீனவர்களுக்கு முழு உரிமை உள்ளது. ஆனால், உள்நாட்டுப் பிரச்னைகளைக் காரணம் காட்டி, கச்சத்தீவினை முழுமையாக ஆக்ரமித்துக்கொண்டது இலங்கை அரசு. தமிழக மீனவர்களுக்கு இது ஒரு பேரிழப்பு!" எனக் கூறுகிறார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் சி.மகேந்திரன்.

மீனவர்கள்!

வில்லை. இந்தியக் கடல் பகுதிக்குள் இலங்கை கடற்படையினர் அத்துமீறி நுழைந்து, மீனவர்களை அச்சுறுத்துகின்றனர். நாங்கள் பிடித்து வைத்துள்ள மீன்களை, எங்களிடமிருந்து பறித்துப் போகின்றனர். நியாயம் பேசினால் தாக்குகின்றனர். அவர்களின் தாக்குதலுக்கு நானே பல முறை ஆட்பட்டிருக்கிறேன்!'' என்கிறார் புதுக்குடி மீனவர் ராமகிருஷ்ணன்.



✱ நாராயணி

● ''எங்க வீட்டாளுங்க எப்ப கடலுக்குப் போனாலும், அவங்க திரும்பி வர்ற வரைக்கும் பொம்பளைங்க வயித்துல நெருப்பைக் கட்டிட்டு இருப்போம். உயிரோட பார்த்ததுக்கு அப்புறம்தான் அந்த நெருப்பு அணையும். இலங்கை படைக்காரங்க மீனவர்களைச் சுட்டுத் தள்ளிடறாங்க. அவங்க உடலை கடல்ல வீசி எறிஞ்சுடுவாங்களாம். இது எவ்வளவு பெரிய கொடுமை?'' எனக் கேட்கிறார் நாராயணி.



✱ அய்யனார்

● ''இலங்கை கடற்படையினரிடமிருந்து தமிழக மீனவர்கள் தங்களைக் காத்துக் கொள்வதற்காக, முறைப்படி உரிமம் பெற்று துப்பாக்கி வைத்துக்கொள்ளும் வசதியினை இந்த அரசாங்கம் செய்து தர வேண்டும்!'' என கோரிக்கை விடுத்துள்ளார் தா.பாண்டியன்.



✱ தா.பாண்டியன்

★ ''எங்களுக்கு எல்லா பக்கமும் தொல்லைங்க. கடல்ல குறிப்பிட்ட தூரத்துக்குப் போனாத்தான் மீனுங்க கெடைக்கும். இலங்கை கடற்படை, தமிழக மீனவர்களைச் சந்தேகக் கண் கொண்டு துரத்தி அடிக்குது. அன்னிய மீன்பிடிக் கப்பல்கள் இந்தப் பகுதிக்குள் வந்து, மீன் வளர்ப்பு ஆதாரங்களையும், அதிக அளவு மீன்களையும் அள்ளிச் சென்று விடுகின்றன. கச்சத்தீவு அருகில் எங்களால் நெருங்கிப் போகவே முடியவில்லை!'' என்கிறார் அய்யனார்.

● ''இலங்கையில் நெருக்கடியான இனப் பிரச்னை எனில், அதனை முடிவுக்குக் கொண்டு வர வேண்டிய முக்கிய பொறுப்பு, இலங்கை அரசுக்கும் சர்வதேச சமுதாயத்துக்கும் இருக்கிறது. உள்நாட்டுப் பிரச்னையைக் காட்டி, நடுக்கடலில் அப்பாவித் தமிழக மீனவர்களை அநியாயமாக ஏன் சுட்டுக் கொல்ல வேண்டும்?'' என்கிறார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன்.

செய்தி, சித்திரம் : ஸ்ரீரங்கம் திருநாவு





ஒரு ஷாக் ரிப்போர்ட்

'ஆணுக்குப் பெண் சரி நிகர் சமானம்!'னு பெண்கள் எல்லாம் போர்க்கொடி பிடிச்சாலும், பெண்களுக்கு உடல்ரீதியா இருக்கிற பிரச்னைகளைச் சமாளிக்கிற விஷயத்திலேதான் பெண்கள் அதிகமா போராட வேண்டியிருக்கு!'' என்கிறார் டாக்டர் சித்ரா சுந்தரராஜன்.

''பெண்களோட கவனக்குறைவால சில சின்னச்சின்ன உடற்கோளாறுகள்கூட பின்னால பெரிய நோயா மாறிடுது!

உதாரணமா, மார்பகங்களில் உபரியா திசுக்கள் வளர்ந்து, கட்டிகளாக மாறும் போது, அதைச் சரிவர கவனிக்காம விட்டுட்டா, அதுவே பின்னால மார்பகப் புற்றுநோயா வளர்ந்து ஆபத்தா முடியுது.



▶ டாக்டர் சித்ரா சுந்தரராஜன்



இதற்கான அறிகுறிகளை அறிய சுய பரிசோதனை முறை இருக்கு. அதை டாக்டர்கிட்டே கேட்டுத் தெரிஞ்சுக்கணும். ஏதேனும் வித்தியாசமா உணர்ந்தா உடனே மருத்துவரை அணுகணும்.

இதேபோல பெண்களைப் பாடாய்ப் படுத்தும் இன்னோர் அபாயம் என்னன்னா, 'எண்டோமெட்ரியம்'னு சொல்லக்கூடிய கர்ப்பப் பை தசையில் தங்கும் 'சாக்லேட் சிஸ்ட்'.

மூன்று வகை தசைப் பிரிவுகளாக இருக்கும் கர்ப்பப்பையில், அடிப்பகுதியில் இருக்கிற 'எண்டோமெட்ரியம்' பகுதி வெல்வெட் போன்ற ஒரு தசை. இந்தத் தசையமைப்புதான் கரு வளர்வதற்கான சூழலை ஏற்படுத்துகிறது.

சிலருக்கு கர்ப்பப் பையில் சாக்லேட் சிஸ்ட்கள் உருவாகிறபோது, இந்த 'எண்டோமெட்ரியம்' வெளியே வந்து சினைப் பை முதலானவற்றிலும் வளர ஆரம்பிச்சு, அதிகமா இரத்தப் போக்கை உண்டாக்குது. இதன் விளைவா, பெண்களுக்கு அடிவயிற்றில் தாங்கமுடியாத வலி, தாம்பத்திய உறவின்போது வயிற்று வலி, கரு தரிப்பதில் தாமதம்னு சிக்கல்கள் வருது.

தொடர்ந்து வலி தாங்க முடியாத காரணத்தினால், கர்ப்பப் பையை நீக்க வேண்டிய கட்டாயத்துக்குச் சில பெண்கள் தயாராகறாங்க'' என்று இதன் விபரீதத்தை விளக்குகிறார் டாக்டர் சித்ரா.

'சாக்லேட் சிஸ்ட்' என்பது ஒரு விதத்திலே சர்க்கரை வியாதி மாதிரிதான்! இதை கட்டுக்குள் வைச்சிருக்கத்தான் முடியுமே தவிர, முழுதும் குணப்படுத்த முடியாது.

குழந்தையின்மைன்னு வரக்கூடிய பெண்களில், இருபது சதவிகிதம் பேர், இந்தப்

பிரச்னையால பாதிக்கப்பட்டிருப்பதைப் பார்க்க முடியுது. தீவிரமான வலி இருக்கறவங்களுக்கு மட்டுமே ட்ரீட்மென்ட் தரமுடியும். லேப்ரோஸ்கோப்பி சிகிச்சை மூலமா, இந்த சாக்லேட் சிஸ்ட் கட்டிகளை அகற்றலாம்.

பெண்களுக்கு மெனோபாஸ் வயது வரும்போது இந்த நோய் தானாகவே நீங்கிடும் என்றாலும், இளம்பெண்களும், திருமணமான பெண்களும் இந்த 'சாக்லேட் சிஸ்ட்'னால படுற அவதியைச் சொல்லணும்னா, 'வலி சுமந்த வாழ்க்கை என்ன ஒரு சாபக்கேடு' என்றுதான் எண்ணத் தோன்றும்.

அதனால இந்த நோயை வளரவிடாம, வலியும் தொந்தரவும் அதிகமா இருக்குன்னு தெரிஞ்சா, உடனே தகுந்த மருத்துவரை நாடறதுதான் நல்லது!'' என்கிறார் டாக்டர் சித்ரா.

பெயர் என்னவோ இனிப்பாகத் தோன்றினாலும், இந்த சாக்லேட் சிஸ்ட்க்குப் பின்னால் இப்படியா ஒரு ஷாக்கிங் ட்விஸ்ட்!

- எம்.ஆர்.ஆர்.





பெண்களைப் படுத்தும் 'சாக்லேட்'

சோறாப் படியளக்கும்

இன்றைய காலகட்டத்தில் கிராமம் தான் பண்பாட்டின் இருப்பிடமாகத் திகழ் கிறது. கிராமத்தவர்களிடம் சுயநலம் கிடையாது. அப்படியே இருந்தாலும், அது அடுத்தவர்களைக் கெடுக்கிற நோக்கத்தில் இருக்காது. படித்தவர்களைக் காட்டிலும், படிக்காத பாமர மக்கள் குற்றங்கள் செய்வதில்லை. ஒரு மூட்டை நெல்லில், நாலு ஐந்து பதர்கள் இருக்கத்தான் செய்யும். அது முக்கியமில்லை. மொத்த ஜனங்களும் எப்படி இருக்கிறார்கள் என்பதைத்தான் பார்க்க வேண்டும்.

யார் எப்படியிருந்தால் நமக்கென்ன என்று, பக்கத்து வீட்டில் உள்ளவர்களைக் கூட அறிந்து வைத்திருக்காத விட்டேத் தியான மனம், நகரம் சார்ந்தது. ஆனால், கிராமங்களில் அப்படியில்லை. நாலு வீடுகள் தள்ளி இருப்பவனின் நடமாட் டத்தையும் இன்ப-துன்பங்களையும் அறிந்து வைத்திருப்பார்கள்.

சூதுவாது தெரியாது. அவர்களுக்குள் சண்டை ஒரு மடங்கு வந்தால், சமாதானம் நான்கு மடங்கு வந்து சேரும். ஒரே ஒரு குறை என்னவென்றால், சாதிப் பாகு பாடு தவிர்க்க முடியாமல் இருக்கிறது. எதையும் அறிவுபூர்வமாக அணுகாமல் உணர்வுபூர்வமாக அணுகுகிறார்கள். அத னால்தான் அந்த உணர்வைத் தூண்டிவிட் டுப் பல பேர் குளிர்காய்கிறார்கள்.

படித்தவர்களைப் போல, உழைப்பின் பயனை முன்பே கணக்கிட்டு உழைக்கத் தெரியாது. மண்ணை நம்பி வாழும் அவர்கள், உழைப்பின் பயன் பொய்த் தாலும் மீண்டும் அதையே நம்பி வாழ் பவர்கள். நகரத்தில் பிச்சைக்காரன் ஒரு மணி நேரம் 'அம்மா தாயே' என்று கத்தினாலும், ஒரு ரூபாய் இடுவதற்கு நாதியில்லை. நெற்களஞ்சியம் எனப்படும் சோழ நாட்டின் சோறு படைக்கும் கொடைக் குணத்துக்கு அருமையான பாடலொன்று உண்டு.

'காசுப் படியளந்தா
கையிரண்டும் நோகுமின்னு!
நெல்லாப் படியளந்தா
நெடுநேரம் ஆகுமின்னு!
அரிசியாப் படியளந்தா
ஆக்க நேரம் ஆகுமின்னு!
சோறாப் படியளக்கும்
சோழநாடு எங்க ஊரு!'



நகரத்தில் யார் வீட்டுக்குப் போனாலும், முதலில் 'நாய்கள் ஜாக் கிரதை' பலகைதான் மிரட்டுகிறது. கிராமங்களில், தாங்கள் வளர்க்கும் ஆடு மாடுகளை, கோழிகளை நரி வந்து கடித்துவிடக்கூடாது என்று நாய் வளர்ப்பார்கள். இன்னமும் பல கிராமங்களில் வீடுகளுக் குக் கதவோ, பூட்டோ இல்லை. ஒரு புறம் வறுமைதான்

புஷ்பவனம் குப்புசாமி

சாழிகாரு!

மனசெல்லாம் மண்வாசம் - 15

அதற்குக் காரணம் என்றாலும், இன்னொருவர் வீட்டில் திருடமாட்டார்கள். அவர்களுடைய பிரச்னைகளை அவர்களே பேசித் தீர்த்துக் கொள்வார்கள்.

கடவுளுக்குப் பயப்படுவதாலேயே கிராமங்களில் பக்தி நிறைந்திருக்கிறது. பயம் மட்டுமல்லாமல், 'அவன் நம்மைக் காப்பான்' எனும் நம்பிக்கையும் மிகுந்திருக்கிறது. பக்தியை அறிவியல் பூர்வமாகவே பார்க்க வேண்டும்.

நாம் சுவாசிக்கும் உயிர்க்காற்றை அதிகம் தருவது மரம் என்பதால், வேப்ப மரத்தை மாரியம்மனாக வழிபடுகிறோம். மூலிகைகளில் சிறந்ததும் குளிர்ச்சி தருவதும் வேம்புதான். மஞ்சளும் குங்குமமும் கிருமி நாசினி, தொற்று நோய்களைத் தடுக்க வல்லவை. எலுமிச்சை சாறு கலந்த மஞ்சள் கலவைதான் குங்குமம். அலகு குத்துதல் என்பது முதுகிலும் நாக்கிலும் வேல் குத்திக்கொள்வது மட்டுமல்ல. அணிகலன் என்னும் பெயரில் அழகுக்காகக் காதுகுத்துதல், மூக்குக் குத்துதல்கூட அலகு குத்துதல்தான். ஒரு வகையில் இது அக்குப் பஞ்சர் வைத்தியம். மாதம் இருமுறை விரதமிருப்பதும், வேர்க்க வேர்க்க மலையேறி வழிபடுவதும், உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கான உபாயங்கள்.

எழுத்தாக்கம் : **சிவன்**

(அடுத்த இதழில் முடியும்)

அனிதா குப்புசாமி



தடாலடி அழகிரி...

தினகரன் பத்திரிகைக்கு, தி.மு.க.வினர் செய்திகளோ, விளம்பரங்களோ கொடுக்கக் கூடாதென்று முரசொலியில் கட்டம்கட்டிச் சொன்ன பிறகு, தினகரனில் ஜெயலலிதா, விஜயகாந்த், ராமதாஸ் அறிக்கைகள் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுப் போடப்படுகின்றன. குறிப்பாக, அரசு கேபிள் பற்றியும், மதுரை ஏரியாக்கள் அரசு விநியோக மையத்திலிருந்து விடுபட்டிருப்பது குறித்தும், ஜெ.யின் விரிவான அறிக்கைகளை வெளியிட்டது தினகரன். இது தி.மு.க. தலைமைக்குக் கசப்பு மாத்திரைதான். தயாநிதி மாறனே அன்றாடம் தினகரன் அலுவலகத்துக்கு வந்து, செய்திகளையும் அறிக்கைகளையும் பார்த்து ஓ.கே சொல்கிறாராம்.

மாறன் சகோதரர்களின் சித்தியும் கருணாநிதியின் மகளுமான செல்வி மற்றும் அவரது கணவர் முரசொலி செல்வம் இருவரும் மேற்கொண்ட சமரச முயற்சிகள், ஒரு கட்டத்துக்கு மேல் தொடராமல் அப்படியே நிற்பதாகத் தெரிகிறது!

''மதுரைப் பக்கம்தான் செல்வாக்கு என்று பேசும் நிலையை மாற்றி, தமிழகமெங்கும் தமக்குச் செல்வாக்கு உண்டு என்று நிரூபிக்கும் வண்ணம் அண்ணன் இனி எல்லா இடங்களுக்கும் செல்லப் போகிறார்'' என்கிறார் ஒரு மதுரை உடன்பிறப்பு. இதை நிரூபிக்கும் வகையில், இடைநீக்கம் செய்யப்பட்ட மூன்று அரசாங்க செய்தித்துறை அதிகாரிகள் மீண்டும் மதுரையில் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். தற்போது, சென்னையில் நடக்கும் நிகழ்ச்சிகளில் அழகிரியை அடிக்கடி காண முடிகிறது. 'அவரது அடுத்த குறி கட்சியில் துணைப் பொதுச்செயலாளர் பதவிதான்' என்கிறார்கள் மதுரை உடன்பிறப்புகள்.

'வரும் செப்டம்பர் மாதத்துக்குள் தமக்குக் கட்சிப் பொறுப்பு வழங்கப்பட வேண்டும்' என்பது அவரது ஆசையாக இருக்கிறதாம்.

அரசு கேபிள் கார்ப்பரேஷன் விநியோக மையம், மதுரையில் அமைக்கப்படாமல் நெல்லையில் அமைக்கப் படுகிறது. 'குமரி உட்பட தென் மாவட்டங்களை, கவர் செய்வதற்காகவே அப்படி அமைக்கப்படுகிறது என்கிறது அரசு. ஆனால், 'மதுரை பகுதியை, தொடர்ந்து ராயல் கேபிள் விஷனின் ஆதிக்கத்தில் வைத்திருக்கவே இந்த

ஏற்பாடு' என்று குற்றம் சாட்டுகிறார் ஜெ. தற்போது 'D. டி.வி' என்று உள்ளூர் தொலைக்காட்சியைத் துவங்கியிருக்கிறார் அழகிரி. தினகரன் போலவே தினப் பத்திரிகை துவங்கும் எண்ணமும் அழகிரிக்கு இருக்கிறதாம். மதுரை பகுதியில் தாங்கள் சகல வழிகளிலும் முடக்கப்படுவதை உணர்கிறார்கள் மாறன் சகோதரர்கள். இந்த கேபிள் பிரச்னையில், அழகிரி கேபிள் நிறுவனம், சன் தொலைக்காட்சியைக் காட்ட முடியவில்லை. அதே சமயம் எஸ்.சி.வி.யும் அழுத்தமாகச் செயல்பட முடியவில்லை. இந்த நிலையில், சன் டிஷ் ஆன்டனாவுக்கு மதுரையில் செமை கிராக்கியாம். இதன் விநியோகஸ்தர்களை வழக்கம்போல மிரட்டும் வேலை நடக்கிறதாம்.



தடுமாறும் தயாநிதி!



* ஜெயலலிதா



* விஜயகாந்த்

தயாநிதியின் மிகப் பெரிய கவலை, மீண்டும் மத்திய சென்னை தொகுதியில் போட்டியிட வாய்ப்புக் கிடைக்குமா என்பதுதான். தி.மு.க. சார்பில் தமது மகள் கயல் விழிக்கு அந்த இடத்தைப் பெற்றுத் தருவதில், அழகிரி குறியாய் இருக்கிறார் என்கிறார்கள். இந்த நிலையில், வேறு கட்சிகளின் சார்பில் மத்திய சென்னையில் போட்டியிடும் எண்ணத்தையும் தயாநிதி பரிசீலிக்கிறாராம். ஜெயலலிதாவுடன், அவர் தொடர்பில் இருக்கிறார் என்று தி.மு.க.வினர் நம்புகிறார்கள். விஜயகாந்த்தோடு நெருக்கத்தையும் வளர்த்துக் கொண்டிருக்கிறாராம் தயாநிதி. சரத்குமார், தயாநிதிக்கு மிகவும் நெருக்கம். பாராளுமன்றத் தேர்தல் நெருங்கி வருவதற்கான சூழல் பிரகாசமாக உள்ள நிலையில், பல அதிரடியான திருப்பங்கள் தமிழக அரசியலில் நிகழ வாய்ப்பிருக்கிறது.

– கௌசி



* ஆறுமுகம்



* பகவதி



* பண்ணையூர் பாட்டி

ச்ச்சப்புக்கொட்ட வைக்கும் சந்தையடி!

கன்னியாகுமரிக்கு அருகில் இருக்கிறது சந்தையடி கிராமம். இவ்வூரின் மொத்த மக்கள்தொகை ஆயிரத்துக்கும் சற்று அதிகம். சந்தையடியைச் சார்ந்த அத்தனை ஆண்களும் சமையல் கலைஞர்கள்! ''நெல்லை, தூத்துக்குடி பகுதிகளில் நடைபெறும் திருமணம், இல்ல விழாக்களில் மட்டுமல்ல, கேரளா வரை எங்கள் சந்தையடி சமையல் கலைஞர்களின் கொடியே உயரப் பறக்கிறது'' என்கிறார் பாலகிருஷ்ணன்.

அத்தனை பேரும் எப்படிச் சமையற் தொழிலிலேயே ஈடுபடுகின்றனர் என்று கேட்டால், பதில் சொல்கின்றனர் பகவதி நாடாரும், ஆறுமுக நாடாரும் : ''எங்கள் முன்னோர்களில் பலர், சமையலைப் பிரதான தொழிலாகவும், சமையல் பணி இல்லாத காலங்களில் விவசாயப் பணிகளையும் செய்தார்கள். சமையல் பணிக்குச் செல்லும்போது, உதவி செய்வதற்கு எங்கள் ஊரைச் சேர்ந்தவர்களையே அழைத்துச் சென்றார்கள். தப்பித்தவறிகூட வெளியூரைச் சார்ந்த எவரையும் அழைத்துச் செல்லமாட்டார்கள். அந்தக் காலத்தில் சிறுவர்களாக இருந்த நாங்களும், அப்படித்தான் சமையலைக் கற்றுக்கொண்டோம்.

எங்களிடம் உதவி சமையல் பணி செய்த நூறுக்கும் அதிகமான பேர், இன்று தனித்த தலைமைச் சமையல் தகுதி பெற்றவர்களாய் இருக்கின்றனர். அவர்களோடு இளைய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், சமையல் பணியில் உதவியாளர்களாகத் தொடர்கின்றனர். எங்கள் ஊரில் ஐம்பதுக்கும் அதிகமான பட்டதாரி இளைஞர்கள் அரசுப் பணிகளில் இருக்கின்றனர். இவர்களும், விடுமுறை தினங்களில் சமையல் பணி இருந்தால், உதவிக்கு வந்துவிடுவார்கள். சந்தையடி ஆண்கள், சமையல் பணியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது, எங்கள் ஊரைப் பொருத்தமட்டில் எழுதப்படாத சட்டம்'' என்கிறார்கள்.

''**அ**சைவம், சைவம் இரண்டிலும் எங்கள் ஊர் சமையல் குழுவினர் தலைசிறந்தவர்கள்'' என்கிறார் செல்லத்துரை. பிரியாணி தயாரிக்கும் பணிக்கிடையே நம் கேள்விகளுக்குப் பதிலும் சொன்னார். ''எத்தனை வேளை, என்னென்ன வகைகள், அதற்குத் தேவையான பணியாளர்களின் எண்ணிக்கை அடிப்படையில்தான், கட்டணங்களை வசூலிக்கிறோம்'' என்றார். அங்கிருந்த இவரின் துணைவியார் டெய்சியிடம், ''உங்கள் கணவர் உங்களுக்குச் சமைத்துத் தந்திருக்கிறாரா?'' என்று



* சந்தையடி சமையல்...



* டெய்சி



* பாலகிருஷ்ணன்



* செல்லத்துரை

கேட்டால், ''இவரின் சமையலைப் பல பேர் பாராட்டுவதைக் கேட்டிருக்கிறேன். ஆனால், வீட்டுல நான்தான் சமைப்பேன்; என் சமையலை வெகுவாகப் பாராட்டுவார்'' என்கிறார்.

சந்தையடிக்குத் திருமணமாகி வந்த பெண்களில், பண்ணையூர் பாட்டிதான் இன்று வயதில் மூத்தவர். அவரிடம் பேசியபோது, ''பண்ணையூரிலிருந்து, சந்தையடிக்குத் திருமணமாகிப் போகப் போகிறேன் என்றதும், அன்றைக்கே என் வயதுப் பெண்கள் என்னைக் கேலி செய்தார்கள். 'கொடுத்து வைத்தவள். நீ சமையல் செய்யாவிட்டாலும், உன் வீட்டுக்காரர் ருசியான சாப்பாட்டைச் சமைத்துத் தருவார்' என்று சொன்னது, இன்றும் என் காதுகளில் கேட்பது போலவே இருக்கிறது'' என்கிறார்.

இளைய தலைமுறை சமையல் கலைஞர் மணிகண்டன் என்ற சிவா, ''சந்தையடி சமையல் குழுவினரின் சமையலைச் சாப்பிடும் எவரும், இன்னும் அதிகம் தரமாட்டார்களா என மனத்தில் ஏங்குவார்கள். எங்கள் சமையலை ஒரு முறை சுவைத்தவர்கள் யாரிடமாவது, 'சந்தையடி' என்று சொல்லிப் பாருங்கள். உடனே சப்புக்கொட்ட ஆரம்பித்து விடுவார்கள்'' என்கிறார்.

செய்திச் சித்திரம் :

த.இ.தாகூர்

நடுநடுங்க வைத்த நடால்

77 கோடி ரகசியம்


சமீபத்தில் விம்பிள்டன் பட்டத்தை வென்ற நடாலுக்கு கால்பந்தா...? டென்னிஸா? என்றொரு இடியாப்பச் சிக்கல் இளம் வயதிலேயே ஏற்பட்டது. ச்சும்மா விளையாட்டாக, இரண்டு விளையாட்டுகளையும் கற்கச் சென்று, இரண்டிலும் அவுட்ஸ்டேண்டிங் ஆக இருந்திருக்கிறார். இன்றுவரைக்கும் நடாலுக்குப் பயிற்சியாளராக இருக்கும் அவரின் மாமா, அச்சமயத்தில் தீர்க்கமான முடிவொன்றை எடுத்தார். 'நடால், ஃபுட்பாலை, தூர எறி; வா டென்னிஸுக்கு.'

இதுவரை விம்பிள்டனில் நடந்த ஆட்டங்களில், 'மிகச் சிறந்த ஒன்று' என்று சமீபத்தில் நடாலுக்கும் ஃபெடரருக்கும் நடந்து முடிந்த ஃபைனலை எல்லோரும் சிலாகிக்கிறார்கள். சமீபத்தில் நடந்த ப்ரெஞ்ச் ஓப்பன் போட்டியில் மீண்டும் நடாலிடம் தோற்றுப்போனார் ஃபெடரர். 'ஆ, இதென்ன ஃபெடரரை விம்பிள்டனில் ஒரு கை பார்க்கச் சொல்லுங்கள்' என்றார்கள், அவரது ரசிகர்கள். கடந்த ஐந்து வருடங்களாக ஃபெடரர்தான் விம்பிள்டன் சாம்பியன். புல்தரை மைதானத்தில் ஃபெடரரை விஞ்ச ஒருவரும் இல்லை என்கிற கூற்றை, தம் கடின உழைப்பாலும் விடாமுயற்சியாலும் மாற்றிக்காட்டி அவரின் சிம்மாசனத்தை, நடுநடுங்க வைத்திருக்கிறார், ஸ்பெயினைச் சேர்ந்த 22 வயது நடால். அன்று அவர் மாமா எடுத்த முடிவால் நடால் இன்றுவரை டென்னிஸில் சம்பாதித்தது 77 கோடிகள்.



சென்ற வருடம் சென்னை ஓப்பன் போட்டிக்கு வந்திருந்த நடால், தமது எளிமையான சுபாவத்தின் மூலமாக அனைவரையும் ஆச்சர்யப்படுத்தினார். அதற்கு முன்பு சென்னை ஓப்பனில் ஆட சந்தர்ப்பம் அமையாதபோது, அதற்கு மாற்றாக, முதல்வர் நிவாரண நிதிக்கு பத்து லட்ச ரூபாயை வழங்கினார். இன்றைக்கு ஸ்பெயினில் தம் பெற்றோர்களுடன் வசித்து வரும் நடால், டென்னிஸில் புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறார். டென்னிஸில் சமீபகாலமாக சம பலமுள்ள இரு வீரர்கள் இருந்தது கிடையாது. இப்போது நடாலும் ஃபெடரரும் அந்தப் பாக்கியத்தை டென்னிஸ் ரசிகர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள்.

– ச.ந.


வாழ்த்துகள்

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.